# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28 4

சுடர் 32 | கதிர் 40 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 21, வியாழக்கிழமை 05.01.2017


## கருத்தறியும் அறிக்கையின் பரிந்துரைகளின் சுருக்கம்

- நிவாரணத்தையோ, பரிகாரத்தையோ வழங்கத் தவறிய கடந்த கால முயற்சி தொடர்பில் நாடு முழுவதும் மக்கள் விரக்தி, கசப்பை வெளிப்படுத்தினர்.
- பொறுப்புடைமைக்கான பொறிமுறையில் பன்னாட்டுப் பங்களிப்பை, பாதுகாப்புப்படையினர் முற்றிலுமாக எதிர்த்தனர்.
- போரின்போது கொத்துக் குண்டு உள்ளிட்ட சட்ட விரோத ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை, பாலியல் வன்புணர்வைப்போர் ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை, எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.
- இனப் பிளவுகள் மற்றும் மதசகிப்புத்தன்மை இன்மை என்பவை பரவுவதைத் தடுப்பதற்கு அரசு சந்தேகத்துக்கு இடமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- அரசு மதச் சார்பற்றதாக அமையவேண்டும்.
- தண்டனையிலிருந்து தப்புதல் தொடர்கின்றது. இது நல்லிணக்கத்துக்குப் பிரதான முட்டுக்கட்டை.
- இராணுவக் குறைப்பு, இராணுவ மய நீக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- முரண்பாட்டைத் தீர்க்க அரசியல் தீர்வும், அரசமைப்பும் முக்கியம்.
- இலங்கைச் சட்டத்தினுள் காணாமற்போதல்கள் குற்றம் போன்ற பன்னாட்டுக் குற்றங்களைக் குற்றமாக்கல் மற்றும் உள்ளடக்கல் என்பன செய்யப்படவேண்டும்.
- இராணுவ வெற்றிச் சின்னங்கள் பல்வேறு அப்பாவி உயிர்களை இழந்தே பெறப்பட்டன என்ற துன்ப உணர்வை ஏற்படுத்துகின்றது.
- மாவீரர் துயிலும் இல்லங்களைச் சீரமைக்கவும், அவற்றைத் திறந்துவிடவும், அவற்றின் மீது தற்போது அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களையும் அகற்றவேண்டும்.
- உண்மை, நீதி, நல்லிணக்கம், மீள நிகழாமைக்கான ஆணைக்குழு பொதுமன்னிப்பு வழங்குவது, உண்மையைச் சொல்ல முன்வருவோருக்கு ஊக்கியாக இருக்கலாம். இதனைப் பாதிக்கப்பட்டோருடன் கலந்தாலோசித்து வழங்கலாம்.
- போர்க்குற்றம், மானுடத்துக்கு எதிரான குற்றம், சித்திரவதை, காணாமல் ஆக்கப்படல், பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படக் கூடாது.
- நீதிப் பொறிமுறை பன்னாட்டு நீதிபதியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். போரின் போது அல்லது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் புரியப்பட்ட குற்றங்களுக்கானது மாத்திரமாக இருக்கக் கூடாது.

(விரிவு 16-17 ஆம் பக்கங்களில்) (த-5)

## துப்பாக்கியால் அரசைக் கவிழ்க்கவே முடியாது

### அடித்துக் கூறினார் அமரவீர



கொழும்பு, ஜன. 5

துப்பாக்கிகளைப் பயன்படுத்தி, அரசைக் கவிழ்க்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார். கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் என்ற வகையில், தேர்தல் ஆணைக் குழுவைச் சந்தித்தபோது, உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்து >> 25

## நாடு முழுவதும் குளிரான காலநிலை

கொழும்பு, ஜன 5

நாடு முழுவதும் நேற்றுமுதல், குளிர் வானிலை அதிகரிக்கும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. காலைவேளையில் அல்லது இரவு வேளைகளிலேயே குளிரான காலநிலை காணப்படும் என்றும், கிழக்கு, >> 25

## எந்த நாடும் எமக்கு உத்தரவிட முடியாது

### அமைச்சர் சந்திம சீற்றம்

கொழும்பு, ஜன. 5

எல்லா நாடுகளுடனும் இராஜதந்திர ரீதியான நல்ல உறவுகளைப் பேணிக் கொண்டாலும், எந்த நாட்டினது உத்தரவுக்கும் இலங்கை கீழ்ப்பணியாது. இவ்வாறு அமைச்சர் சந்திம வீரக்கொடி >> 25

போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் வேண்டும் என்ற

# செயலணியின் பரிந்துரையை அடியோடு நிராகரித்தது கொழும்பு அரசு

### உள்ளூர் நீதிபதிகள் என்ற முடிவில் மாற்றமில்லை என்கிறார் ராஜித

யாழ்ப்பாணம், ஜனவரி 5

போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று நல்லிணக்கத்திற்கான பொறிமுறை பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் பரிந்துரையை நிராகரித்து உள்ளூர் நீதிபதிகளே விசாரணை செய்வார்கள் என்ற தனது நிலைப்பாட்டை கொழும்பு அரசு மீண்டும் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளது.

செயலணியின் இறுதி அறிக்கை நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது. நேற்று அது பகிரங்கப்படுத்தப்பட்டது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். >> 25




## கருத்தறியும் அறிக்கை காத்திரமான ஆவணம்

### தமிழ் சிவில் சமூகம் கருத்து

கொழும்பு, ஜன. 5

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை காத்திரமான ஆவணம். இலங்கை >> 25

அரசமைப்பை உருவாக்கும்

## வழிநடத்தல் குழு இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 5

வழிநடத்தல் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு எப்போது முன்வைப்பது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக, புதிய >> 25



## ரணில் நாட்டில் இருக்கும்போதே ஆட்சிக் கவிழ்ப்பு

### மகிந்த பதிலடி

கொழும்பு, ஜன. 5

ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றிருக்கும்போது அவரது ஆட்சியைக் கவிழ்க்கப் போவதில்லை. அவர் நாட்டில் >> 25

## கேலி செய்கிறார் அமைச்சர் ராஜித

### நல்லிணக்கச் செயலணியை

யாழ்ப்பாணம், ஜன. 5

பன்னாட்டு நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறைக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைத்துள்ள நல்லிணக்கச் செயலணிக்கு, நாம் சிறப்பு ஞானமு >> 25

## ஜனவரி 25க்கு முன்னர் யாழ். வருவார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜன. 5

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவார் என்று, ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர் ஒருவர் இந்தியன் எக்ஸ்பிறஸ் செய்திச் >> 25

## ரவிராஜ் கொலை வழக்கு: விரைவில் மேன்முறையீடு

கொழும்பு, ஜன. 5

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் சிறப்பு அறங்கூறும் சபை (ஜூரிகள்) முடிவுக்கு அமைய கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, மேன் முறையீடு செய்வது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக, சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்தார்.

இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டதையடுத்து, வழக்கின் பதிவுகளைத் தமக்கு >> 25

## எந்த முடிவாயினும் எம்மைக் கேட்டே எடுப்பது அவசியம்

### வடக்கு கடற்றொழிலாளர் இணையம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 5

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்பட்டவர்க்ள் நாங்கள். படகு விடுவிப்போ அல்லது மீனவர் விவகாரம் தொடர்பில் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், எங்களின் கருத்து >> 25

## வீட்டுக்குள் 25 கிலோ கஞ்சாவை மறைத்து வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 5

வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை நேற்று மீட்டதோடு, அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறையிலிருந்து >> 25

## கோத்தபாயவுக்குப் பயப்படும் மகிந்த

### இப்படிச் சொல்கிறார் ராஜித

யாழ்ப்பாணம், ஜன. 5

அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய தான் தூண்டிவிட்டார். அவர் மீது கொண்ட பயத்தின் காரணத்தினால், கோத்தபாயவுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த >> 25

### வாக்காளரைப் பதிவு செய்யும்

# சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் நீடிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 5

போரினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது வாக்குகளை அளிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை நீடிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2013 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்யும் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தைச் செயற்படுத்தும் காலப் பகுதி 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுக்கமைய இந்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கு மேலும் கால அவகாசம் தேவை என்று இனங்காணப்பட்டுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் காலத்தை மேலும் 4 வருடங்களினால் அதிகரிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச வாக்காளர்களைப் பதிவு செய்யும் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற அனுமதியைப் பெறுவதற்காக இந்தக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்ட ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (த-5)

### எல்லை நிர்ணயக் குழு அறிக்கையில்

# இரண்டு உறுப்பினர்கள் கையெழுத்திடாமை ஏன்?

### விசாரிக்கக் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.5

எல்லைமீள்நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில், ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் கைச்சாத்திடாமல் இருப்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் முதல் அறிக்கையில் சிக்கல்கள் காணப்பட்டதால் குறித்த அறிக்கையை நிராகரித்து, புதிய அறிக்கை உருவாக்கப்பட்டது.

குறித்த புதிய அறிக்கையில், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் கைச்சாத்திடாத காரணத்தால், அதனை அமைச்சர் பைஸர் முஸ்தபா நிராகரித்துள்ளார்.

எனவே குறித்த உறுப்பினர்கள் எதனால் அறிக்கையில் கைச்சாத்திடவில்லையென உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தினார். (தி)

# ரயிலில் குண்டுப் புரளி ஏற்படுத்திய பெண் கைது

கொழும்பு, ஜன.5

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்குப் புறப்படவிருந்த இரவு தபால் ரயிலில் வெடிகுண்டு இருப்பதாக, பொலிஸ் அவசர பிரிவு இலக்கமான 119க்கு அழைப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் பெண்ணை நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்...

குறித்த பெண் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

கடந்த 27 ஆம் திகதி கிடைத்த குண்டுப் புரளித் தகவலையடுத்து, இரு மணித்தியாலயங்கள் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் சோதனைகளின் பின் ரயில் மீண்டும் ...

... தெரிவித்தார். (இ)

# 15,000 ஏக்கரில் வர்த்தக வலயம் மகிந்த அரசே எடுத்த முடிவு

### கூறுகிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், ஜன. 5

அம்பாந்தோட்டையில் சுதந்திர வர்த்தக வலயத்தை 15 ஆயிரம் ஏக்கரில் நிர்மாணிப்பது தொடர்பில் மகிந்த அரசின் காலத்திலேயே தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. மத்தள விமான நிலையமும், அம்பாந்தோட்டைத் துறைமுகமும் அதற்கு அமைவாகவே அங்கு அமைக்கப்பட்டன.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் மூன்று வாரங்களின் பின்னர், அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. மேற்படி விடயத்தை இதன்போது அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசு தொடர்ந்தும் நீடிக்குமானால் தனது உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் அனைவரும் சிறைக்குச் சென்றுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே எம்மால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தேவையற்ற பொய்யான வதந்திகளைப் பரப்பிக்கொண்டு வருகிறார்.

அவர் கூறுவதைப் போன்று எந்தவொரு அரச நிறுவனங்களோ அல்லது காணிகளோ வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்போவதில்லை. இவ்வாறான நடவடிக்கைகளை எமது அரசு இனியும் மேற்கொள்ளாது.

மத்தள விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் நிர்மாணித்தமையை நாம் பிழையென்று கூறவேமாட்டோம். அந்தப் பகுதியில் 15 ஆயிரம் ஏக்கருக்கு சுதந்திர வர்த்தக வலயமொன்றை நிறுவவே நாம் மகிந்த காலத்தில் திட்டமிட்டிருந்தோம். பல்லாயிரக் கணக்கான தொழில் வாய்ப்புக்கள் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படும் என்பதால், இவற்றை நிர்மாணிக்க எதிர்ப்பை வெளியிடவில்லை.

இவற்றை நிர்மாணிக்கும்போது எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை மகிந்த ஏற்றுக்கொள்ளவில்லை. அம்பாந்தோட்டையிலிருந்து 12 கடல்மைல் தூரத்தில் தான் பன்னாட்டுக் கடல் எல்லை காணப்படுகின்றது. அங்கு நாளொன்றுக்கு சுமார் 700 கப்பல்கள் வீதம் பயணிக்கும். இந்தக் கப்பல்கள் எண்ணெய் நிரப்பவேண்டுமெனில், 300 கடல் மைல் தூரத்தில் உள்ள சிங்கப்பூருக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ தான் செல்ல வேண்டும். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் எண்ணெய்க் குதங்களை அமைக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தோம். இதன் மூலம் நாளொன்றுக்குக் குறைந்தது 70 கப்பல்களேனும் எமது துறைமுகத்துக்கு வந்து எண்ணெய் நிரப்பினால் கூட அதிக இலாபத்தை எம்மால் ஈட்டமுடியும்.



மத்தள விமான நிலையம் குறித்தும் நாம் பல்வேறு யோசனைகளை முன்வைத்தோம். இவற்றையும் மகிந்த கேட்டுக்கொள்ளவில்லை. இந்த விமான நிலையத்திலிருந்து வருடத்துக்கு ஒரு கோடி ரூபா மட்டுமே வருமானமாகக் கிடைக்கின்றது. இதனை வழிநடத்துவதற்கு 60 கோடி ரூபாவை வருடத்துக்கு நாம் செலவழிக்கிறோம். இதனால் ஏற்படும் 59 கோடி ரூபா நட்டத்தை யார்தான் அடைப்பது? இது மக்களின் பணம்.

ஒன்றுக்கும் பயனற்றுக் கிடக்கும் இந்த இரண்டு நிறுவனங்களின் நிலைமையையும் மாற்றியமைக்கவேண்டும் என்றே நாம் சீனாவுடன் பேச்சு நடத்தியுள்ளோம். அவர்கள் இங்கு வந்து 15 ஆயிரம் ஏக்கருக்கு வர்த்தக வலயத்தை அமைப்பதன் மூலம் இலங்கையர்களே அதிக இலாபமடைவார்கள். நாம் 99 வருட குத்தகைக்கு இதனை வழங்குகின்றோமே ஒழிய, முழுக்காணி உரிமத்துடன் இதனை வழங்கவில்லை. தேவைப்பட்டால் அந்தக் காணியை எந்த நேரத்திலும் எடுக்கும் உரிமை கூட இலங்கை அரசுக்கு இருக்கின்றது - என்றார். (த-5)

# அம்பாந்தோட்டை ஒப்பந்தம் குறித்து தெளிவுபடுத்தல் மிக அவசியமானது

### அஸ்கிரியபீட மகாநாயக்கர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன.5

அம்பாந்தோட்டைத்துறைமுக வளாகத்தில் 5000 ஏக்கர் காணியை சீனாவுக்கு வழங்குவது குறித்து மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் தெளிவுபடுத்தாமல் அது குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டாம் என அஸ்கிரியபீட மகாநாயக்கதேரர் வலியுறுத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை சீன முதலீட்டு வலயம் தொடர்பாக நல்லாட்சி அரசு உரிய வகையில் நாட்டு மக்களைத் தெளிவுபடுத்தத் தவறியிருப்பதாகவும், குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சபாநாயகரான சமல் ராஜபக்ச மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று முன் தினம் கண்டி தலதா மாளிகைக்குப் பயணம் மேற்கொண்டனர்.

அங்கு வழிபாட்டில் ஈடுபட்ட அவர்கள் அதனைத் தொடர்ந்து அஸ்கிரியபீட மகாநாயக்க தேரரின் செயலாளரான மெதகம தம்மானந்த தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மெதகம தம்மானந்த தேரர், அம்பாந்தோட்டைத் துறைமுகம் உட்பட 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீன நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கவிருப்பதை முன்னாள் சபாநாயகரான சமல் ராஜபக்ச மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் என்னிடம் தெளிவுபடுத்தினார்கள். எனினும் இது குறித்த தகவல்களையும், ஒப்பந்தம் தொடர்பிலும் நாட்டுக்குத் தெளிவுபடுத்தவும், நாடாளுமன்றம் மற்றும் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த அரசு தவறியிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தனியார் மயப்படுத்தல் போன்ற விடயங்களை அரசு செய்ய முயற்சித்தால் அது குறித்து மக்களிடையே சிந்தனை உருவாக்கப்படவேண்டும் என்பதோடு, அரசு தெளிவுபடுத்தவும் கடமைப்பட்டிருக்கிறது. நான் அறிந்திருக்கும்வரை அம்பாந்தோட்டை ஒப்பந்தம் குறித்து இதுவரை அரசு தெளிவுபடுத்தலைச் செய்யவில்லை.

எனவே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதுபற்றி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நாட்டுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்துமாறு அரசிடம் கோருகின்றோம். மேலும் ஒப்பந்தத்தைச் செய்யமுன், கால எல்லையை வழங்கி தெளிவுபடுத்தலைச் செய்யுமாறும் வலியுறுத்துகின்றோம் - என்றார். (தி)

# உதயங்கவின் வங்கிக் கணக்குகளை இரத்துச் செய்ய நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 5

முன்னாள் ரஷ்யத் தூதுவரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உறவினருமான உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகளை இரத்துச் செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# சுழிபுரத்தில் வாள்வெட்டு; 4 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் 4 பேர் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

... அழைத்தனர். அவர்களிடம் சென்றபோது அவர்கள் மறைத்து வைத்திருந்த வாளால் 4 பேர் மீதும் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அங்கு நின்றிருந்த ஏனையவர்களின் உதவியுடன் காயமடைந்தவர்கள் ...



சுபீட்சம் மிக்க நாட்டினை உருவாக்குவதற்கான

# பேண்தகு யுகத்தின் மூன்றாண்டு உதயம்

தேசிய வைப்வம்
மற்றும்
வறுமையை ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்ட அறிமுகம்

இந்தியாவின் ஆந்திர மாநில முதலமைச்சர்
ஸ்ரீ சந்திரபாபு நாயுடு அவர்களின்
பங்கேற்பில்,

ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்களின்
தலைமையில்

2017 ஜனவரி 08 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

ஜனாதிபதி செயலகம்
இலங்கை

பேண்தகு யுகம்

# புத்தளம் எம்.பியின் புலம்பல் எடுபடாது

*அமைச்சர் சந்திம தெரிவிப்பு*

அரசிலிருந்து விலகிய புத்தளம் மாவட்ட உறுப்பினர் என்னதான் சொன்னாலும் காலி மாவட்ட உறுப்பினர்கள் எவரும் அரசிலிருந்து விலகப்போவதில்லை என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்திருக்கிறார்.

அவரது அமைச்சில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று இருப்பது நிலையானதொரு அரசு. அரசில் இருப்பவர்கள் பயமின்றி தங்களது சுகதுக்கங்களை வெளிப்படுத்த அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அன்று அவ்வாறான ஒரு நிலை இருந்ததா என்பது கேள்விக்குறி.

ஜி.எல்.பீரிஸ் இன்று வெவ்வேறு கதைகளைச் சொல்லி வருகிறார். அன்று பீரிஸின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு முழு உலகும் எதிர்ப்புத் தெரிவித்தது. அரசியலுக்கு வந்து அவர் தனது கௌரவத்தைக் கெடுத்துக்கொண்டார். அரசியலுக்கு வராமல் அவர் பேராசிரியராகவே இருந்திருக்கலாம்–என்றார். (தி)

# முறைகேட்டு விசாரணை ஆணைக்குழுவுக்கு அனுமதி

கொழும்பு, ஜன.5

பெரிய அளவிலான ஊழல் மற்றும் முறைகேடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான முழு அதிகாரங்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புதிய ஆணைக்குழுவுக்கு ஊழல் துஷ்பிரயோகக் குற்றங்களை விசாரிக்கவும்–விசாரணை முடிவில் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கவும்–முழு அதிகாரங்கள் வழங்கப்படுமெனவும் அமைச்சர் சம்பிக்க தெரிவித்தார். (தி)

# வெளிநாடுகளில் பணியாற்றுவோருக்கு இவ்வருடம் முதல் ஓய்வூதியத் திட்டம்

## வேலைவாய்ப்புகள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கும் இவ்வருடம் முதல் ஓய்வூதியங்களை வழங்க அரசு தீர்மானித்திருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

புதுவருடத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பணியகம் ஆகியவற்றின் பணிகளை ஆரம்பித்து வைக்கும் வைபவமொன்றில் கடந்த திங்கட்கிழமை கலந்து கொண்ட போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத் திரிபால கடந்த வருடத்தில் அளித்த வாக்குறுதிக்கமைவாக இந்த வருடம் முதல் அந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கையர்கள் தொடர்பில் ஜனாதிபதி அளித்த மற்றொரு வாக்குறு தியின்படி 2016 ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் அவர்களுக்கான நலன்களைக் கவனிக்கும் பணி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது வாக்குறுதியான ஓய்வூதியத் திட்டமும் இவ்வருடம் முதல் செயற்படுத்தப்படும். அவ்வாறே பிரதேச செயலாளர் காரியாலயங்களில் தொழில்புரியும் அபிவிருத்தி அதிகாரிகளின் நலனும் கருத்தில்கொள்ளப்படும்–என்றார். (தி)




# மேல் நீதிமன்ற நீதிபதிகளாக ஐந்து பேருக்கு பதவியுயர்வு

கொழும்பு, ஜன.5

மாவட்ட நீதிபதிகளாகக் கடமையாற்றி வந்த ஐவர் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரையின் பேரில் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் முன்னிலையில் மேல்நீதிமன்ற நீதிபதிகளாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நீதிச் சேவைகள் ஆணைக் குழு வின் செயலாளர் பிரதீப் ஜயதிலக, கொழும்பு மாவட்ட நீதிபதியான உபாலி குணவர்த்தன, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் கமல் பீரிஸ், கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதிகளான மொஹமட் இர்ஷேன் மற்றும் திருமதி இனோகா ரணசிங்க ஆகிய ஐவருமே இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவர்களுள் பிரதீப் ஜயதிலக தொடர்ந்தும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றுவார் எனவும், உபாலி குணவர்த்தன தங்காலை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகவும், கமல் பீரிஸ் பதுளை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகவும், மொஹமட் இர்ஷேன் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும், திருமதி இனோகா ரணசிங்க மொனரா கலை மேல்நீதிமன்ற நீதிபதியாகவும் பதவியேற்கவுள்ளதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# தொற்றாநோய்களில் இருந்து அரச ஊழியரை காக்கத் திட்டம்

கொழும்பு,ஜன.5

இலங்கையிலுள்ள சுமார் 14 இலட்சம் அரச ஊழியர்களை தொற்றா நோயிலிருந்து பாது காக்க புதிய திட்டமொன்று நடை முறைப்படுத்தப் படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய், உயர் குருதி அமுக்கம் உள்ளிட்ட பல்வேறு தொற்றா நோய்களிலிருந்து அரச ஊழியர் கள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஆலோசனையின்பேரில் இந்தத் திட்டம் முன் னெடுக்கப்படவுள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்தில் சுகாதார அமைச்சைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஊழியர்கள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார். (தி)

256ஆவது மைல்கல்



# பருத்தித்துறை

வட இலங்கையின் விளிம்பில் அமைந்துள்ள இந்த அழகிய நகரத்தின், தனிச்சிறப்பு வாய்ந்த மண்வளம் காரணமாக அதன் பருத்திக் கம்பளி உற்பத்தி மிகவும் புகழ்பெற்றிருந்தது. நகரத்தில் அமைந்திருந்த துறைமுகத்தின் மூலம் அங்கு வாழும் மக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பருத்தியை ஏனைய நாடுகளுக்கு இலகுவாக ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருந்தது, இந்நடவடிக்கையின் காரணமாக பருத்தித்துறை என்ற பெயருடன் அது ஒரு வர்த்தக மையமாக உருவானது. போர்த்துகேயர் ஆட்சியின்போது இந்நகரம் "பொயின்டா டாய் பெர்ட்ரொ" என அழைக்கப்பட்டது. அவர்களது மொழியில் அதன் பொருள் "பாறைகள் நிறைந்த முனை" என்பதாகும். துறைமுகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள பாறை அமைப்பே அதற்குக் காரணம் என நம்பப்படுகிறது. காலப்போக்கில் அது "பொயின்ட் பெட்ரோ" என ஆங்கிலத்திலும், "பேதுரு துடுவ" என சிங்களத்திலும் பெயர் மாற்றமடைந்ததாக அறியப்படுகிறது.

இன்று துரித கதியில் அபிவிருத்தி அடைந்து வரும் பருத்தித்துறை நகரத்திற்கு உலகத் தரம் வாய்ந்த வங்கிச் சேவையை வழங்க கொமர்ஷல் வங்கி தயாராய் உள்ளது. தொடர்ச்சியாக 6 வருடங்கள் உலகில் மிகச் சிறந்த 1000 வங்கிகளின் பட்டியலில் இடம்பிடித்துள்ள கொமர்ஷல் வங்கி, இன்று சுப நேரமான காலை 9.05 க்கு, இலக்கம் 41, பத்திரகாளி அம்மன் வீதி, பருத்தித்துறை பிரதான வீதி, பருத்தித்துறை என்ற முகவரியில் தனது புதிய கிளையை மங்களகரமாய்த் திறந்துவைக்கின்றது.

தொலைபேசி இலக்கம்: 021-2265 295

COMMERCIAL BANK

# நல்லாட்சிப் பயணத்தை மகிந்த தடுக்க முடியாது

## பிரதமர் ரணில் சவால்

யாழ்ப்பாணம், ஜன. 5

எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்ததோர் இலங்கையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் முன்நோக்கிப் பயணிக்கும் எங்களின் பயணத்தை மகிந்த ராஜபக்சவால் ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது. பிரதமர் பதவியை எதிர்பார்த்த மகிந்த இன்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றார்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கூட்டு அரசு அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கான பொருளாதார அபிவிருத்திப் பிரகடனத்தைப் 'பலம் மிக்கதோர் இலங்கை' என்ற பெயரில் தயாரித்து நடைமுறைப்படுத்தவுள்ளது. இது தொடர்பில் விளக்கமளிக்கும் சிறப்புச் செய்தியாளர் சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

'வருட ஆரம்பத்தில் எதிர்வரும் மூன்று நான்கு வருடங்களுக்கான பொருளாதார அபிவிருத்திப் பிரகடனத்தை வெளியிடுவதில் அரசு பெருமையடைகிறது. நாங்கள் நாட்டைப் பொறுப்பேற்றபோது எமது நாடு இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தது. கடன் பிரச்சினை, இரண்டாவது வேலையின்மைப் பிரச்சினை.

கடந்த அரசின் காலத்தில் பெரிய அளவிலான கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம், பாதைகள் எனச் செய்யப்பட்டன. அவர்களின் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தோல்வியடையக் கூடிய திட்டங்களாகவே இருந்தன. அவற்றுக்குப் பெற்றுக்கொண்ட கடனையே நாம் இன்று செலுத்துகின்றோம். வற் வரியும் அதிகரிக்கப்பட்டது.

கடன் பிரச்சினை மற்றும் நாட்டில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து நாம் மீண்டெழவேண்டும். அதற்கான திட்டங்களை தேசிய அரசு வகுத்துள்ளது. எமது நாட்டுத் தேவையான பொருள்களின் இறக்கு மதியை ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மூலம் ஈடுசெய்ய முடியாது. சமநிலை இல்லை. நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கவேண்டுமாயின் ஏற்றுமதியை நோக்கிய பொருளாதாரத் திட்டத்துக்கு மாறவேண்டும். அப்போதுதான் எதிர்வரும் 3, 4 ஆண்டுகளில் குறிப்பிட்ட வீதத்திலான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியும்.

எமது நாடு சிறிய நாடு. இந்துமா சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடமே முக்கியத்துவம் பெறுகிறது. வரலாற்றிலும் எமது நாட்டின் அமைவிடமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்தியா, சீனா போன்று பெரிய பங்குச் சந்தையொன்று இங்கில்லை.

இன்று உலகப் பொருளாதாரம் ஆசியாவில் தான் உள்ளது. பசுபிக் சமுத்திரத்தில் இருந்து இந்துமா சமுத்திரத்தை நோக்கிப் பயணிக்கிறது. இந்துமா சமுத்திரத்தில் எமது அமைவிடமே வரலாற்றில் எமக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. எதிர் காலத்திலும் எமது அமைவிடமே முக்கியத்துவம் பெறவுள்ளது. அதற்குச் சிறந்த நிலையான பங்குச் சந்தையொன்று அவசியமாகும். அம்பாந்தோட்டையில் நாங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களால் ஒரு பிரதேச சபையையாவது மகிந்தவால் தக்கவைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். அதனால் இந்தத் திட்டங்களைக் குழப்பும் முகமாக நெருப்பைப் பற்ற வைத்து வருகின்றனர்.

இந்தியாவின் பங்குச் சந்தையின் நலன்கள் மற்றும் சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் பங்குச் சந்தையின் நலன்களையும் பெற்றுக்கொண்டு 4 ஆயிரம் மில்லியனுடன் கூடிய பங்குச் சந்தையொன்றை உருவாக்குவது அவசியம். அதனை நோக்கிப் பயணிக்கின்றோம். அடுத்ததாக அமைவிடத்தை வைத்துக் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்தின் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றத் திட்டமிட்டுள்ளோம்.

மூன்று துறைமுகங்களையும், இரண்டு விமான நிலையங்களையும் மையமாக வைத்து இந்துமா சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம் மூலம் அபிவிருத்தியை அடையும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பொருள்களை உலகளாவிய ரீதியில் பரிமாற்றும் மத்திய நிலையமாக இலங்கையை மாற்றவும் எண்ணியுள்ளதுடன், ஆசியாவின் நிதி மத்திய நிலையமாகவும் இலங்கையை மாற்றவுள்ளோம்.

இரண்டு பொருளாதாதர வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன. தற்போதுள்ள பாதைக் கட்டமைப்பை வைத்துக் கண்டியில் இருந்து வெள்ளவாய வரையாக ஒரு வலயம் உருவாக்கப்படவுள்ளது. இங்கு கைத்தொழில், விவசாயம், கணனி மற்றும் சுற்றுலாத் துறை உள்ளிட பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். மெகாப் பொலிஸ் திட்டம். நிதி நகரம் இந்தத் திட்டத்தில்தான் உள்ளது.

இரண்டாவதாகக் காலியைச் சிறப்புச் சுற்றுலா வலயமாக மாற்றும் வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உப பொருளாதார வலயங்களாக நுவரெலியா மற்றும் பதுளை போன்ற மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. திருகோணமலை தனியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இது தொடர்பில் சீனா மற்றும் இந்தியாவிடம் பேசப்பட்டுள்ளது.

அதேபோல் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணமும் சிறப்பு அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி சீனாவுடான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. எட்கா உடன்படிக்கையும் இந்தக் காலாண்டில் கைச்சாத்திடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. சிங்கப்பூருடன் உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடவுள்ளோம். இவைத் தவிர ஐரோப்பிய நாடுகளுடனான பொருளாதார உடன்படிக்கைள் என்று 8 உடன்படிக்கைகள் வரை கைச்சாத்திடவுள்ளோம். இவை அனைத்தும் எமது தேவைக்கு அல்ல. எதிர்கால சந்ததியினர் இந்த நாட்டில் கடனின்றி வாழ்வதற்கே.

மாதம் 300 டொலர் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமான இலக்குகளை நோக்கிப் பயணிக்கின்றோம். நாட்டில் 13 ஆம் ஆண்டுவரை கட்டாயக் கல்வி கொண்டு வரப்பட்டு அந்தக் கல்வியின் பின்னர் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

இவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாமலேயே மகிந்த ராஜபக்சவின் அணியினர் சத்தமிடுகின்றனர். அப்பாந்தோட்டையில் நாங்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களால் ஒரு பிரதேச சபையையாவது மகிந்தவால் தக்கவைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். அதனால் இந்தத் திட்டங்களைக் குழப்பும் முகமாக நெருப்பைப் பற்ற வைத்து வருகின்றனர்.

நாங்கள் முன்னோக்கிப் பயணிப்பதை மகிந்தவால் ஒருபோதும் தடுக்க முடியாது என்றார். (த-5)

# ரிசாத்தின் உணர்வுகள் நியாயமானவையே

## இப்படிச் சொல்கிறார் ராஜித

யாழ்ப்பாணம், ஜன. 5

வில்பத்து விவகாரத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் உணர்வுகள் நியாயமானவையே. அவர் தனது சமூகத்துக்காகக் குரல் கொடுப்பதை தவறென்று ஒருபோதும் குறிப்பிட முடியாது.

இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வில்பத்து விவகாரம் தொடர்பில் அரசு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை.. காடு என்று அடையாளம் காணப்பட்ட இடத்தில் தனியாருக்கு நிர்மாணங்களை மேற்கொள்ள முடியாது என்பதே சட்டமாகும்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் 1915 ஆம் ஆண்டு முதல் அந்தப் பகுதியில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஒளிப்படங்கள் உள்ளிட்ட பல ஆதாரங்களைக் காண்பித்துள்ளார். உண்மையும் அதுவே. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் 24 மணித்தியாலத்துக்குள் வெளியேற வேண்டும் என்று புலிகள் எச்சரித்தமையாலேயே மக்கள் இடம் பெயர்ந்து புத்தளத்தில் அகதி வாழ்க்கையை வாழ்ந்தார்கள்.

இவர்களில் அமைச்சர் ரிசாத்தும் ஒருவர்ராவார். சிறு வயதிலேயே அங்கிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்துக்கு வந்து தேர்தல்களில் களமிறங்கி வெற்றி பெற்றார். அவருக்கு அந்தப் பகுதி மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் பொறுப்பு இருக்கின்றது. இதனை நம்பித்தான் அம்மக்களும் அவருக்கு வாக்களித்தார்கள்.

வில்பத்து விவகாரம் தொடர்பிலான அவரது உணர்வை பிழையென்று ஒருபோதும் கூற முடியாது. தமது சமூகத்துக்காகவே அவர் போராடுகிறார். முஸ்லிம், தமிழர் என்று நாமும் பிரித்துப் பார்க்கக் கூடாது. இது மக்களின் உணர்வோடு தொடர்புடைய விடயமாகும் - என்றார். (த-5)

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், மீசாலை, பங்களா வீதி, டச்சு வீதி, விக்னேஸ்வரா பாடசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, சிறப்பு அதிரடிப்படைமுகாம், வங்காலைபாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

# இ.போ.சவின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை போக்குவரத்து சபையின் 12 பிராந்தியங்களின் முதன்மைப் பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# ஆங்கிலப் பயிற்சிக்கு மாணவர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 5

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் 'ஸ்ரெப்' நிறுவனத்தினால் நடத்தப்படும் பாடசாலை விடுகை பெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் அடுத்த பிரிவு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதால், பயிற்சியைப் பெற விரும்புவோர் தமது விவரங்களை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள 'ஸ்ரெப்' நிறுவனத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9 தொடக்கம் பி.ப 2 வரை பதிவு செய்ய முடியும். மேலதிக விபரங்களுக்கு 0212224580, 0212221395 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4,ரி)

# அளவெட்டி நாராயணனுக்கு ஞாயிறன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்.ஜன. 5

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு சிறிநாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவர்க்கவாசல் ஏகாதசி அன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் 9ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வழமைபோல் காலை 8 மணிக்கு சிறப்பு முழுக்கு மற்றும் ஆராதனைகள் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப வழிபாட்டைத் தொடர்ந்து சிறிமத் நாராயணர் தேவியர் சகிதம் அலங்காரத் தண்டிகையில் வீதி உலா வருவார். மதியம் அடியவர்களுக்கு அன்னதானமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# தாழ்நிலங்களை நிரப்பும் நடவடிக்கை ஜனாதிபதியின் தலையீட்டால் நிறுத்தம்

கொழும்பு முத்துராஜவல கண்டல் தாவர சுற்றாடல் கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தி பெருமளவான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத தாழ் நில நிரப்பல், காணி நிரப்பல் ஜனாதிபதியின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

முத்துராஜவல பிரதேசத்தின் ஜா-எல, தண்டுகம பகுதியின் இரு இடங்களில் தாழ் நிலத்தை நிரப்பும் செயற்பாடு சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இது தொடர்பில் பிரதேச மக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தனர். குறித்த இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலர்கள், காணி மீட்பு - அபிவிருத்தி கூட்டுத்தாபன அலுவலர்கள் மற்றும் ஜா-எல பொலிஸார் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று நடத்திய விசாரணையின் பின் காணி நிரப்பல் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டது.

இந்தச் சட்டவிரோத செயலில் ஈடுபட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு வசதியேற்படுத்திய குற்றத்துக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜன. 5

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று தலா 4 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொலிஸார் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர். அங்கு டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த எட்டுக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். அவை சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வழக்கினைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான், எட்டுப் பேருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (வ - 9)

## ஆயுள் வேதக் கல்லூரியின் ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை சித்த ஆயுள் வேதக் கல்லூரியின் புதிய நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வலி.தெற்கு பிரதேச செயலக (உடுவில்) கேட்போர் கூடத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும். ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில், கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபை கோரியுள்ளது. (வ-4)



# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதில் இணக்கமான சூழல்

*யாழ்ப்பாணம் வந்த இந்திய அயலுறவு இணைச் செயலர் பாண்டே தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை விடயத்தில் இரு நாடுகளின் குழுவினரும் இணக்கமான சூழலில் உள்ளபோதும், பிரச்சினைக்கு ஒரே நாளில் பேசித் தீர்வைப் பெற்று விட முடியாது.

இவ்வாறு இந்திய அய லுறவு அமைச்சின் இணைச்செயலர் சஞ்ஜெய்பாண்டே யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அவர், யாழ்ப்பாணம் பொது நுலகத்துக்கு அருகில் இந்திய அரசின் உதவியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார மண்டபத்தையும், இந்திய அரசின் உதவியில் சீரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தையும் பார்வையிட்டார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்திய - இலங்கை மீனவர்கள் நெருக்கடிநிலை தொடர்பாகத் தீர்வு காணும் முயற்சியில் உள்ளோம். அது தொடர்பில் இரண்டு நாடுகளினதும் மீனவ சங்கங்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை கலந்துரையாடுகின்றன. அதே விடயத்தை இரண்டு நாட்டு அரசுகளும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை பேசுகின்றன. ஒரே நாளில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. அவற்றுக்கான பொறிமுறையில் நாம் இயங்கி வருகின்றோம்.

அதன் ஓர் அங்கமாக மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி தொடர்பான பயிற்சிகளையும், அவற்றை மேற்கொள்வதற்கான உபகரணங்களையும் வழங்கி வருகிறோம். இந்தப் பிரச்சினையில் இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டு நிலை மிக அவசியம். இரு தரப்பு நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமாக இணக்க நிலையை உருவாக்க முடியும். இலங்கை அரசு பறிமுதல் செய்துள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்கும்படி கோரியுள்ளோம். இரண்டு மாதங்களில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாடான முன்னேற்றத்தையடுத்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளோம். இலங்கை அரசின் முடிவுக்காக காத்திருக்கிறோம்.

யாழ்ப்பாணத்துக்கு நான் வருவது இதுவே முதன்முறை. இந்திய அரசால் மேற் கொள்ளப்படும் திட்டங்களைப் பார்வையிடவும், கச்சதீவு ஆலயத்தை பார்வையிடவும் இங்கு வந்தேன். போருக்குப் பின்னர் யாழ்பாணத்தின் அபிவிருத்தி பாராட்டுதலுக்குரியது. வீட்டுத் திட்டம், ஏனைய திட்டங்களை பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

**வீட்டுத்திட்டம்**

தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள வீட்டத் திட்டங்களை முதலில் நிறைவு செய்துவிட்டு, புதிய திட்டங்களைத் திட்டமிடுவது சிறந்தது. குறித்த கால அளவுக்குள் திட்டங்கள் நிறைவுபெறுவது முக்கியம். எதிர்காலத்தில் நாம் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். வரலாற்று ரீதியிலும், புவியியல் ரீதியிலும் எமக்கு மிக ஆழமான தொடர்புகள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்தும் பேண விரும்புகிறோம் - என்றார். (வ-4,8)

## யாழ். மாநகர சபையில் நடந்த மோசடி குறித்து விசாரிக்காமல் இழுத்தடிக்கும் பொலிஸார்

*ஆணையாளர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம். ஜன. 5

யாழ்ப்பாணம் மாநகரசபையில் இடம்பெற்ற 21 லட்சம் ரூபா மோசடி குறித்து சபையின் சார்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும், அது தொடர்பில் இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை.

இவ்வாறு மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் சபை மேற்கொண்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த வருடம் பெண் உத்தியோகத்தர் ஒருவர் 21 லட்சம் ரூபாவை மோசடி செய்தமை உள்ளகக் கணக்காய்வு மூலம் தெரியவந்தது. அது தொடர்பில் மாநகர சபையின் சார்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த முறைப்பாட்டுக்கு இன்றுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. யாழ்ப்பாணம் பொலிஸார் ஆரம்ப விசாரணைகளையோ அல்லது ஆவண பரிசோதனையோ மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சட்டரீதியிலான விசாரணை முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் மோசடி தொடர்பில் உடனடியாகவே திணைக்களத்துக்கு எழுத்தில் முறையிட்டிருந்தோம். அதன் பிரகாரம் திணைக்களத்தால் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன. அவர்களால் கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கி பெண் உத்தியோகத்தருக்கு எதிரான குற்றப்பகிர்வுப் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திணைக்கள ரீதியான அடுத்த கட்ட நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் - என்றார். (வ-4,101)

## பலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 5

தமிழகத்துக்கு வானூர்திச் சேவைகளை மேற்கொள்ளும் வகையில், பலாலி வானூர்தித் தளம், பிராந்திய வானூர்தி நிலையமாக விரிவாக்கம் செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கூட்டாட்சி அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கொழும்பில் நேற்று அறிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியத் தூதுவராகத் தரன்ஜித் சிங் சந்து பதவியேற்ற பின்னர், தென்னிந்தியாவுடனான தொடர்புகளை மேலும் விருத்தி செய்யும் வகையில், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து கலந்துரையாடப்படும் என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# எழுத்துமூல உறுதிமொழி தந்தால் போராட்டத்தைக் கைவிடுவோம்

*வடக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உறுதியளித்த போதும், அதனை எழுத்துமூலமாகத் தரவேண்டும் என்று குறிப்பிட்ட வடக்கு மாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர், அதுவரை தமது போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சில கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி ஒரு வாரமாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அது தொடர்பான சந்திப்பு வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் அலுவலகத்தில் வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கும் பொது சுகாதார பரிசோதகர் சங்கத்துக்கும் இடையில் நேற்று இடம்பெற்றது.

பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை நிறுத்துவதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உடன்பட்டுள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கொள்கைகளின் அடிப்படையில் புதிய பட்டியல் தயாரிப்பது தொடர்பில் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. அவற்றை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். பொதுச் சுகாதார பரிசோதகர்களாக இங்கு பணியாற்றும் எங்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யும் போது 3 வருடங்கள் பணியாற்றிய பின்னர் அதனை முடிவுறுத்தும் கடிதத்தையும் தரவேண்டும் என்று அமைச்சரிடம் கோரியுள்ளோம்.

எமது சில கோரிக்கைகள் ஏற்கப்பட்டபோதும், அதனை உறுதிப்படுத்தி எழுத்து மூலமான உறுதிமொழி தரப்படவில்லை. எங்கள் பிரச்சினைக்குரிய தீர்வுகள் தொடர்பான எழுத்துமூல உறுதிமொழி கிடக்கும்வரை எமது பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடரும்' என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-4,8)

## மோசடிக் குற்றத்தில் கைதானவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றில் 50 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் யாழ். மேல் நீதிமன்றால் நேற்றுப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வர்த்தக நிலையத்தில் குடும்பத்தலைவர் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை பணியாற்றியுள்ளார். அந்தக் காலப் பகுதிக்குள் 50 லட்சம் ரூபா பணம் காணாமற்போனமை கண்டறியப்பட்டது. பொலிஸில் முறையிடப்பட்டதால் விசாரணை நடத்தப்பட்டுச் சந்தேகத்தில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (வ-4)

## வட்டுவாகல் பாலத்தின் ஊடான போக்குவரத்து சில மணி நேரம் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 5

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் செல்லும் ஏ 35 முதன்மைச் சாலையில் வட்டுவாகல் பாலத்தில் கனரக வாகனம் ஒன்றை ஏற்றிய பாரவூர்தி காற்றுபோனதால் அந்தச் சாலையூடான போக்குவரத்து பலமணிநேரம் தடைப்பட்டுப் பின்னர் சீரானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாலத்தின் நடுப்பகுதியில் குறித்த வாகனம் பழுதடைந்தமையினால் இந்தச் சாலையூடாக சேவையிலீடுபடும் பேருந்துகள் உள்ளிட்ட கனரக வாகனங்களும் மாற்றுவழியைப் பயன்படுத்த முடியாத நிலையில், பாலத்தின் இருமருங்கிலும் நீண்டவரிசையில் மாலை ஐந்து மணியிலிருந்து இரண்டரை மணித்தியாலமாகக் காத்துக் கிடந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# பதிவுகள் மேற்கொண்டாலே மீனவர்களுக்கு இழப்பீடுகள்

## யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது பாதிக்கப்படும் மீனவக்குடும்பங்கள் இழப்பீடுகளைப் பெற்று கொள்ள வேண்டுமானால் உடனடியாகவே பதிவு செய்ய வேண்டும்..


இவ்வாறு யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை உதவிப்பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ் மாவட்டத்தில் 20 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் உள்ளன. 5 ஆயிரத்து 493 மீனவக் குடும்பங்கள் மட்டுமே தற்பொழுது வரை பதிவு செய்துள்ளன. ஏனைய குடும்பங்கள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளாது இருப்பதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அண்மையில் கூட இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதில் பல சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பதிவு செய்யப்படாமல் இருந்தன. அவர்களுக்கான காப்புறுதிகள், அவர்களுக்கான சலுகைகள் போன்றவற்றைப் பெறுவதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. யாழ் மாவட்டத்தில் 110 கடற்றொழில் சங்கங்கள் உள்ளன.

மீனவக் குடும்பங்கள் பிரதேசங்களுக்கு அண்மையில் உள்ள கடற்றொழில் சங்கங்களில் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்."-என்றார். (ற-8)



# ஒரு லட்சம் யாழ். அகதிகள் இந்தியாவில் தற்போதும்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1 லட்சம் பேர் இந்தியாவில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

லண்டனின் இலங்கைக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் லோர்ட் நெசபி நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

அவர் யாழ்.மாவட்டச் செயலரை யாழ். மாவட்டச்செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் போதே மாவட்ட செயலர் அவரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் 1 மணித்தியாலம் நீடித்த குறித்த சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் பொது நிலமைகள் மற்றும் அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

கல்வி, விவசாயம், சுகாதாரம், உட்பட மீள்குடியமர்வு, இலங்கையில் இருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

"1 லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இந்தியாவில் இருக்கின்றார்கள்.

அவர்களை இங்கு அழைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அண்மையில் 900 குடும்பங்கள் யாழ்ப்பாணம்வந்தன. மீள்குடியமர்வுகளும் தற்போது இடம்பெற்றுகின்றன."-என்றுமாவட்டச்செயலாளர் கலந்துரையாடலில் தெரிவித்தார். (ற-8,106)

# தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழாவும் ஆய்வுக்கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், ஜன. 4

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழாவும் ஆய்வுக் கருத்தரங்கும் எதிர்வரும் 14ஆம் திகதியும் மறுநாள் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன என பொதுச் செயலர் தெரிவித்தார்.

14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையிலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் நா.வானமாமலை அரங்கில் மு.ப. 9.30 மணிக்கு பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையிலும் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வில், ஏ.பி.எம்.இத்திரீஸ், 'கிழக்கில் முஸ்லிம் நாட்டார் வழக்காற்றியலில் விவசாயப் பண்பாடு' என்னும் தலைப்பிலும், அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் 'ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியலில் மன்னார் பிரதேசக் கத்தோலிக்கக் கூத்து மரபுகள்' என்னும் தலைப்பிலும் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர். அதனோடு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் ஆய்வரங்கும், ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பும் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# விபத்தில் மூவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜன. 5

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும், மோட்டார் சைக்கிளும் ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு முன்பாக விபத்துக்குள்ளாகின. விபத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் செல்வராசா கார்த்தீபன் (வயது 33), நடராசா கமல்ராஜ் (வயது 33), கனகராயன் குளத்தைச் சேர்ந்த சின்னையா இரத்தினம் (வயது-54) ஆகியோர் காயமடைந்த நிலையில் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். ஒட்டுசுட்டான் பொலிஸார் விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-7)


## வாழ்த்துகின்றோம்

'கலாபூஷணம்' - 2016 அரசவிருது
பெற்ற நல்லைக்குருமணியின்
பிரதம வாரிசு, சங்கீத கதாப் பிரசங்க
வித்துவான், 'கானகதாவாரிதி'
பிரம்மஸ்ரீ
**சிவ. வை. நித்தியானந்த சர்மா**
அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
*நல்லூர் சைவ மகா சபை*
*சைவ அபிமானிகள்.*



## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய A+ வகைக் குருதி உடைய ஒருவருக்கு O+, A+ வகைக் குருதி உடையவரின் சிறுநீரகம் தேவை.

077 408 5397, 077 006 5028

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த மூலநட்சத்திரம், லக்கினச் செவ்வாய், 46 கிரகபாவமுடைய பெண்ணிற்கு மணமகன் தேவை.

தொடர்பு: 075 749 8519

## கடை /அலுவலகம் வாடகைக்கு உண்டு

கஸ்தூரியார் வீதியில் முன்னர் வீரகேசரி அலுவலகம் இயங்கிய கடையும் கூட்டுறவு இன்சூரன்ஸ் இயங்கிய மேல்மாடி அலுவலகமும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 898 0422

## கூறுவிலை கோரல்

இல. 223, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள UNHCR நிறுவனத்தால் பாவித்து கைவிடப்பட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு.

பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் வெள்ளிக்கிழமை (06.01.2017) காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரையும் சனிக்கிழமை (07.01.2017) 9 மணி தொடக்கம் 11 வரையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பார்வையிடலாம்.

**கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான முடிவு திகதி :10.01.2017**

**மேலதிக தொடர்புகளுக்கு: 077 236 5551**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**வைத்திலிங்கம் இராசேந்திரம்**



கடந்த 06.12.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் துயர்வுச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி யூடாகவும் இரங்கற் செய்தி தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறுதிக் கிரியைகளின் போதும் இறுதி யாத்திரையின் போதும் நேரடியாகக் கலந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லமுத்து வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.
021 205 8689

## இப்போது விற்பனையாகிறது!

தரம் 4, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு

# நுண்ணறிவு

ஆக்கம்: M.சுகந்தன் (B.A,Dip.in.Teaching, PGDE)

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி 1 வினாத்தாளின் முழுமையான பாடப்பரப்புகளை உள்ளடக்கிய நுண்ணறிவு வினாக்களும், விளக்கமான விடைகளும் அடங்கியது.**

விலை: 450/-

இப் புத்தகத்தின் சிறப்புகள்..
✓ பாடத்திட்டத்தினை (ஆசிரியர் கைநூல்) அடிப்படையாகக் கொண்டது.
✓ ஆரம்பக் கல்வி துறையில் அனுபவமிக்க ஆசிரியரின் கைவண்ணம்.
✓ தரமான பயிற்சிகளுடன் மாணவர்கள் இலகுவாக புரிந்துகொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
✓ 1000ற்கு மேற்பட்ட வினாக்களுடன் தெளிவான விடைகளுடன்.
✓ பரீட்சையில் பகுதி I இல் 100 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வழிகாட்டும் பயிற்சிகள் அடங்கியது.

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு:- யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/5. முதலாம் மாடி (Trust Complex) ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13. தொ.பே: 077 6258 778

# வலி.வடக்கில் கல் அகழ்வு: தெல்லிப்பழையில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஜன.5
வலி.வடக்குப் பகுதியில் மக்களின் காணிகளில் இனந் தெரியாதவர்கள் சுண்ணாம்புக்கல் அகழ்ந்தால் அது தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பலாலியில் இராணுவத்தினரின் கட் டுப்பாட்டில் இருந்து அண்மையில் பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டன. அவற்றில் மக்கள் இன்னமும் முழுமையாகக் குடியமரவில்லை. உரி மையாளர்கள் இல்லாத காணிகளில் திருட்டுத்தனமாக சுண்ணாம்புக் கல் அகழப்பட்டு இரவு வேளைகளில் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறையிட முடியாதுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

"இந்தப் பிரதேசம் பலாலி பொலிஸ் நிலையத்தின் ஆளுகைக்குட்பட்டது. தெல்லைப்பழை பொலிஸாரோ, காங்கேசன்துறைப் பொலிஸாரோ முறைப்பாடுகளை ஏற்க மறுக்கின் றனர். பலாலி பொலிஸ் நிலையம் இன்னமும் உயர்பாதுகாப்புவலயத்துக்குள்ளேயே இயங்குகின்றது. அங்கு சாதாரண மக்கள் செல்ல முடியாது. நாம் எங்கு முறையிடுவது என்று தெரியவில்லை."- என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலாளர் வேதநாயகன் "தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு செய்யலாம்."- என்று தெரிவித்தார்.

"காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக ஆராய்ந்த அவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இவ்வாறானபிரச்சினைகளை முறையிட முடியும் என்று தெரிவித்தார்."- என்று மாவட்ட செயலர் தெரிவித்தார். (ற-101)

## 201 இல் நாய் கடித்து

# மூன்று பேர் உயிரிழப்பு 7,661 பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன.5
கடந்த ஆண்டு 7 ஆயிரத்து 661 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். மூவர் உயிரிழந்தனர்.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவின் சிறப்பு மருத்துவர் ஜமுனாநந்தா தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
2015ஆம் ஆண்டு நாய்கடிக்கு இலக்காகி 7 ஆயிரத்து 703 பேர் சிகிச்சை பெற்றனர். கடந்த ஆண்டு அந்த எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணம். நாய் கடிக்கு இலக்கானால் 10 நாள்களுக்குள் வைத்தியசாலையில் உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். கடித்த நாயைக் கொல்லக் கூடாது.

சில சந்தர்ப்பங்களில் அவற்றை அடைத்து வைத்து அவதானிக்கலாம். குறிப்பிட்ட நாள்களுக்குள் விசேட அனுமதி பெற்றுக் கொலை செய்யலாம். கடந்த ஆண்டு நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள் உரிய சிகிச்சைப் பெறாமையே காரணம் என்றார். (ற 21,ரி)

# சட்டவிரோத மணல் ஏற்றிச் சென்றவர்களுக்கு தண்டம்

தென்மராட்சி, ஜன.5
அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், ஆவணங்கள் இன்றி லான்ட் மாஸ்ரரில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு 36 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்.

உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவர் சரசாலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் தண்டம் விதித்தார்.

லான்ட் மாஸ்ரரில் மணல் ஏற்றிச் சென்றவர் நாவற்குழி, கேரதீவு வீதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் இன்றிப் பயணித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் மூன்று குற்றங்களுக்கும் தண்டம் விதித்தார்.(ற-9)

# குடாநாட்டு கத்தரி, கோவா செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கத்தரி, கோவா செய்கையில் ஈடுபடுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தையில் அவற்றுக்கான விலைகள் குறைவடைந்துள்ளமையே அதற்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வன்னி மற்றும் நாட்டின் தெற்குப் பகுதியில் இருந்து இவை பெருமளவில் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன. குடாநாட்டிலும் அதிக எண்ணிக்கையான விவசாயிகள் இவற்றைப் பயிரிட்டுள்ளனர். சந்தைக்கு அதிகளவில் கொண்டு வரப்படும் விளைபொருள்களால் விலையில் பெரும் சரிவு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-17)

# தாயின் தொலைபேசி இலக்கம் வழங்க மறுத்த மகன் கைது

## பொலிஸ் புலனாய்வாளர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.5
தாயின் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டு தொந்தரவு செய்த பொலிஸ்புலனாய்வாளர்- தொலைபேசி இலக்கம் கொடுக்காததால் மகனைக் கைது செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தாயும், மகனும் இது தொடர்பாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உள்ள புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் சுமார் 45 வயதுடைய புலனாய்வாளர் மீதே இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மது போதையில் வந்த புலனாய்வாளர் யாழ். முனியப்பர் வீதி நடைபாதைக் கடையில் பணியாற்றும் இளைஞரை காரணம் ஏதுமின்றி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றார். அங்கு யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் இளைஞரை ஒப்படைத்து தான் திரும்பி வரும்வரையில் தடுத்து வைத்திருக்குமாறு கூறிச் சென்றார்.

இளைஞர் பணியாற்றிய கடை உரிமையாளர் இளைஞரின் தாய்க்கு மகன் கைது செய்யப்பட்டார் என்று அறிவித்தார். தாய் பொலிஸ் நிலையம் சென்று மகனை ஏன் பொலிஸ் நிலையம் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டார். பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோத்தர் புலனாய்வு உத்தியோகத்தரே இளைஞரைக் கைது செய்தார் என்று பதிலளித்தார்.

அதன்பின்னரே அந்தப் புலனாய்வாளர் தாயின் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டு தொந்தரவு செய்தார் என்றும், மகன் கொடுக்காததால் அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்கின்றேன் என்றுகூறிபொலிஸ்நிலையம் கொண்டு சென்றார் என்றும்- தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட இளைஞரும், தாயும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்தனர். அந்தப் புலனாய்வாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் முன்னிலையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)

# பொதுச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிராகப் போராட்டம்



யாழ்ப்பாணம் ஜன.5
அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் உட்படப் பொதுச் சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதைக் கண்டித்து, மக்கள் விடுதலை முன்னனி (ஜே.வி.பி) பரப்புரைகளை தேசிய ரீதியாக மேற்கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் மைய பஸ்நிலையத்தில் நேற்று அந்தக் கட்சியினர் இது தொடர்பான துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு வழங்கினர். (ற-8)

# வசதிப்படுத்தும் நிலைய கட்டுமானம் விரைவில் முடியும்

யாழ்ப்பாணம், ஜன.5
பண்ணை சுற்றுலா மையத்தில் அமைக்கப்படும் வசதிப்படுத்தும் நிலையத்தின் கட்டுமானங்களை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று- யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

பண்ணைச் சுற்று வட்டத்துக்கு அண்மையில் இந்த நிலையம் அமைக்கப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள், பொதுமக்களின் வசதி கருதி உணவகம், தேநீர்ச் சாலை, கழிப்பிடம் போன்ற வசதிகளுடன் இது அமையவுள்ளது.

கடற்கரைப் பகுதியில் நடைபெறுவதால் கட்டுமானப் பணிகளில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் அவை முடிவடையும் என்று மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (ற-17)

# அரசமைப்பு விடயத்தில் த.தே.கூட்டமைப்புக்கு புளொட் ஆதரவு

## கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜன.5
அரசமைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவது என்று - தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) முடிவெடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை வவுனியா மாவட்ட தலைமையகத்தில் இடம்பெற்றது. அதன் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாகத் தீவிரமாக ஆராயப் பட்டது. அரசமைப்பு தொடர்பாகவும் பேசப்பட்டது. தீர்வு விடயத்தில் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் இருக்கின்றபோதும், முடிவு கிடைக்கும் வரை அதற்கான முயற்சியைத் தொடர வேண்டும் என்று பலரும் சுட்டிக்காட்டினர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அரசமைப்புத் தொடர்பில் எடுக்கும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது என்றுபுளொட்அமைப்பினர் தெரிவித்தனர். (ற-21)

# உடல், உள வளர்ச்சியுடனான கற்றலே சிறார்களுக்கு தேவை

அச்சுவேலி, ஜன.5
முன்பள்ளிச் சிறார்களுக்கு உடல் உள வளர்ச்சியோடு கூடியதான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் கற்றலுக்கு சகல வகையிலும் பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் அருட்திரு கலாநிதி டி.எஸ்.சொலமன் தெரிவித்தார்.
அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி ஒளி விழா முன்பள்ளி கலை அரங்கில் அருட்திரு திருமதி கதரீன் யோசப் தலைமையில் நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.
அவர் தெரிவித்ததாவது:
முறைப்படுத்தப்பட்ட கற்றல் செயற்பாடுகளின் தொடக்கம் முன்பள்ளிகளில் ஆரம்பமாகின்றன. முன்பள்ளிச் சிறார்கள் பின்பற்றல் மூலம் தமது நடத்தைகளை முன்னெடுக்கின்றனர். முன்பள்ளி ஆசிரியர்களும், பிள்ளைகளின் பெற்றோரும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும்.
முன்பள்ளி சிறார்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் முன்பள்ளிகளில் இருக்க வேண்டும். மாணவர்களுக்கான கற்றல் செயற் பாடுகள் அன் போடும் கண்டிப்போடும் கூடியதாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குப் பெற்றோர் தங்களால் இயன்ற மட்டும் உதவவேண்டும். ஆசிரியர்களுடன் நெருக்கமான தொடர்பு நிலையில் இருந்து பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டும். நல்ஒழுக்கத்தோடு கூடிய கற்றலே மேல் நிலை பெறும். அதற்கான வசதி வாய்ப்புக் கள் பிள்ளைகளுக்கு கிடைப்பதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒன்றுபட்டு உதவ வேண் டும்.-என்றார். (ந-11)

## வவுனியாவில் வீடமைப்புக்கு நேற்று அடிக்கல்

வவுனியா, ஜன.5
வவுனியா மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டு வீடமைப்பு அதிகாரசபையால் முன்னெடுக்கப்படவுள்ள 771 வீடுகள் அமைப்புக்கான அடிக்கல் அமைச்சின் செயலாளர் தயானந்தவால் நேற்று நடப்பட்டது.
மாவட்ட மேலதிக செயலாளர் தி.திரேஸ்குமார் தலைமையில் கொக்குவெளியில் இடம்பெற்ற நிகழ்வில் தேர்வு செய்யப்பட்ட மக்களுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டன.
12 திட்டங்களாக முன்னெடுக்கவுள்ள இந்தத் திட்டத்தில் முதலாவது திட்டத்துக்கான அடிக்கல்லே நடப்பட்டது. ஏனைய திட்டங்களும் இந்த ஆண்டே முன்னெடுக் கப்பட்டு நிறைவு செய்யப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.
(ந-101)

## 416 நல்லின மாடுகள் 2016 இல் இறைச்சிக்கு

கிளிநொச்சி, ஜன.5
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு மட்டும் 461 நல்லின மாடுகள் இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.
இவ்வாறு மாவட்ட கால்நடை கூட்டுறவுச் சங்க அதிகாரி தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
எம்மிடம் உள்ள தரவுகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட எண்ணிக்கையே இது. நல்லின மாடுகள் வளர்ப்புக்கு என வாங்கப்பட்டு இறைச்சியாக்கப்படும் சம்பவங்களும், தரமான பசு மாடுகளை திருடிச் சென்று இறைச்சியாக்கும் சம்பவங்களும் மாவட்டத்தில் அதிகரித்துள்ளன.
இறைச்சிக்காக கால்நடைகள் திருடப்படுவது கடந்த ஆண்டு அதிகரித்தது. நாம் தரவுகளைத் திரட்ட ஆரம்பித்தோம். போரின் முன்னர் மாவட்டத்தில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்பட்டன. தற்போது அவை 30 ஆயிரமாகக் குறைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
தரமான மாடுகள், பசுக்கள் இறைச்சியாக்கப்படுவதால் எதிர்காலத்தில் கால்நடை வளர்ப்பில் பெரும் சிக்கல்களை உருவாக்கும். சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார்.
(ந-101)

## ஆரம்ப சுகாதார நிலையத்தை சீரமைத்து இயக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 5
போரால் அழிந்துள்ள வேணாவில் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சீரமைத்து மீள இயங்க வைக்க வேண்டும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
"2007ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார நிலைய கட்டம் புதிதாக கட்டப்பட்டு வேணா வில் கிராமத்தில் சேவைகள் நடைபெற்றன. போரால் இந்தக் கட்டடம் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.
450க்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் உள்ளன. ஆரம்ப சுகாதார நிலைய சேவைகளை பெறுவதற்காக 3 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு செல்ல வேண்டி உள்ளது. சீரான போக்குவரத்து வசதிகள் இல்லை. பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சீரமைத்துத் தர வேண்டும்."-என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
"வேனாவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை உடனடியாகச் சீரமைப்பதற்கு எம்மிடம் நிதியில்லை. மாகாண சபையால் குறித்தொதுக்கப்பட்ட நிதி சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவடைந்துள்ளது. தொண்டு நிறுவனங்களிடம் இருந்து நிதி கிடைக்கும் போதோ அல்லது வேறு நிதி கிடைக்கும்போதோ ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்."-என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (ந-7)

## தென்பகுதிக்கு நெல் மூடைகள் கொண்டு செல்வதற்கு எதிர்ப்பு

### அரிசி ஆலை உரிமையாளர்கள் பொதுமக்கள் இணைந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜன.5
வவுனியா மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியங்களில் இருந்து தென்பகுதிக்கு நெல் மூடைகள் கொண்டு செல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட் டது.
பாவற்குளம் படிவம் 6 நெல் களஞ்சியத்தை முற்றுகையிட்டு அரிசி ஆலை உரிமையாளர்கள், பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
களஞ்சியசாலையில் உள்ள நெல்லை தென்பகுதிக்குக் கொண்டு செல்வதற்காக நேற்றுமுன்தினம் காலை பாரவூர்திகள் சென்றன. அதற்கு அரிசி ஆலை உரிமையாளர்களும், பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். களஞ்சியத்தில் உள்ள நெல்லை மாவட்ட அரிசி ஆலைகளுக்கே வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
"வவுனியா மாவட் உற்பத்தியை இங்கேயே சந்தைப்படுத்த வேண்டும். மாவட்டத்தில் கேள்வி இல்லாத பட்சத்திலேயே பிற மாவட்டங்களுக்கு வழங்க வேண்டும். எமது மாவட்டத்துக்கே பற்றாக்குறை காணப்படும் சந்தர்பத்தில் வெளிமாவட்டத்துக்கு எடுத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது. வவுனியா மாவட்டத்தில் போதிய நெல் இல்லாததால் 32 மில்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன. சுமார் 500 பணியாளர்கள் வேலை வாய்ப்பு இன்றித் தவிக்கின்றனர். இதற்குச் சுமுகமான தீர்வை வழங்கவேண்டும்."-என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இந்த விடயம் மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மாவட்ட செயலாளர் நெல் சந்தைப்படுத்தல் சபையினருடன் தொடர்பு கொண்டார். "நெல் வழங்க கூறுவிலை கோரப்பட்டது. அதிக விலையைக் கோரியவருக்கே வழங்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் விண்ணப்பித்தபோதும் பெறுமதிகள் குறைவாகவே கானப்படுகின்றன."- என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
அதிக விலையைக் கோரியவருக்கு 50 வீத நெல்லையும் மாவட்டத்தின் 8 மில் உரிமையாளர்களுக்கு எஞ்சிய 50 வீத நெல்லையும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும், பிற மாவட்ட வர்த்தகர்கள் கொள்வனவு செய்யும் விலைக்கே நெல் வழங்கப்படும் என்றும் இறுதியில் தீர்மானிக்கப்பட்டது. (ந-21,101)

25% Discount
on Medical Books
Purchase Medical Books
Earn Dialog Star Points
Latest Edition & New Arrivals




5th & 6th January 2017
09.00 a.m to 5.00 p.m
at
Ladssume Hall
No. 195 A.Adiyapatham Road,
Thirunelvely, Jaffna
Hot Line - 077525377
More Details Please Call us
0768245879 / 0768425878
JEYA BOOK CENTRE

# ஆலய உடைப்பின் சூத்திரதாரிகளை கண்டுபிடியுங்கள்

## துரைரெட்ணசிங்கம் எம்.பி. கோரிக்கை

மூதூர், ஜன.5

திருகோணமலை மாவட்டம் கூச்ச வெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆலயங்கள் உடைக்கப் பட்டதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப் படவேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.


ஆலயம் சேதமாக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசில் மக்கள் சாந்தி சமாதானத்தை எதிர்பார்த்து இருக்கும்போது இப்படியான விசமத்தனமான விடயங்கள் மிகவும் கண்டிக்கத்தக்க சமூக விரோதச் செயலாகும். இந்தச் செயலைமேற்கொண்டகுற்றவாளிகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அண்மைக் காலமாக நடைபெறும் சம்பவங்களை எடுத்துப் பார்க்கும் போது ஏதாவது முரண்பாடு களை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இவ் வாறான சம்பவங்களின் தொடர்ச்சியாகக் கூட இது இருக்கலாம்.

ஆலயங்கள் மட்டுமல்ல பள்ளி வாசல்கள், தேவாலயங்கள். விகாரைகள் என்பவற்றில் சேதம் ஏற்படுத்தும் சம்பவங்கள் நடைபெறாத வகையில் பொலிஸார்விழிப்பாகஇருக்கவேண்டும் - என்றார். (த-ய-40)



## சுற்றுலாப் பயணிகளால் மாசுறும் தாவரவியல்பூங்கா

நுவரெலியா, ஜன.5

நுவரெலியா - ஹக்கல தாவரவியல் பூங்காவில் குப்பைகள் நிறைந்துள்ளதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாள்தோறும் இங்கு நூற்றுக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள் பிளாஸ்ரிக் பொருள் கள் மற்றும் கழிவுகளைப் பூங்காவிலும், வீதியோரம், வனப் பகுதிகளிலும் வீசிவிட்டுச் சென்று விடுகின்றனர். இதனால் அப்பகுதிச் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படு கின்றது.

அருகாமையில் குப்பைத் தொட்டியொன்று வைக்கப்பட்டிருந்தாலும் அதனுள் குப்பைகளைப் போடாமல் வெளியிடங்களில் வீசியெறிந்து விட்டுச் செல்கின்றனர்.

அத்துடன் உணவுப் பண்டங்களை வீசுவதால் குரங்குகள், கட்டாகாலி நாய்கள் மற்றும் பறவைகள் அவற்றைக் காவிச் சென்று வீதிகளில் போடுகின்றன. யோகட் கோப்பைகள், பொலித்தின் பைகள் ஆகியவற்றில் நீர் நிறைந்து நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கும் ஆபத்தும் காணப்படுகின்றது.

எனவே, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கமாறு பிரதேசவாசிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (த-ய-43)

## போதைப் பொருளுடன் இரண்டு பெண்கள் கைது

கொழும்பு, ஜன. 5

சீதுவ பிரதேசத்தில் ஹெறோயின் போதைப் பொருளுடன் 2 பெண்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் மீரிஹான பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சீதுவைக்குப் பயணித்த முச்சக்கர வண்டியைப் பொலிஸார் சோதனை செய்தபோது அவர்கள் ஹெறோயின் வைத்திருந்தமை தெரியவந்தது. 32 மற்றும் 24 வயதுடைய பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (து)

# மட்டக்களப்பில் ஜன. 19 மாபெரும் தமிழர் விழா

## எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்பார்

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் தமிழர் விழாவுக்கு இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் முதன்மை அதிதியாக வருகை தந்து சிறப்பிக்கவுள்ளார் என அறி விக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் ஊர்வலமும், தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்றை தினம் பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லடிப் பாலத்திலிருந்து ஆரம்பமாகும் தமிழர் விழா ஊர்வலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் முதன்மை அதிதியாக மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டவுடன், தமிழர் பண்பாட்டுநிகழ்வுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (த-ய-46,47)

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை**
**இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கடைகளை**
**நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2017**

பளை பிரதேச எல்லைக்குட்பட்ட இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.02.2017 ஆம் திகதியிலிருந்து நீண்ட காலகுத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 05.01.2017 தொடக்கம் 20.01.2017 நண்பகல் 12.00 மணிவரையானஅலுவலகநேரம்.
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 23.01.2017பிற்பகல் 1.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 23.01.2017பிற்பகல் 1.30மணி
கேள்விதிறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளிபிரதேச சபை

| இல | கடை இல | ஆகக்குறைந்தகேள்வித்தொகை | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விபடிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | P.S - 01 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 02. | P.S - 02 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 03. | P.S - 03 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 04. | P.S – 04 | 330,000.00 | 33,000.00 | 2000.00 |
| 05. | P.S – 05 | 264,000.00 | 26,000.00 | 2000.00 |
| 06. | P.S – 06 | 264,000.00 | 26,000.00 | 2000.00 |
| 07. | P.S - 07 | 264,000.00 | 26,000.00 | 2000.00 |
| 08. | P.S - 08 | 231,000.00 | 23,000.00 | 2000.00 |
| 09. | P.S – 09 | 231,000.00 | 23,000.00 | 2000.00 |
| 10. | P.S – 10 | 231,000.00 | 23,000.00 | 2000.00 |
| 11. | DF.S – 11 | 211,200.00 | 21,000.00 | 2000.00 |
| 12. | DF.S – 12 | 211,200.00 | 21,000.00 | 2000.00 |
| 13. | DF.S – 13 | 211,200.00 | 21,000.00 | 2000.00 |
| 14. | DF.S - 14 | 211,200.00 | 21,000.00 | 2000.00 |

நிபந்தனைகள் :-

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை" செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் .இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை" பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு23.01.2017ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்தக் கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்துவரும் மாதம் 10ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணம் பணமாக 10% அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தவேண்டும்.
06. கேள்விச் சித்திகாரராகத் தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளவேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகரக் குத்தகைக்காரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக 03 மாதக் கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
010. மேலதிக விவரங்களை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு-

➢ DFS 11,12,13,14 ஆகிய கடைகள் கருவாட்டு வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
➢ PS - 01 தொடக்கம் PS 10 வரையானகடைகளில் உணவகம், தேநீரகம், குளிரகம், விவசாய இரசாயனம்,சிகை அலங்கரிப்பு நிலையம் போன்ற வியாபாரங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை, பளை.,

(சி.27576) (13.18.17)

## நல்லாட்சி அரசின் செயற்பாடுகளால் முஸ்லிம்கள் பீதி

*அரசைச் சாடுகிறார் அஸ்வர்*

முஸ்லிம்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று நல்லாட்சியை அமைத்த ஜனாதிபதி, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத் தேரர்களுடன் இணைந்து அவர்களின் ஆலோசனைப்படி மேற்கொள்ளும் தீர்மானங்களால் முஸ்லிம்கள் பீதியடைந்துள்ளனர்.

மேலும் மறிச்சுக்கட்டி மக்கள் தமது பூர்வீகக் காணிகளை இழக்கவுள்ளார்கள். நாடாளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் இதனை வன்மையாக எதிர்க்கவேண்டும் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வில்பத்து வன பிரதேச எல்லையை விஸ்தரித்து வர்த்தமானி அறிவித்தல் விடுமாறு உத்தரவிட்டுள்ளமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்தவின் காலத்தில்தான் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்தன என்று கூறியவர்கள் இன்று மௌனிகளாக இருக்கின்றார்கள். இன்று ஜனாதிபதியே முஸ்லிம்களுக்கெதிரான தீர்மானங்களைப் பகிரங்கமாக வெளியிட்டு வருகிறார். இவரைப் பொதுபலசேனா போன்ற இனவாத அமைப்புகள் வழிநடத்துகின்றன. நல்லாட்சியை நாடிய முஸ்லிம்கள் இன்று பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஜனாதிபதி இன்று விலங்குகளுக்கு-வனஜீவராசிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக முஸ்லிம்களின் பூர்வீக காணிகளைக் கையேற்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுமாறு உத்தரவிட்டுள்ளார். இது முஸ்லிம்களின் மனதை வெகுவாகப் பாதித்துள்ளது. பொது பலசேனா அமைப்பின் தேவைக்காகவே அரச வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. இனவாதத் தேரர்களையும் அழைத்துக்கொண்டு நீதியமைச்சர் மட்டக்களப்புக்கு பயணம் செய்து மட்டக்களப் பில் மங்களராம விகாரை அதிபதியான இனவாத தேரர் ஒருவருக்கு அங்கீகாரம் வழங்கியமை, ஜனாதிபதி இன வாதத் தேரர்களுடன் நெருக்கமாக பழகுகின்றமை எல்லாம் முஸ்லிம்களை ஜனாதிபதி மீது சந்தேகமடையச் செய்துள்ளன.

இந்நிலையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். முஸ் லிம்களுக்கெதிரான ஜனாதிபதியின் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த வேண்டும். அது சாத்தியப்படாவிட்டால் அரசை விட்டு விலகி கூட்டாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் அணிதிரள வேண்டும்-என்றார். (த)



### வில்பத்து விடயத்தில்

# இனங்களிடையே முறுகல் ஏற்படும் பெரும் அச்ச நிலை

*நெஸெபி பிரபுவிடம் சுட்டிக்காட்டினார் ஹக்கீம்*

கொழும்பு, ஜன 5

சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில், பௌத்த வழிபாட்டுத் தலங்கள் அங்கு காணப்பட்டதற்கான நினைவுச் சின்னங்களும், தடயங்களும் இருப்பதாக கூறிக்கொண்டு சில பேரினவாத, தீவிரவாத சக்திகள் மேற்கொண்டு வரும் முயற்சிகளால் இனங்களுக்கிடையிலான முறுகல்களும், விரிசல்களும் அதிகரிப்பதற்கான அச்சம் நிலவுவதாகப் பிரிட்டன் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நெஸெபி பிரபுவிடம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பரபரப்பான நிலைமையை அரசு உரிய முறையில் தலையிட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியது அவசியமென்றும் அமைச்சர் கூறினார்.

பிரிட்டன் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நெஸெபி நேற்று முன்தினம் நண்பகல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சர் இது தொடர்பில் பிரபுவிடம் தெரிவித்ததாவது:

முன்னொருபோதும் இல்லாதவாறு சிறுபான்மை மக்கள் நூற்றாண்டு காலங்களாகப் பாரம்பரியமாக வசித்து வரும் பிரதேசங்களில் தமது வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளன எனக் கூறிக்கொண்டு அரசைத்திசைதிருப்பும் வகையில் சமயம் சார்ந்த தீவிர சிந்தனைப் போக்குள்ள ஒரு சாரார் தடயங்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் கைங்கரியத்தில் இறங்கியிருக்கின்றார்கள்.

வில்பத்து வனப்பிரதேசத்திற்கு அண்மையில் முன்னர் பரம்பரையாக வசித்த முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டபோது அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதாகவும், ஒரு சாரார் வில்பத்து வனப்பிரதேசத்தை மீண்டும் விஸ்தரித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முற்படும் அளவுக்கு ஜனாதிபதியைத் தவறாக வழிநடத்தியுள்ளனர்.

போர் முடிந்த பின்னரும் கூட அதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றுவது மந்த கதியிலேயே நடைபெறுகின்றது. ஆனால் அரசும், மீள்குடியேற்றம் தொடர்பான அமைச்சும் இந்த விடயத்தில் கரிசனையாகவே இருக்கின்றன.

எதிர்பார்த்தபடி வெளிநாடுகளிலிருந்து இதற்காகப் போதியளவு நிதியுதவிகள் கிடைப்பதில்லை. இந்தியா ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டமொன்றைச் செய்து வருகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறும்போது தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாக நேரிடுகின்றது. பொதுவாக வடக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் வியாபாரம், தையல் தொழில், விவசாயம் போன்றவற்றில் பாரம்பரியமாக ஈடுபட்டு வந்தவர்கள் என்ற காரணத்தினால் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன், 25ஆண்டுகள் இடம்பெயர்ந்து வாழ்கின்ற சூழ்நிலையில் பரம்பரைத் தலைமுறை இடைவெளியின் விளைவினால் இளைஞர்களும், யுவதிகளும் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளது-என்று கூறினார். (த)

## சுகாதார அமைச்சின் இணையம் முடக்கம்

*விசாரணைகள் ஆரம்பம்*

கொழும்பு, ஜன 5

சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் முடக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவின் சிரேஷ்ட பாதுகாப்புப் பொறியியலாளர் ரொஷன் சந்திரகுப்த குறிப்பிட்டார்.

இணையத்தளங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்காமையே இதுபோன்ற சைபர் தாக்குதல்களுக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இரவு 09.00 மணியளவில் சுகாதார அமைச்சின் இணையத்தளம் முடக்கப்பட்டதுடன் இணையத்தளத்தின் முகப்பில், எம்சீஏ எனும் முஸ்லிம் சைபர் ஆமி என்ற இலச்சினை பொறிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

எனினும் இணையத்தளத்தில் இருந்த தரவுகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என, சுகாதார அமைச்சினால் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இந்த விடயம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு ஆகியோரிடம் முறைப்பாடு வழங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## புதிய சரணாலயங்களை பிரகடனப்படுத்த அனுமதி

கொழும்பு, ஜன 5

தேசிய பூங்காக்களையும் புதிய வனஜீவராசிகள் சரணாலயங்களையும் பிரகடனப்படுத்தல் மற்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களின் எல்லைகளை மீளமைத்தல் ஆகியவை தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, சரணாலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கலாவெள, கஹல்ல, பல்லேகலை ஆகிய சரணாலயங்களைத் தேசிய பூங்கா தரத்துக்கு உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வனவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளே அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

காயங்கேணி பிரதேசத்தைக் கடல்சார் இயற்கைக் காப்பிடமாக பிரகடனப் படுத்துவதற்கும், கொட்டுஅத்தாவல பிரதேசத்தை சரணாலயமாகவும், அக்குரல, கொடிகஹவத்த ஆகியவற்றைப் புதிய வனசீவராசிகள் சரணாலயங்களாகவும், குடா ராவனா மகா ராவனா பிரதேசத்தை கடல்சார் சரணாலயமாகவும் பிர கடனப்படுத்துவதற்கும், மாதுகங்கை சரணாலயத்தின் எல்லைகளை மீளமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த)

## தங்காலையின் விருத்திக்கு உதவச் சீனா விருப்பம்

தங்காலை நகரை அபிவிருத்தி செய்வதற்குப் புதிய திட்டத்தின் கீழ் சீனா உதவியளிக்க விரும்பம் தெரிவித்துள்ளதாகக் கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

தங்காலை அபிவிருத்தி தொடர் பாக இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராச்சி அண்மையில் சீனா சென்றிருந்தவேளை பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த நகரைத் தென் மாகாணத்தின் சுற்றுலா நிலையமாக அபிவிருத்தி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த நடைமுறையில் வெளிநாட்டவர்களைக் கவர்ந்திழுக்கக் கூடியதாகத் தங்காலையை மாற்றியமைப்பது அரசின் நோக்கமாகும் என்றும், நகரை நாடும் முதலீட்டாளர்களுக்குப் பரந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

## தரமற்ற அரிசியை கண்டறிய சிறப்புச் சுற்றிவளைப்புக்கள்

கொழும்பு, ஜன 5

மனித நுகர்வுக்கு தகுதியற்ற அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் சிறப்புச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சித திலகரத்னவின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சில வர்த்தக நிலையங்களில் மனித நுகர்வுக்குத் தகுதியற்ற அரிசிகள் விற்பனை செய்யப்படுவதாக, அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியானமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் சிறப்புச் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து ஒருதொகை அரிசி கைப்பற்றப்பட்டுள்ளதோடு, இவற்றின் மாதிரிகளைப் பரிசோதனைக்காக அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் கூட்டாசியிலும்

## அம்பாறை முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு சுட்டிக்காட்டு

அம்பாறை, ஜன.5

நம்பி உருவாக்கிய நல்லாட்சியிலும் முஸ்லிம்கள் நம்பிக்கையீனம் கொள்ளத்தக்க செயற்பாடுகள் தலை தூக்குகின்றன. இந்த இக்கட்டான நிலையில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளை ஒத்த கருத்துக்களுடன் எதிர்த்துக்குரல் எழுப்ப முன்வர வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு தெரி வித்தது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

மகிந்த அரசு காலத்தில் இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகள் தூண்டப்பட்டுள்ளன. இதற்கென இனவாதிகள் தீனி போட்டும் வளர்க்கப்பட்டனர். இனவாதிகள் இஸ்லாத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டமை மட்டுமன்றி எமது இறை இல்லங்களிலும் ஏன் அளுத்கம போன்ற பகுதிகளிலும் எம் முஸ்லிம் மக்கள் மீதும் சொத்துக்கள் மீதும் தமது மூர்க்கத்தனச் செயற்பாடுகளைக் காட்டி வந்தனர்.

முஸ்லிம் மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றே இந்த அநீதிகளுக்கு விடிவைத் தரும் என்ற திடமான முடிவுக்கு வந்தனர். சகோதரத் தமிழ் மக்களும் மகிந்த ஆட்சி மீது கொண்ட வெறுப்பும் நம்பிக்கையீனமும் சிறுபான்மை சமூகங்களின் ஏகோபித்த உணர்வுகள் வெளிப்படக் காரணமாகின. இதன் வெளிப்பாடாக ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட்டு நல்லாட்சி அரசு நாட்டில் மலர்ந்தது.

நல்லாட்சியிலும் சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம்கள் ஏமாற்றமும் நம்பிக்கையீனமும் கவலையும் கொள்ளத்தக்க சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சம்பவங்களும் முஸ்லிம் களுக்கெதிரான இனவாத சக்திகளின் கொட்டங்களும் தொடர்ச்சியாக மேலோங்க வழிவிட்டிருப்பது முஸ்லிம்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

சட்டத்தையே மதிக்காத மட்டக்களப்பு தேரர் மற்றும் பொது பல சேனவின் ஞானசாரதேரர் போன்றவர்களுக்கு "நற்சான்றிதழ்" கொடுக்க முற்பட்ட நீதி அமைச்சரின் அண்மைய நடவடிக்கைகள், முஸ்லிம்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சியாவில்பத்துவன எல்லையை விரிவுபடுத்தும் திட்டம், புதை பொருள் திணைக்களத்தால் வேலி போடப் பட்டு வெளியார் செல்வது தடைசெய் யப்பட்ட பொத்தானை பள்ளிவாசல் விவகாரம், அந்தப் பள்ளிவாசலில் இடம் பெற்றுள்ள பெறுமதியான பொருள்களின் கொள்ளைச் சம்பவம் என்பன புதிய சந்தேகங்களையும் அதிர்ச்சியையும் முஸ் லிம்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

இவற்றை நல்லாட்சி அரசு நீதியான முறையில் கவனத்தில் கொண்டு தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைகள் கட்சி வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயற் பட வேண்டியதை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும். எமது பலத்தை எம் ஒற்றுமை மூலம் நிரூபித்து சமூகத்துக்கு எதிரான அநீதிகளைக்களையும் ஒருமித்த குரலாக முஸ்லிம் அரசியல் தலைமைகள் திகழவேண்டும்.-என் றுள்ளது.

(ந-30)

## நண்பியைக் காப்பாற்ற முயன்ற சிறுமி படுகாயம்

முல்லைத்தீவு, ஜன.5

தன்னுடன் சேர்ந்து விளையாடிய அயல் வீட்டுச் சிறுமி மீது சீமெந்துத் தூண் விழப்போவதைக் கண்டு காப்பாற்றச் சென்ற சிறுமி காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை முல்லைத் தீவு, பூதன்வயலில் நடந்துள்ளது. இராசேந்திரம் மதி (வயது -9) என்ற சிறுமியே காயமடைந்தார்.

அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது தூண் விழப்போவதைக் கண்ட மதி அவரைக் காப்பாற்றியுள்ளார். எனினும் மதி மீது தூண் சரிந்தது. அவர் படுகாயமடைந்தார். அவர் உடன டியாக மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ந-7)

## காணிப் பதிவகத்துக்கு ரூ.2 கோடி வருமானம்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.மாவட்ட காணிப் பதிவகத்தில் 2016 ஆண்டு முத் திரைத் தீர்வை வருமானம் இன்றிய வருமானமாக 2 கோடியே 27 இலட்சத்து 950 ரூபா ஈட்டப்பட்டுள்ளது என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

உறுதிப் பதிவு, பிரதி ஆக்கல், சுருக்கப் பிரதி பெறல் நடவடிக்கையின்போது பெறப்படும் கட்டணங்களின் மூலமே இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது.

31 ஆயிரத்து 338 உறுதிகள் பதிவுக்காகக் கிடைத்தன. 8ஆயிரத்து 117 பிறப்பு, இறப்புச் சான்றிதழ் மொழிபெயர்ப் புக்கள் கிடைத்தன. 17ஆயிரத்து 946 சுருக்கப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. இவற்றின் மூலமான வருமானம் மத்திய அரசுக்கானது. (ந-101)

## சுகாதார சேவைகளை வழங்க ஆளணி இன்மையே தடை



யாழ்ப்பாணம், ஜன.5

போருக்கு முன்னரான காலத்தில் வடக்கில் வைத்தியர்களும், சுகாதார ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். மக்களிடமிருந்து ஆதரவும் வலுவான நிலையும் கிடைத்தால் சிறந்த சுகாதார சேவையை வழங்க முடிந்தது. தற்போது அவ்வாறான ஒரு நிலை இல்லை.

இவ்வாறு வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியின் கீழ் அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "வடக்கிலுள்ள சுகாதார தேவையானது ஏனைய பிரதேசங்களை விட அதிகமானது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆளணி பற்றாக்குறை பெரும் தடை யாக உள்ளது. நிதியொதுக்கீடும் போதுமானதாக இல்லை. போரால் அங்கவீனமடைந்த மற்றும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட் டவர்கள் வடக்கில் அதிகமாக வாழ்கின்றனர். அவர்களின் நலன் கருதி பல புதிய சுகாதார திட் டங்களை முன்னெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது."- என்று அவர் தெரிவித்தார். (ந-21)

## தாயுடன் தங்கி இருந்தவர் மகளை தவறாக நடத்த முயன்றதில் கைது

வவுனியா, ஜன.5

தாயாரால் உறவினர் என்று வீட்டுக்கு அழைத்து வரப்பட்டவர் மகளுடன் தவறாக நடக்க முயற்சித்துள்ளார். அந்த நபரும், உடந்தையாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் யுவதியின் தாயும் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

3 பிள்ளைகளின் தந்தையான வெளிநாட்டுப் பிரசை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

நோர்வேயில் இருந்து விடுமுறைக்கு வந்த ஒருவர் வவுனியா, சிதம்பரபுரத்தில் வீடு ஒன்றில் தங்கியிருந்தார். அந்த வீட்டில் வசிக்கும் பெண்ணின் உறவினர் என்று தெரிவித்தே அவர் அங்கு தங்கியிருந்தார். பெண்ணுக்கு 18 வயதுடைய மகள் ஒருவரும் உள்ளார். உறவினர் என்று கூறிக் கொண்டு வெளி நாட்டில் இருந்து வந்தவர் கடந்த மாதம் ஆசிக்குளத்தில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று தங்கினார். அவருடன் யுவதியின் தாயும் சென்றுவிட்டார். அந்தப் பெண்ணின் மகள் சிதம்பரபுரத்தில் உள்ள தனது அம்மம்மாவுடனேயே வசித்தார். அவரின் தாய் தான் புதிதாக வாடகைக்கு எடுத்திருக்கும் வீட்டில் வசிக்க வேண்டும் என்று மகளை வலியுறுத்தி வந்துள்ளார். கடந்த புத்தாண்டு தினத்தன்று மகள் தன் தாய் ஆசிக்குளத்தில் வாடகைக்கு வசிக்கும் வீட்டில் வசிக்கச் சென்றார்.

நோர்வேயில் இருந்து வந்தவர் அன்றைய தினம் இரவு 7 மணியளவில் யுவதியுடன் தவறாக நடக்க முயற்சித்தார் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. - என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வந்தவரும், யுவதியின் தாயும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தாயின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். மற்றைய சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-21)

# வடக்கு போக்குவரத்து அமைச்சரின் பணிப்புரையை ஏற்கோம்

## யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

தனியார் பஸ் வண்டிகளுடைய போட்டித்தன்மை தொடர்பாக தனியார் பேருந்து வழித்தடத்தில் உள்ள (ஆனைக்கோட்டை) நேரக் கணிப்பாளரை சந்தித்த வடக்கு போக்குவரத்து அமைச்சர் போட்டி போட்டு ஓடும் பஸ் வண்டிகள் பற்றிய முறைப்பாட்டை வடக்கு மாகாண தனியார் பேருந்து சங்கங்களின் ஒன்றியத் தலைவர் ஊடாக தெரியப்படுத்த வேண்டும் என்று பணித்துள்ளார். இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் கெங்காதரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

எமது யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகள் இணையம் இன்று வரை இலங்கை தனியார் பஸ் சங்கங்களின் ஒன்றியத்தின் கீழ் இயங்கவில்லை.

கடந்த மாதம் ஆனைக்கோட்டைக்குச் சென்ற அமைச்சர், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.சிவபரம், காரைநகர் மற்றும் இளவாலை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரைடியானார்.

காரைநகரில் இருந்து 786 வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்துகள் ஆனைக்கோட்டை சந்தியில் 782 வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்துகளுடன் இணைந்து பயணிக்கின்றன. பேருந்துகள் ஒரே நேரத்தில் சந்திப்பதால் அவைகளுக்கிடையே போட்டித்தன்மை ஏற்படுகின்றது. போட்டியிடும் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்யப்படும். அவர்கள் ஒருபோதும் சேவையில் ஈடுபட முடியாது. போட்டித்தன்மையோடு செயற்படும் பேருந்துகள் பற்றிய விவரங்களை ஒன்றியத் தலைவர் ஊடாக எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த நேரக் கண்காணிப்பாளருக்கு பணித்துள்ளார்.

மூன்று சங்கங்கள் சார்ந்த சிற்றூர்திகளான 782, 787, 788 என்பன ஒரே பாதையில் சேவையில் ஈடுபடும் நிலையில் எதுவித பயணிகள் சேவை அனுமதியோ, தே.போ.ஆணைக் குழுவால் அங்கிகரிக்கப்பட்ட பயணக் கட்டணமோ இன்றி 786 பாதையில் பேருந்துகளைச் சேவையில் ஈடுபட அனுமதிப்பதால் வேறு சங்கங்களை சார்ந்த பஸ் வண்டிகளும் உரிய வழித்தடம் இன்றி அதே வழித்தடத்தை பின்பற்றி சேவையில் ஈடுபட ஏதுவாக அமையும்.

786 வழித்தட பேருந்துடன் ஏனைய பேருந்துகள் போட்டி போடுகின்றன என்பதை ஏற்றுகொள்ள முடியாது. 5 மாவட்டங்களில் இருந்தும் தூர சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டு உருவாக்கப்பட்டதே வட இலங்கை தனியார் பஸ் சங்கங்களின் ஒன்றியம். யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகளின் உரிமையாளரான நாம் உள்ளக சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் எனக் காரணம் காட்டி புறக்கணிக்க்ப்பட்டோம்.

அமைச்சருடைய பணிப்புரையை ஏற்றுகொள்ள முடியாது. இது தொடர்பாக தாய்ச் சங்கத்துடனேயே அமைச்சர் கலந்துரையாடியிருக்க வேண்டும். கிளைச்சங்கங்களுடன் கலந்துரையாடுவது பொருத்தமற்றது.-என்றார்.

(ந-21)

## விபத்தில் மூதாட்டி சாவு

மட்டக்களப்பு, ஜன.5
மட்டக்களப்பு - ஏறாவூர் நெடுஞ்சாலை தன்னாமுனை என்ற இடத்தில்நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபப் பெண்மணி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
தன்னாமுனை களப்பு வீதியைச் சேர்ந்த வடிவேல் அன்னலெட்சுமி (வயது-72) என்பரே இவ்வாறு உயிரிழந்தார்.
இரவு உணவை வாங்குவதற்காகக் கடைக்குப் போன இவர் வீதியைக் கடக்கும் போது ஏறாவூரிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்றமோட்டார்சைக்கிளில் மோதுண்டார்.
படுகாயமடைந்த இவர் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் ஏற்கனவே உயிர் பிரிந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.
இதுதொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.
(த-ய-46,47)

## சமுர்த்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள படவுள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.
வறுமை ஒழிப்புத் தொடர்பான ஜனாதிபதியின் இலக்குகளை நிறைவேற்றும் நடைமுறையில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சிடம் அதிகளவிலான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் நிலவும் 5,000 வெற்றிடங்களை நிரப்புவது அவசியம்.
சமுர்த்தியின் மூலம் வங்கி வலைப்பின்னலும், சமூகப் பாதுகாப்பு இயக்கமும் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டமும் சிறப்பான முறையில் கட்டியெழுப்பப்பட்டன.
எவ்வாறேனும் கடந்த 10 ஆண்டுகளில் சமுர்த்தி வங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பணத்தைத் தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய முறையில் வழங்க முடியாமல் போனது. இதற்கு முகாமைத்துவத்தின் குறைபாடு காரணம்-என்றார். (கு)

# இனவாதிகளுடன் கூட்டுச் சேர்வோர் மகிந்த போன்றே நிராகரிக்கப்படுவர்

## கிழக்கு முதலமைச்சர் கூட்டாட்சிக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 5
பெரும்பான்மை மக்களைத் திருப்திப்படுத்துவதன் ஊடாக மாத்திரம் எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெறலாம் என அரசு நினைத்தால் அது ஒருபோதும் நிறைவேறாது எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.



பெரும்பான்மை மக்களை முதன்மைப்படுத்திச் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை நசுக்க முயன்ற மகிந்த ராஜபக்சவுக்கு நேர்ந்த கதி அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் என அவர் குறிப்பிட்டார்,
அவர் தெரிவித்ததாவது:
தமது தேர்தல் தொகுதிகளில் பெரும்பான்மையினர் அதிகம் உள்ளதால் அவர்களும் கடும்போக்காகச் சிந்திப்பார்கள் எனக் கருதி இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களைத் திருப்திப்படுத்தலாம் என முட்டாள்தனமாகக் கணக்குப் போட்டு இன்று சில அமைச்சர்கள் செயற்பட்டு வருகின்றனர்.
அண்மைக்காலமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் பொதுபல சேனா அமைப்பினரிடையே மோதல்கள் உருவாகியுள்ள நிலையில் அவர்களின் இருப்புக் குறித்தே தற்போது பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. எனவே அவர்களுடன் கூட்டணி சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது நகைப்புக்குரிய விடயம்.
இனவாதிகளை அரவணைக்கும் அமைச்சர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது பரிவாரங்கள் போன்று மக்களால் நிராகரிக்கப்படும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. தமது அரசியல் சுயலாபத்துக்காக நீதியமைச்சர் போன்றோர் இன்று இனவாதிகளுடன் கூட்டுச் சேர்வது நாட்டுக்கு உகந்த விடயமல்ல-என்றார். (கு)



## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரை சந்தித்தார் சீனத் தூதரக ஆலோசகர்

கொழும்பு, ஜன.5
சீனத் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றுள்ள சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் மூத்த கேணல் சூ ஜியான் வேய் நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைச் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, விவகாரங்கள் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன், சீன தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கலந்துரையாடினார்.
கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணி யாற்றிய மூத்த கேணல் லி செங்லிங் நாடு திரும்பவுள்ள நிலையிலேயே, கேணல் சூ ஜியான்வேய் கொழும்பில் பணியைஏற்றுக்கொண்டார்.
இந்தச் சந்திப்பில், கேணல் சூ ஜியான்வேயுடன், கேணல், லி செங்லிங்கும் கலந்து கொண்டார். (கு)

## தாயும் மகளும் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 5
பண்டாரகம - களுத்துறை வீதியில், முச்சக்கரவண்டி மற்றும் தனியார் பஸ் என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன் இன்னும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.
டி.ஏ.லீலாவதி (வயது 69) மற்றும் ஏ.பிரியங்கனி (வயது 49) ஆகிய தாய், மகள் இருவருமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். முச்சக்கரவண்டியைச் செலுத்திச் சென்ற பெண்ணின் கட்டுப்பாட்டை மீறிய முச்சக்கரவண்டி, எதிர்த் திசையில் வந்த பஸ்ஸில் மோதியுள்ளது.
களுத்துறை வடக்குப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (கு)

## கைதிகளின் விடுதலையை இழுத்தடிப்பது நல்லதல்ல

### வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5
அரசியல் கைதிகள் விடயத்தை, மேலும் இழுத்தடிப்புச் செய்வது நல்லாட்சிக்கு நல்லதல்ல என்று, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.
கண்டி, பல்லேகலயில் அமைந்துள்ள தும்பறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் 13 பேரை, செவ்வாய்க்கிழமை பார்வையிடச் சென்ற அவர், அவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இதன் பின்பு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள், நல்லாட்சியிலும் தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று தமது மனக் குமுறல்களை வெளிப்படுத்தினர்.
குறிப்பாக, தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை விசாரித்து முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தும், வழக்குகள் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றன. தமது காலத்தையும் நீதிமன்றத்தின் காலத்தையும் வீணடிப்பதே நடைபெற்று வருவதாக, அவர்கள் என்னிடம் சுட்டிக்காட்டினர்.
எனவே, தமது வழக்குகளை துரிதமாக விசாரித்து முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.
சிலர், இந்த நிலமையை தடுப்பதற்கும் வழக்குகளின் இழுத்தடிப்பைத் தடுப்பதற்கும் வேறுவழியின்றி, செய்யாத சில குற்றங்களைத் தாம் செய்ததாகக் கூறி ஒப்புக்கொண்டுள்ளதுடன், வழக்கையும் முடிவுக்குக் கொண்டு வந்ததாகத் தெரிவித்தனர்.
எனவே, நல்லாட்சி அரசு, அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (கு)

## இலங்கை வர்த்தகர்களுக்கு புதிய வாய்ப்புக் கிடைக்கும்

### ஜனாதிபதியின் ஈரான் பயணம் இதற்கு உதவும் என்கிறார் ரிசாத்

கொழும்பு, ஜன.5
ஜனாதிபதி தலைமையிலான உயர்மட்ட தூதுக்குழு இந்த மாத இறுதியில் ஈரானுக்கு பயணம் செய்யவுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
இந்தப் பயணத்தின் மூலம் இலங்கை வர்த்தகர்களுக்கு தமது வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகள் ஏற்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.
கைத்தொழில் வர்த்தக அமைச்சின் அதிகாரிகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, முதலீட்டு ஊக்குவிப்புச் சபை, வர்த்தகத் திணைக்களம், தேயிலைச் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம், தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோரை அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஈரானியப் பிரதித் தூதுவர் எம்.ஆர் அஹமதியும் கலந்து கொண்டார்.
அமைச்சர் தெரிவித்ததாவது:
ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகள், முதலீடு மற்றும் உல்லாசப் பயணத்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதே ஜனாதிபதியின் இந்தப் பயணத்தின் நோக்கம். ஈரானுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள் அண்மைய காலங்களில் பலமடைந்துள்ள போதும் ஜனாதிபதியின் பயணத்தின் பின்னர் இலங்கை வர்த்தகர்களுக்குப் புதிய உத்வேகம் பிறக்கும்-என்றார். (கு)



# கடற்படைக்கு 263 கோடி ரூபா வருமான உள்வருகையாக கிடைத்துள்ளது

**கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலமான நிதி ஈட்டமாக கடந்த ஆண்டில் பதிவானது**




> "காலி மற்றும் கொழும்பிலுள்ள கடற்படை நடவடிக்கைப் பிரிவுகளின் ஊடாக ஆயுதங்களை பொறுப்பேற்றல், களஞ்சியப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பாதுகாப்பு சேவைகளை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பாதுகாப்புப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது"

அவன்காட் நிறுவனத்தின் கீழான மேற்பார்வையில் இருந்துவந்த கடல் சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கைக் கடற்படை ஏற்றுக்கொண்டதன் பின்பாக அரசுக்கு கிடைத்துள்ள அண்ணளவான வருமான ஈட்டமாக 263 கோடி ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

குறிப்பாக கடந்த ஒரு வருட காலப்பகுதியிலேயே மேற்படி தொகையை கடற்படையினர் நிதி ஈட்டமாக பெற்றுக் கொண்டுள்ளமை நோக்கத்தக்கது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 6371 கடல் நடவடிக்கைகளை கடற்படை மேற்கொண்டுள்ளது.


இவற்றுள் 5928 கடல்சார் நடவடிக்கைகள் காலி துறைமுகம் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக 443 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி அவன்காட் நிறுவனத்தின் கீழான மேற்பார்வையில் இருந்துவந்த கடல் சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடற்படை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் இதுவரை 7457 கப்பல் சார்ந்த நடவடிக்கைகளை கடற்படை மேற்கொண்டுள்ளது. அன்றிலிருந்தான வருமானமாகவே மேற்படி தொகை மதிப்பீடு கடற்படையால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு கடமைகளை நிறைவேற்றியதன் ஊடாக ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ள வருமானமானது நேரடியாக அரச ஒருங்கிணைந்த நிதியத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எச்.ரி.சி நிறுவனத்தின் புதிய அதிதிறன் பேசி அறிமுகம்

நுட்பம்




தாய்வானைச் சேர்ந்த எச்.ரி.சி நிறுவனம் தனது தயாரிப்பாக புதிய அதிதிறன்பேசியினை சந்தைக்கு அறிமுகம் செய்யவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி எச்.ரி.சி நிறுவனத்தின் புதிய அதிதிறன் பேசியானது. எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாகவும் அதிதிறன் பேசியானது எச்.ரி.சி அல்ட்ரா என்பதான நாமம் கொண்டு அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.முன்னதாக எச்.ரி.சி ஓன் நோட் என அழைக்கப்படலாம் என்ற தகவல் சொல்லப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய அதிதிறன் பேசியானது 6.0 இன்ச் டிஸ்ப்ளேயை கொண்டுள்ளது. இவற்றுக்கு இயைபூக்கமான காணொலி அடாப்டிவ் ஆடியோ திரையைத் தொழில்நுட்பம் வழங்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பம் மூலம் நாம் இருக்கும் சூழலுக்கு ஏற்ப சத்தத்தை மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.அத்துடன் அப்பிள் நிறுவனத்தை போன்றதான 3.5 எம்.எம் ஆடியோ ஜாக் இதில் நீக்கப்படும் என கூறப்படுகிறது.

மேலும் எச்.ரி.சி நிறுவனம் மூன்று அதிதிறன் பேசிகளின் தயாரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





# தென்சீனக் கடல் பகுதியில் பதற்றம்
# சீனாவின் போர் ஒத்திகை காரணம்

## உள்நோக்கம் கொண்டது என்று ஜப்பான் சாடல்
## பன்னாட்டு சட்டத்துக்கு உட்பட்டது என்றது சீனா

தென்சீனக் கடல் பகுதியில் சீன கடற்படை போர்க் கப்பல்கள் போர் ஒத்திகையில் ஈடுபட்டதன் காரணத்தால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பன்னாட்டு கடல் போக்குவரத்தின் முக்கிய பாதையாக திகழும் தென்சீனக் கடல் பகுதி முழுவதையும் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதேபோல அந்த பிராந்தியத்தில் அமைந்துள்ள தைவான், தங்களின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் சீனா வாதிட்டு வருகிறது.

இந்த இருவிவகாரங்களிலும் உலக நாடுகள் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளன. தென்சீனக் கடல் பகுதி பன்னாட்டு எல்லைக்கு உட்பட்டது என்று அமெரிக்கா வாதிட்டு வருகிறது. தங்கள் கடல் பகுதியை சீனா ஆக்கிரமித்து வருகிறது என்று வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மொத்தத்தில் உலக அரசியல் போக்கைத்தீர்மானிக்கவல்லமுக்கிய சக்திகளில் ஒன்றாக தென்சீனக் கடல் பகுதி மாறியுள்ள நிலையில், குறித்த பகுதியில் சீனா நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது.

சீன கடற்படையைச் சேர்ந்த விமானம் தாங்கி போர்க்கப்பலான லியானிங் உட்பட ஏராளமான போர்க் கப்பல்கள் போர் பயிற்சியில் ஈடுபட்டன. தென்சீனக் கடல் பரப்பில் தற்போது நிலவும் மோசமான வானிலையிலும் லியானிங் கப்பலில் இருந்து போர் விமானங்கள், உலங்கு வானூர்திகள் மேலெழும்பி பறந்து குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்கின. இந்தத் தகவல்களை சீனகடற்படை உறுதி செய்தது. எனினும் இது வழக்கமான போர் பயிற்சி, பன்னாட்டு சட்டத் துக்கு உட்பட்டு பயிற்சியில் ஈடுபட்டு வருகிறோம் என்றும் சீன கடற்படை தெரிவித்தது.

சீனாவின் போர் ஒத்திகை உள்நோக்கம் கொண்டது. தென்சீனக் கடல் பகுதியை அபகரிக்க சீனா முயற்சிக்கிறது என்று தைவான், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

சீனாவுக்கு சவால் வழங்கும் நாடுகளில் ஒன்றான இந்தியா, அண்மையில் அக்னி 4, அக்னி 5 ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதித்தது. இந்த நிலையில் தனது வலிமையைப் பறைசாற்றும் வகையில் இந்தப் போர்ப் பயிற்சியை சீனா மேற்கொண்டிருக்கலாம் என்று சில பன்னாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டின. (ம-எ)

# சுத்தப்படுத்த
# றொட்றிக்கே

மனிலா, ஜன. 5

"கடந்த ஆறு மாதத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் ஆகியவற்றின் மூலம் பிலிப்பைன்ஸ் சுத்தப்படுத்தப்பட்டது." இவ்வாறு தெரிவித்தார் பிரிப்பைன்ஸின் ஜனாதிபதியான றொட்றிக்கோ டுடேர்தே.

பிரிப்பைன்ஸில் கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜூன் மாதம் ஆட்சிப் பீடம் ஏறினார் டுடேர்தே. போதைக்கு எதிராகவே எனது நடவடிக்கைகள் அமையும், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லப்படுவர் என்பது டுடேர்தேயின் தேர்தல் முழக்கமாக அமைந்தது.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றது முதல், தான் தெரிவித்தவற்றை நிறைவேற்ற ஆரம்பித்தார். இதுவரை 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 9 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தாமகவே செய்னு பொலிஸில்



# சிலியில் காட்

சான்ரியாகோ, ஜன.5

தென்னமரிக்கக் கண்டத்தில் அமைந்துள் தற்பொழுது காட்டுத் தீ மிக விரைவாகப் வல்பரைசோ பகுதியில் கடந்த திங்கட் காட்டுத் தீ கட்டுக்குள் அடங்காமல் மிக வி வருகிறது. இதுவரை 100 வீடுகள் எரிந்து 400 பேர் வீட்டை விட்டு வெளியேறியுள்ள



# தி.மு. கழக செயல் தலைவராக ஏகமனதாக ஸ்ராலின் தெரிவு

சென்னை, ஜன. 5

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி வயது முதிர்வு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக ஓய்வு எடுத்துவரும் நிலையில், குறித்த கட்சியின் செயல் தலைவராக நியமிக்கப்பட்டார் ஸ்ராலின்.

தி.மு. கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்றது. தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்து கொள்ளவில்லை.

எனவே பொதுச்செயலாளர் அன்பழகன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். கருணாநிதியின் வயது முதிர்வு மற்றும் உடல் நிலைகளைக் கருத்தில் கொண்டு கட்சியின் செயல் தலைவராக ஸ்ராலின் தெரிவானார்.

முன்னதாக கூட்டத்தின் ஆரம்பத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ ஆகியோரின் மறைவுக்கு இரங்கலும் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

## அதிகளவில் வாசிக்கப்படுகிறது ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு

பெர்லின், ஜன. 5

ஜேர்மனின் சர்வ அதிகாரி என்று அறியப்படும் ஹிட்லரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்பும் 'மெயின் காம்ப்' என்ற சுயசரிதை நூல், ஜேர்மனில் அதிக அளவில் விற்பனையாகிறது.



ஹிட்லர் சிறையில் இருந்தபோது அவரால் எழுதப்பட்ட இந்தப் புத்தகம் 1925 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1926 ஆம் ஆண்டு இரண்டாவது பாகம் வெளியிடப்பட்டது. 1945 ஆம் ஆண்டு வரை மொத்தம் ஒரு கோடி பிரதிகள் அச்சிடப்பட்டன. புதிய உரை விளக்கத்துடன் மீள அச்சிடப்பட்டு கடந்த வருடம் ஜனவரி மாதம் 'மெயின் காம்ப்' வெளியிடப்பட்டிருந்த நிலையில் கடந்த வருடம் மட்டும் 85 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன என்று ஜேர்மனின் வார இதழ் ஒன்று குறிப்பிட்டது. (ம-எ)



கியூபப் புரட்சியின் 58 ஆவது ஆண்டு நினைவுதினம் கடந்த திங்கட்கிழ அரங்கேறிய இந்த நிகழ்வில், ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து செ அணிவகுப்புகளுடன், கியூபா புரட்சியின் போது போராளிகளை ஏற்றிச்

# ...தப்பட்டது பிலிப்பைன்ஸ்; ...கோ டுடேர்தே அறிவித்தார்



சரணடைந்துள்ளனர். மில்லியன் கணக்கான வீடுகளும் கட்டடங்களும் சோதனையிடப்பட்டன. தனது ஆறு மாத செயற்றிட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே டுடேர்தே இவ்வாறு தெரிவித்தார்.

போதைப்பொருளில் இருந்து தற்போது நாடு பாதுகாப்பாக இருக்கிறது. பிலிப்பைன்ஸ் அரசு போதையை இயலுமானவரை இல்லாமல் செய்துள்ளது. போதையற்ற நாட்டை உருவாக்க அடித்தளம் இடப்பட்டது. போதைப் பொருள் கடத்தல்காரர்கள், சூத்திரதாரிகள், பாவனையாளர்கள் இனங்காணப்படின் அவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று டுடேர்தே மேலும் தெரிவித்தார். (ம-எ)



# ...ட்டுத் தீ; 100 வீடுகள் தீக்கிரை

...ந்துள்ள சிலி நாட்டில் ...கப் பரவி வருகிறது. ...கட் கிழமை ஏற்பட்ட ...க விரைவாகப் பரவி ...ந்து சாம்பரானதுடன், ...ளனர். மேலும், 500 வீடுகள் தீக்கிரையாகும் சாத்தியக் கூறுகளுடன் உள்ளன என உள்துறை அமைச்சு தகவல் தெரிவித்தது. 19 பேர் சிறிய அளவிலான தீக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான தீயணைப்பு படையினர் கனரக வாகனங்களிலும், உலங்கு வானூர்திகளின் மூலமாகவும் தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக போராடி வருகின்றனர். (ம-எ)



...கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. ஹவானாவில் அமைந்துள்ள புரட்சி சதுக்கத்தில் ...து கொண்டு பிடல் காஸ்ட்ரோவுக்கு மரியாதை செலுத்தினர். நாட்டின் முப்படை ...றிச் சென்ற படகின் அணிவகுப்பும் இடம்பெற்றது. (ம-எ)



# தப்பித்தவரின் மனைவியிடம் விசாரணைகள்

அங்காரா, ஜன. 5

துருக்கியின் இஸ்தான்புல் நகரத் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுததாரியின் மனைவி இனங்காணப்பட்டார். இதனையடுத்து அவரிடம் துருக்கிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

புது வருடம் பிறந்து சில மணி நேரத்தில் இஸ்தான்புலில் இருந்த களியாட்ட விடுதிக்குச் சென்ற ஆயுததாரிகள் இருவர் விடுதிக்குள் சென்று சரமாரியான தாக்குதலை நடத்தினர். கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் கொல்லப்பட்டதுடன், 69 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புப் பொறுப்பேற்றது. ஆயுததாரிகளில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், மற்றொருவர் தப்பித்துச் சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. தப்பிச் சென்றவரின் ஒளிப்படங்களும் துருக்கிப் பொலிஸாரால் வெளியிடப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபரின் குடும்பம் இனங்காணப்பட்டது. அத்துடன் அவரது மனைவி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

கிர்கிஸ்தானில் இருந்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி நானும் எனது கணவரும் 3 குழந்தைகளுடன் துருக்கிக்கு வந்தோம். பின்னர் கொன்யா பகுதியில், வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று வேலைதேடும் முயற்சியில் ஈடுபட்டோம். எனது கணவர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருந்தமை எனக்குத் தெரியாது எனத் தப்பித்துச் சென்றவரின் மனைவி தெரிவித்தார்.

இஸ்தான்புல் விமான நிலையத்தில் வைத்து இரு வெளிநாட்டவர்களுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். (ம-எ)

# அதிர்ந்தது பிஜி

சுவா, ஜன. 5

பிஜி நாட்டில் நேற்று பெரிய அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. பசுபிக் பெருங்கடலின் தெற்கு கரையோரத்தில் கிட்டத்தட்ட 300 தீவுக் கூட்டங்களைக் கொண்டதாக பிஜி உள்ளது. பிஜியின் தலைநகர் சுவாவில் இருந்து கிட்டத்தட்ட 282 கிலோ மீற்றர் தூரத்தில் பூமியின் அடியில் 15 கிலோ மீற்றர் ஆழத்தில் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி அதிகாலை மூன்று மணி) பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 7.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தையடுத்து, சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. ஆனால், அடுத்தடுத்த நில அதிர்வுகள் ஏற்படாததையடுத்து, அந்த எச்சரிக்கை சிறிது நேரத்துக்கு பின்னர் மீண்டும் திரும்பப் பெறப்பட்டது. உயிரிழப்புக்கள், பொருள் சேத விவரங்கள் தொடர்பில் எந்தத் தகவல்களும் உடனடியாக வெளியிடப்படவில்லை. (ம-எ)

# தீபா அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களில் முடிவு



சென்னை, ஜன. 5

அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களில் தெரிவிக்கவுள்ளேன் என்று ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா தெரிவித்தார்.

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமாக இருந்த ஜெயலலிதா கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது சாவை அடுத்து முதலமைச்சராக ஓ.பன்னீர் செல்வம் செயற்பட்டுவருகிறார். பொதுச் செயலாளராக ஜெயாவின் நண்பியான சசிகலா பொறுப்பேற்றுள்ளார். ஆனால், சசிகலாவின் தலைமையை அ.தி.மு. கழகத் தொண்டர்கள் சிலர் ஏற்கவில்லை. அவ்வாறு எதிர் கருத்தை உடையவர்கள் தீபாவை அரசியலுக்கு வரும்படி அவரது வீட்டுக்கு முன்பாகத் திரண்டு கோஷமிட்டு வருகின்றனர். இந்த நிலையில் தனது அரசியல் வாழ்வு தொடர்பில் இன்னும் இரு வாரங்களில் தெரிவிப்பேன் என்று திபா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

தனது ஆதரவாளர்களிடையே உரையாற்றிய அவர், உங்கள் வாழ்த்துக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எதிர்பார்க்கும் நல்ல முடிவை இன்னும் இரு வாரங்களில் விரைவில் நான் அறிவிப்பேன். இன்னும் நான் எந்த முடிவும் எடுக்கவில்லை. எனது எதிர்கால நடவடிக்கை எப்படி இருக்கும் என்பதை சில வாரங்களில் தீர்மானிப்பேன். 2 அல்லது 3 வாரங்களில் எனது முடிவு என்ன என்பது தெரிந்து விடும். ஜெயலலிதாவுக்கு அளிக் கப்பட்ட சிகிச்சை விவரங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அதற்காகவே காத்திருக்கிறேன் என்று தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# நீதிமன்றுக்குச் செல்ல மறுத்தார் பார்க் கியூன்

சியோல், ஜன. 5

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹை, விசாரணைகளுக்காக நீதிமன்றுக்குச் செல்ல மறுத்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பார்க் கியூன் ஹையின் நண்பியான சோய் சூன் சில் என்பவர் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பி என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி, ஊழல்மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்ததை அடுத்து, சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். பார்க் கியூன் ஹையும் உடந்தையாக இருந்ததால் அவர் பதவி விலக வேண்டும் என்று தலைநகர் சியோலில் அவ்வப்பொழுது லட்சக்கணக்கான மக்களின் பங்கேற்றலுடன் மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இதனையடுத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, பார்க் இடைநீக்கம் செய்யப்பட்டார். வழக்கும் தொடரப்பட்டது. நேற்றுமுன்தினம் பார்க் நீதிமன்றில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்க வேண்டும் என்றிருந்தது. ஆனால் அவர்



முன்னிலையாக மறுத்துவிட்... இந்த விசாரணைதான், பா... பதவியை நிரந்தரமாக ... வேண்டுமா? அல்லது அவ... டும் பதவியில் அமர்த்த வேண்... என்பதை தீர்மானிக்கும். அ... பதவி பறிக்கப்பட்டால் 60 ... களுக்குள் ஜனாதிபதித் தேர்த... டும் நடத்தப்படும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஏமாற்றம் அளிக்கிறது!

நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் அறிக்கை வெளியாகி இருக்கிறது. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. பகிரங்கக் கலந்துரையாடல்கள், தெரிந்தெடுக்கப்பட்ட குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் எழுத்து மூலமான முன்மொழிவுகள் என்கிற ரீதியில் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

7306 முன்வைப்புகளில் இருந்தும்–செயலணியில் இருந்த வல்லுநர்களின் கருத்துக்களில் இருந்தும்–தொகுக்கப்பட்டதாக இந்த அறிக்கை அமைத்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015 மார்ச் மாதம் கொழும்பு அரசும் பங்காளியாக இருந்து நிறைவேற்றிய தீர்மானத்தில், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறிமுறைகள் எவையாயினும் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியே மேற்கொள்ளப்படவேண்டும் என்று– வலியுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையிலேயே இந்தக் கலந்தாலோசனைக்கான செயலணியைப் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தார். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என முன்னணிச் சிவில் செயற்பாட்டாளர்கள் 11 பேரை உள்ளடக்கியதாகச் செயலணி உருவாக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் விரும்பாத – அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாத – எந்தவொரு நல்லிணக்கப் பொறிமுறையும், விசாரணைப் பொறிமுறையும், நிலைமாறு கால நீதிக்கான பொறிமுறையும் பயனற்றது என்கிற அடிப்படையிலேயே மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து புதிய பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியிருந்தது.

ஆனால், இந்த நோக்கத்தை அடைவதற்குத் தற்போதைய ஆட்சியாளர்கள் உளப்பூர்வமான விருப்பத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்கு இடமாகியிருக்கிறது.

செயலணியின் அறிக்கையைக் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்பதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தவிர்த்திருக்கிறார்கள். இந்த அறிக்கை கடந்த நவம்பர் 17ஆம் திகதியே தயாராகிவிட்டாலும் அதனை அரச தலைவரிடம் கையளிப்பது தொடர்ந்து தாமதமாகி வந்தது. மூன்று தடவைகள் கையளிப்பு ஒத்தி வைக்கப்பட்டது. இனியும் ஏமாற்றினால் அறிக்கையைப் பகிரங்கப்படுத்திவிடு வோம் என்று செயலணி அறிவிக்கும் அளவிற்கு இந்த விவகாரம் கசப்பான அனுபவங்களை ஏற்படுத்தியது. எனினும் இறுதியில் கையளிப்பு நிகழ்வில் அரசின் இரு முக்கிய தலைவர்களும் பங்கேற்காமல் தவிர்த்துவிட்டனர்.

நிகழ்வில் பேசிய முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாரோ, இந்த அறிக்கை சிவில் சமூகத்தின் அறிக்கைதான்–இது அரசின் அறிக்கையல்ல என்றும்–இதில் நடைமுறைப்படுத்தக் கூடியவற்றையே நடைமுறைப்படுத்துவோம் என்றும்–தெரிவித்தார்.

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்து அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கம் இந்த மைத்திரி – ரணில் அரசுக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. போதாததற்கு, அறிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, அறிக்கையில் பன்னாட்டு விசாரணைதான் வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், அரசின் நிலைப்பாடு உள்ளூர் நீதிபதிகளைக் கொண்ட விசாரணைதான் என்று அந்த அறிக்கையையே அடியோடு நிராகரித்துள்ளார். பன்னாட்டு விசாரணையையே அறிக்கை பரிந்துரைக்கிறது.

அரசின் இதுபோன்ற செய்கைகள் மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற இவை உதவப் போவதில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு பொறிமுறையாலும் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

முன்னைய அரசுகளால் நியமிக்கப்பட்ட கடந்த காலப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற்போனோரைத் தேடியறியும் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு நேர்ந்த கதிதான் இனிவரும் பொறிமுறைகளுக்கும் ஏற்படும். தாம் ஏற்றுக்கொள்ளாத பொறிமுறைகளின் அறிக்கைகளைத் தமிழர்கள் நிராகரிக்கும்போது பிரச்சினை முடிவேயில்லாமல் நீளும். அதற்காகத் தமிழர்கள் 2015இல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த உதவவில்லை என்பதை அரசியல் தலைவர்கள் மனங்கொள்வது சாலச் சிறந்தது. விரைவில் அவர்கள் தமது முடிவுகளை மாற்றவில்லையாயின் இந்த அரசு மீதான நம்பிக்கையைத் தமிழர்கள் முற்றாக இழந்துவிடுவார்கள்.

# கலந்தாலோசனைச் செயலணி அவதானிப்புகளும் பரிந்துரைகளும்

கலந்தாலோசனைச் செயல்முறையின்போது பங்குபற்றியோர் தெரிவித்த கருத்துரைகளுக்கு மேலதிகமாக கலந்தாலோசனைச் செயலணி பின்வரும் தனது சொந்த அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் முன்வைக்கின்றது. இந்த அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் கலந்தாலோசனைச் செயல்முறை ஊடாகப் பெறப்பட்டவையாகும். அத்துடன் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் சூழலுடனும் அதனைச் சாதிப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள பொறிமுறைகளுடனும் தொடர்புடையவை. கலந்தாலோசனைச் செயலணியின் பின்வரும் அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் அதற்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அ.பொது

1.1 பன்முகத் தன்மை ஒரு பலமாகவும் ஒரு வளமாகவும் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு பன்மைத்துவ பல்லின பல்மத இலங்கை பற்றிய பார்வை போற்றப்பட வேண்டும். அதில் பரஸ்பர கௌரவத்துடன் வேரூன்றிய குடியுரிமை நாடு முழுவதிலும் முன்னெடுத்துச் செல்லப்படுவதும் கொண்டாடப்படுவதும் அவசியமாகும். அரசும் விசேடமாக அதன் உயர் மட்டங்களும் சிவில் சமூகமும் இதில் ஈடுபட வேண்டும். இந்த நாட்டில் அர்த்தமுள்ள நல்லிணக்கமும் சமாதானமும் வளமான முன்னேற்றமும் ஏற்பட வேண்டுமானால் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இலங்கை மக்கள் அனைவரின் பன்முக அடையாளத்தைப் பாதுகாப்பதும் கௌரவிப்பதும் அத்தியாவசியமாகும்.

1.2 நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசின் கடப்பாடு தொடர்பாகத் தொடர்ந்து நிலவும் அவநம்பிக்கையை ஈடுசெய்யும் வகையில் இனப்பிளவு, மதச் சகிப்பின்மை என்பன பரவாமல் தடுப்பதற்கும் அதற்குக் காரணமானவர்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் அச்சமோ- சலுகையோ இன்றி அவர் களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் வலுவானதும் திட்டவட்டமானதுமான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படவேண்டும்.

1.3 பலமதங்கள் பின்பற்றப்படும் நாட்டில் சமத்துவ அடிப்படையில் சம்பந்தப்பட்ட எல்லோரதும் கலந்தாலோசனையின் பேரில் மதச்சார்பற்ற அரசை நோக்கிச் செல்வதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி உறுதியாகப் பரிந்துரை செய்கின்றது.

1.4 அர்த்தமுள்ள சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றை ஏற்படுத்துவதில் நிலைமாறு கால நீதிக்குரிய மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் கடந்த கால மோதல்கள் பற்றிய உண்மையையும் அப்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்களையும் அவற்றுக்கான காரணங்களையும் ஒவ்வொரு பிரசையும் அறிந்து கொள்வதற்கான உரிமை அரசியல் யாப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

1.5 இத்தகைய மோதல்களின் போது பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒருதகுந்த பரிகாரத்துக்கான உரிமை உண்டு.

அ. குற்றவியல் நீதி உட்படத் தாக்கமான பொறுப்புக்கூறல்.
ஆ. போதிய தாக்கமான உடனடியான நஷ்டஈடும் புனர்வாழ்வும்.

1.6 இத்தகைய மோதல்களும் மனித உரிமை மீறல்களும் மீண்டும் ஒருபோதும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நியாயமான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். குறிப் பாக மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான அல்லது அதைத் தடுப்பதற்குத் தவறிய நிறுவனங்களைச் சீர்திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தண்டனையில் இருந்து தப்பிக் கொள்ளும் கலாசாரம் முற்றிலும் மாற்றப்பட வேண்டும்.

1.7 வலுவான அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் இனமுரண்பாட்டுக்கு அரசியல் மற்றும் யாப்பு ரீதியான தீர்வு காண்பதற்கான உடன்பாடு இந்தவகையில் மிக முக்கியமானது. அநேகமானோரின் கருத்துரைகளில் நல்லிணக்கத்துக்கான அடிப்படையான ஒரு முன்தேவையாக இது இனங்காணப்பட்டுள்ளது. நல்லிணக்கத்துக்கான பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் அவற்றின் செயற்பாட்டுக்கும் ஏற்ற சூழலை உருவாக்குவதற்கும் இது அவசியமானது என இனங்காணப்பட்டுள்ளது.

1.8 அரச இயந்திரம் முழுவதிலும் காணப்படும் இருமொழித் திறன் குறைபாடுகள் நல்லிணக்கத்துக்கான பெரிய தடை என்பதை நாடு முழுவதிலும் மக்கள் தெரிவித்த கருத்து அடையாளப்படுத்தியது. முன்னுரிமை அடிப்படையில் இதற்குத் தீர்வு காண வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது.

1.9 இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளைத் துரிதமாக உரியவர்களிடம் மீள ஒப்படைத்தல். தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரதும் தடுப்பு முகாம்களதும் பட்டியலை வெளியிடுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், பதசவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவித்தல் என்பன தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய வெளிப்படை யான நடவடிக்கைகள் பரஸ்பர நம்பிக்கையிலும் பற்றுறுதியிலும் காணப்படும் கணிசமான இடைவெளியைக் குறைப்பதற்கு அத்தியாவசியமாகும்.

1.10 கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பான 2016 ஜூன் மாதம் மீண்டும் வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களை பொலிஸ் பிரிவினரும், பாதுகாப்புப் படையினரும், உளவுச் சேவையினரும் பின்பற்றுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

1.11 கடத்தப்பட்டுக் காணாமற் போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு உடன்படிக்கைக்கு அமைவாகக் கடத்தப்பட்டுக் காணாமற் போவதைத் தண்டனைக்குரிய குற்றமாக்குவதற்குரிய சட்டநடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.12 போர்க்குற்றம், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற பன்னாட்டுக் குற்றங்கள் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டு சட்டவாக்கத்தின் மூலம் தாமதமின்றி இலங்கைச் சட்டத்துள் உள்வாங்கப்பட வேண்டும். அரசியல் யாப்பின் 13(6) பிரிவுக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பன்னாட்டு உடன்படிக்கையின் 13(2) ஆம் பிரிவுக்கும் இணக்கமான முறையில் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் இது அமைய வேண்டும்.

1.13 நல்லிணக்கப் பொறிமுறைகளை நிறுவவும் செயற்படுத்தவும் ஒரு திட்டவரைவை அரசு உருவாக்க வேண்டும். இந்தத் திட்டவரைவு நல்லிணக்கத்துக்கான ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஆணைகளைக் கொண்ட அமைச்சுக்கள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்களின் இருப்பை வெளிப்படுத்த

வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களையும் அவற்றுக்குரிய ஆணைகளையும்நெறிமுறைப்படுத்த வேண்டும். அவற்றின் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் அவற்றுக்கிடையே உள்ள உறவுகளையும் அதுபோல் அவற்றுக்கும் நிலைமாறுகால நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமாக நிறுவப்பட் இருக்கும் பொறிமுறைகளுக்கும் இடையே உள்ள உறவுகளையும் தெளிவுபடுத்த வேண்டும்.

1.14 ஜனாதிபதியும் பிரதமரும் திட்ட வரைவையும் நிலை கால நீதியையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அது தொடர்பான நாடு பரந்த வேலைத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் ஈடுபடுத்த வேண்டும். இது தொடர்பான முழுமையான பொறுப்பையும் அவர்கள் ஏற்கவேண்டும். கலந்தாலோசனைச் செயலணியின் ஆலோசனைகளுக்கு அப்பால் பொறிமுறைகள் பற்றிய சட்டவாக்கத்திலும் அதன் பின்னரும் அரசுக்கும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இடையே தொடர்ச்சியான உரையாடலும் ஆலோசனைகளும் அத்தியவசியமாகும். பொதுமக்களுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையே நம்பிக்கை நம்பகத்தன்மை தொடர்பாகத் தொடர்ச்சியாக நிலவும் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு இது மிக முக்கியமானது. ஒரு தெளிவான ஊடக உத்தியுடனான பொதுமக்கள் தொடர்பு இதன் வெற்றிக்கு அவசியமாகும்.

1.15 பொறிமுறைகளினதும் நல்லிணக்கச் செயல்முறைகளினதும் முழுமையான ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சகல பொறிமுறைகளுக்குமான கொள்கைகளும் செயல்முறைப் புற வரைபுகளும் ஆரம்பத்திலேயே முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். அவை விரைவாகவும் அடுத்தடுத்தும் செயற்படுத்தக் கூடியவகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். எல்லாப் பொறிமுறைகளும் நிறுவப்படுமா என்பது பற்றிய பொதுமக்களின் சலிப்புணர்வைத் தவிர்க்கவும் சம்பந்தப்பட்ட பொறிமுறைகளுக்கு இடையே உள்ள உறவுகள் தொடர்பாக நிலவும் மயக்கத்தைத் தீர்க்கவும் இது அவசியமாகும்.

1.16 இந்தப் பொறிமுறைகளுக்குத் தேவையான போதிய நிதியை உறுதிப்படுத்தும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும். இதன்பொருட்டு வரவு - செலவுத் திட்டத்தில் போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.17 திரிபுபடுத்தல், பொருத்தமற்றதும் தீங்கு விளைவிப்பதுமான கலைச்சொற்களின் பயன்பாடு போன்றவற்றைத் தவிர்க்கும் வகையில் பொறிமுறைகளுக்குப் பெயரிடுதல், அவற்றைச் செயற்படுத்துதல் போன்றவற்றிலும், நல்லிணக்கம், இடைக்கால நீதி போன்ற பிற செயற்பாடுகளின்போதும், பொருத்தமான மொழியைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும். தேசிய மொழிகளில் அறிவுடைய துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும்.

1.18 குறிப்பாக பொதுப் பாதுகாப்பு, மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களும் உட்பட எல்லாச் சட்டவாக்க நடைமுறைகளும் மிகவும் வெளிப் படையானவையாகவும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்குவன வாகவும் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கையின் சட்ட மற்றும் கொள்கைச் சட்டகம் அரசியல் யாப்பு உத்தரவாதப்படுத்தியுள்ள அடிப்படை உரிமைகளையும், சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகளையும் உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

**1. இராணுவமய நீக்கம்**

1.19 போரிலிருந்து சமாதானத்துக்கு மாறுவதில் இராணுவத்துக்கு ஒரு முக்கிய பாத்திரம் இருக்கும் அதே வேளை, நிலை மாறுகால நீதிச் செயல்முறைகள் பற்றியும், பல்வேறு பொறிமுறைகள் பற்றியும் குறிப்பாக, பொறுப்புக்கூறல் பொறிமுறை பற்றியும் இராணுவத்தின் எல்லா மட்டத்தினருக்கும் விளக்கமளித்தல் அவசியமாகும். அத்தோடு மோதலுக்குப் பிந்திய ஜனநாயகச் செயற் பாட்டில் அரசு, இராணுவம், சிவில்உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பாத்திரமும் பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இத்துடன், இராணுவமய நீக்கத்தையும் பாதுகாப்புத் துறையைச் சீர்திருத்துவதையும் உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக சிவில் நிர்வாகமும் பொலிஸும் செய்ய வேண்டிய நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடாதிருப்பதோடு அது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் நிறுத்த வேண்டும்.

1.20 பாதுகாப்புப் படையினரைக் கட்டம் கட்டமாக ஆட்குறைப்புச் செய்வதற்கான அவசியம் உள்ளது. சமூகத்தினுள்ளும் சமூக வாழ்விலும் இவர்களை உள்வாங்குவதற்கான புனர்வாழ்வுத் திட்டத்துடன் இது இணைந்து நிகழ வேண்டும். முழுமையான புனர்வாழ்வு, உள, சமூகப் புனர்வாழ்வு, மீள் கல்வி, அவசியமான தொழிற்பயிற்சி என்பவற்றை இது உள்ளடக்க வேண்டும். இதைத் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள், வேறு குற்றங்கள் புரியாதவர்களை சிவில் நிறுவனங்களில் தகுந்த பதவிகளில் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கலாம். இவர்களுக்கான கவர்ச்சிகரமான பதவி விலகல்/ முன் ஓய்வுத் திட்டம் ஒன்றும் முன்வைக்கப்பட வேண்டும். இந்தத் திட்டம் ஓய்வூதியம், குடும்ப நலத் திட்டம், புலமைப் பரிசில், பிள்ளைகளுக்கு விரும்பிய பாடசாலைகளில் அனுமதி, உதவி மற்றும் சேவைகள், மருத்துவ மற்றும் உள-சமூக ஆதரவும் சிகிச்சையும், வீட்டு வசதி, வருமான விருத்திக்கான கடன் உதவி இவை போன்ற பிறவாய்ப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கலாம். இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு இந்தச் செயல்முறை பற்றிப் போதிய தகவல்கள் கொடுக்கப்பட்ட பின்னரே இது முன்னெடுக்கப்பட வேண்டும்.

1.21 பொதுமக்களால் உரிமை கோரப்படும், தற்போது இராணுவத்தின் கைவசமுள்ள தனியார் மற்றும் பொதுக் காணிகளைப் பொறுத்தமட்டில் பொதுமக்களின் பங்கு பற்றலுடன் அவற்றை இனங்காணும் ஒரு முழுமையான செயல்முறையும், காணிகளை விடுவிப்பதற்கான ஒரு விரிவான திட்டமும் அவசியமாகும். காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை மீள்மதிப்பீடு செய்வதற்காக ஒரு வருடாந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**2. பொலிஸ் மற்றும் நீதித்துறைச் சீர்திருத்தம்**

1.22 ஒரு கணிச மான எண்ணிக்கையுள்ள பொதுமக்களின் கருத்துரைகள் நீதி மற்றும் சட்ட ஒழுங்கு அமைப்புக்கள் ஊடாக பரிகாரம் பெறு வதில் உள்ள தாமதங்களையும் தடைகளையும் துலக்கமாக எடுத்துக் காட்டின. அவ்வகையில், நீதி மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவை செயற்படும் முறைமைகளையும் அவற்றின் அமைப்புக்களையும் மதிப்பிடவும் சீரமைக்கவும் வேண்டிய தேவை இருப்பது தெளிவாகிறது. நிலை மாறு கால நீதியின் மூலக் கொள்கைகள் உண்மை அறிவதற்கான உரிமை, நீதி, பொறுப்புக்கூறல், இழப்பீடுகளுக்கான உரிமை, மீள் நிகழாமைக் கான உத்தரவாதம் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலக் கொள்கைகள் அவற்றுள் உள்வாங்கப்பட வேண்டும்.

1.23 நீதித்துறை, சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட மருத்துவ அதிகாரிகள், விசாரணையாளர்கள், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு உட்பட ஒவ்வொரு நிலையிலும் காணப்படும் முறைப்படுத்தப்பட்ட தாமதங்கள், சுதந்திரமின்மையும் அரசியல் மாயமாக்கலும், சார்பு நலன்களின் தாக்கம் இயலுமையும் திறனும் இன்மை போன்ற பரந்துபட்ட பிரச்சினைகளைக் கையாளுவதற்கு சாதாரண நீதிமன்றங்கள் ஊடாக முறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தமும் அமைப்பு மாற்றமும் ஏற்படுத்துவதற்கான தாக்கமான பரிகாரமும் பொறுப்புக் கூறலும் அவசியமாகும்.


1.24விசேட நீதிமன்றத்தின் எல்லைக்குள் வராத மனித உரிமை மீறல்கள் மற்றும் விசாரணைக் கொள்கை காரணமாக விசேட நீதிமன்றத்தால் விசாரிக்கப்படாத வழக்குகள் என்பவற்றைப் பொறுத்தவரை சாதாரண் நீதி முறைமைக்குள் அவற் றின் விசாரணையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**குறிப்பான முக்கிய பரிந்துரைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன**

அ) இப்போதுள்ள இடைவெளிகள், தாமதங்கள், நிலுவையிலுள்ள வழக்குகள், முறைப்பாடுகள் என்பவற்றைக் கையாள்வதற்கான சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் (குற்றவியல் மருத்துவம் உட்பட) நீதித்துறை மருத்துவ உத்தியோகத்தர் என்பவற்றில் அலுவலர் எண்ணிக்கையை அதிகரித்தல் மொழி மற்றும் குற்றவியல் மருத்துவத்துறைத் திறன்கள் உட்பட குறிப்பான திறன்களுக்கான தேவை. பெண்களதும் எல்லா இனக் குழுக்களதும் போதிய பிரதிநிதித்துவம் என்பவற்றை நிறைவு செய்தல். ஒரு தற்காலிக ஏற்பாடாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் உத்தியோகப் பற்றற்ற நீதிபதிகளாகக் கடமையாற்றுவதற்கு சட்டத்தரணிகளை நீதித்துறை அலுவலர்களாக வாடகைக்கு அமர்த்துவது அவசியமாகலாம்.

ஆ) நீதித்துறை மற்றும் மேற்குறிப்பிட்ட நிறுவகங்களின் திறன், இயலளவு என்பவற்றை வலுப்படுத்துதல் தற்போது அரச முறைமைக்குள் இல்லாத சட்ட மருத்துவ வசதிகள் உட்பட மேலதிக வளங்களை ஒதுக்கீடு செய்தல், பொது நிலையில் இடைக்கால நீதி பற்றிய பயிற்சி, குறிப்பான நிலையில் விசேடமாக மனித உரிமைகள், சர்வதேசக் குற்றங்கள், பாலியல் வன்முறை பற்றிய நீதித்துறைப் பயிற்சிகள், சர்வதேச தொழில் நுட்ப நிபுணத்துவத்தை உள்ளூர் அலுவலர்கள் பெறுவதற்கான வாய்ப்பு என்பவற்றை இது வேண்டிநிற்கும். மேற் குறிப்பிட்ட நிறுவகங்களில் பணிபுரியும் நீதிபதிகள், சட்டத்தரணிகள் உட்பட ஆளணியினருக்கு நிலை மாறு கால நீதி பற்றிய குறிப்பாக மனித உரிமைகள் நீதித்துறை, சர்வதேசக் குற்றங்கள் மற்றும் பாலியல் வன்முறை பற்றிய விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் சகல சட்டக் கல்வி நிறுவகங்களிலும் கற்பிக்கப்பட வேண்டும். இந்த நிறுவகங்களில் பதவி உயர்வு, திறன் தேர்ச்சியின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். இது தெளிவாக வரையறுக்கப்பட்டுநடைமுறைப்படுத்த வேண்டும்.

*(தொடரும்)*



# வாசகர் திருமுகம்

## உரிய அதிகாரிகள் உதவுவார்களா?

யாழ். குடாநாட்டில் இந்த முறை உரிய மழைவீழ்ச்சி கிட்டாத போதிலும், தென்மராட்சிப் பகுதியிலுள்ள எமது பள்ளமான வயற்காணிகளில் ஓரளவு மழைவெள்ளம் வற்றாதிருப்பதால் நெற்பயிர்கள் அழிவடையாது தவறிவிடும் என நம்பியிருந்தோம். ஆயினும் திடீரென மடிச்சுக் கட்டிநோய் பரவி நெற்பயிர்கள் பாதிப்புற ஆரம்பித்துள்ளன. இதற்கான களைநாசினிக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனைகளை வழங்கவல்ல அதிகாரிகள் இதற்கான உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவுவார்களா?

*த.வேலாயுதம்*
*கோவிலாக்கண்டி*

## எம்மை நாமே திருத்திக் கொள்வோமே!

பாடசாலை ஆரம்பிக்கும் வேளையிலும் விடுகை வேளையிலும் பிரதான வீதிகளில் பாரஊர்திகளின் பயணத்தைத் தவிர்க்க ஆவன செய்வது இருசாராருக்கும் நன்மை பயக்கும். கே.கே.எஸ். வீதி - கொக்குவில் பேருந்து தரிப்பிடத்தில், பாடசாலை விட்ட பின்னர் சுமார் முந்நூறு மாணவர்கள் இருக்கவும், நிற்கவும், நகரவும், ஒதுங்கவும் முடியாதவர்களாகத் தவிக்கின்றனர்.

இதுவரை எவருமே அது குறித்து அக்கறைகாட்டியதாக இல்லை என்பது கவலைதருமொன்றே. பொதுவாக யாழ்மாவட்டத்தில், வழிகாட்டும் பெயர் பொறிக்கப்பட்ட நடுகைக் கற்களில், ஒட்டப்படுகின்ற விளம்பரங்களைக் கண்டு மனது நோகவேண்டியுள்ளது சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கைகளை எடுக்கச் சட்டம் இடங்கொடுக்காதா என்ன? எடுங்களேன்

*கே.எஸ்.சிவஞானராஜா*
*கொக்குவில்*

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT

# மழை நாள்

அது ஒரு காலம்
அழகிய காலம்
மழையில் நனைந்த நினைவுகள் போதும் போதும்
மழலைகள் மகிழ்ந்த அழகிய மழைக்காலம்

இனிமைகள் சேரும் அழகிய காலம் - அது
குளிர்மையில் உறங்கும் அழகிய காலம்
பசுமைகள் வந்திடும் அழகிய காலம் - அது
செழுமைகள் சேர்ந்திடும் அழகிய காலம்

பட்சிகள் முடங்கும் அழகிய காலம் - அது
பள்ளியில் அமைதி நிலவும் காலம்
நினைவுகள் மலரும் கற்பனைக் காலம் - அது
நீங்காது எம்மனதில் இம் மழைக்காலம்!

*உமாசங்கர் சஞ்சிகா*
*தரம் - 8ளீ*
*கிரி/ இந்துக் கல்லூரி*



# தகவல் துளிகள்

- ஜப்பானில் மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதுவதற்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.
- தமிழ்ப் பத்திரிகைகளில் முதன் முதலில் கார்ட்டூன்களை வெளியிட்டவர் மகாகவி பாரதியார்.
- ஒரு குண்டூசியின் தலைப் பரப்பில் பத்தாயிரம் பக்றீரியாக்களை அடுக்க முடியும்.
- டிப்பர் என்ற பறவை நீரின் அடி ஆழத்திற்குச் சென்று, இரையைப் பிடிக்கும்.
- இரண்டாம் உலகப் போரில் மிக அதிகளவில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் அடைந்த நாடு, ரஷ்யா.
- மனிதனின் தும்மல் வேகம் மணிக்கு 180 கிலோமீற்றர்கள் தூரம் இருக்கும்.
- உலகிலேயே அதிகமாக இனிப்பு சாப்பிடுகிறவர்கள் இங்கிலாந்துக்காரர்கள்.
- பூமிக்கு மிக அருகிலுள்ள நட்சத்திரமே 4,02,32,500 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளதாம்.
- விரல்களின் 40 சதவீத பலம் கட்டை விரலில்தான் இருக்கின்றது.
- ஏப்ரல் முதல் திகதியை முட்டாள்கள் தினமாக முதன் முதலில் கொண்டாடிய நாடு இங்கிலாந்து.
- ஒரு சிலந்தி வலையிலுள்ள நூல் முழுவதையும் இழுத்துப் பார்த்தால் 2000 மைல்கள் நீளம் கூட இருக்கும்.

மனிதனை எது அடிமையாக்குகிறதோ, அது அவன் தகுதியில் பாதியை அழித்து விடுகிறது.
*- போப்*

முதுமை வயதைப் பொறுத்தது அல்ல. உணர்ச்சியைப் பொறுத்தது.
*- விவேகானந்தர்*

கற்பனை என்பது அறிவை விடச் சிறந்தது.
*- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

தேவைகளைக் குறைத்து, உழைத்து வாழ்வதே உயரிய நாகரிகம்.
*- காந்திஜி*

உன்னை அதிகமாகச் சந்தோசப்படுத்தும் இதயத்திற்கு உன்னை அழவைக்கவும் உரிமை உண்டு.
*- வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்*

# வரலாற்றில் இன்றைய தினம்

1993 - தெரிவுக் குழுவின் யோசனை; வடக்கு - கிழக்கில் இந்திய முறையிலான தீர்வைப் புலிகள் நிராகரிப்பு.
- கிளாலிப் படுகொலை; கிளிநொச்சி வைத்தியசாலையில் சடலங்கள் நிறைந்து கிடந்தன; உயிர் தப்பிய மதகுரு பேட்டி.

1994 - தாவடியில் 3 பெண்கள், சிறுமி உடல் சிதறி உயிரிழப்பு. சதைத்துண்டங்கள் நாலாபுறமும் வீசப்பட்டிருந்தன.
- கடற்படை வெறியாட்டம்: காணாமற்போன 8 மீனவரில் ஒருவரின் சடலம்கரையொதுங்கியது.


1995 - தமிழாராய்ச்சி மாநாடு அமர்வைப் பகிஷ்கரித்து அறிஞர்கள் ஆட்சேபம். வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வெளியேற்றியமைக்குக் கண்டனம்.
- உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழறிஞர்களை வெளியேற்றியமைக்கு அரசே காரணமாம்.

1997 - தெரிவுக் குழுவின் யோசனை முதலில் நாடாளுமன்றத்துக்கே வரும் என ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு.

2000 - குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொலை; வெள்ளவத்தையில் சம்பவம்.

# அன்பு

பாற்காரர் ஒருவர் தன் பசுவை இழுத்துக் கொண்டு தெருவோரமாக வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்த பசு திடீரென அடம் பிடித்துத் தெருவில் அமர்ந்து கொண்டது. அகலம் குறைந்த அந்த தெருவில் சைக்கிள் தவிர வேறு எந்த வாகனங்களும் செல்ல முடியாதபடி பசு நடுத் தெருவில் படுத்திருந்தது. பாற்காரர் எவ்வளவு முயற்சி செய்தும் அந்த பசுவை இம்மியளவும் நகர்த்த முடியவில்லை.



அந்த வழியாக ஒரு பொலிஸ்காரர் வந்தார். தன்னுடைய முரட்டு மீசையையும் கையிலிருந்த தடியையும் வைத்து மிரட்டிப் பார்த்தார். பாற்காரரோடு சேர்ந்து பசுவை இழுத்துப் பார்த்தார். பசு அசையவில்லை.

அப்போது ஐஸ்கிரீம் விற்கும் நபர் ஒருவர் அந்த வழியாக வந்தார். குளிர்ச்சியாகப் பேசிப்பார்த்தார். நகராமல் நின்ற பசுவை மூவரும் சேர்ந்து இழுத்தனர். முயற்சிகள் தோல்வியில் தான் முடிந்தது. மல்யுத்த போட்டியொன்றில் வெற்றி பெற்று திரும்பிக் கொண்டிருந்த வீரர் ஒருவர் அந்த வழியாகவந்தார். ஒரு பசுவை தெருவிலிருந்து நகர்த்த மூன்று பேர் செய்து கொண்டிருக்கும் முயற்சிகளைப் பார்த்து நகைத்தார்.


மூன்று பேரையும் நகரச் சொல்லி விட்டு மல்யுத்த வீரர் தனித்து மாட்டை இழுத்துப் பார்த்தார். பசு அசரவில்லை.

அந்த வழியாக ஒரு சிறுவன் வந்தான். அவன் தெருவருகே வளர்ந்து நின்ற புற்களைப் பறித்து கட்டாகக் கட்டி பசுவின் முகத்தருகே காட்டினான். பசு புல்லை சாப்பிட எழுந்தது. சிறுவன் புல்லை பசுவிடம் காட்டிக்கொண்டு மெல்ல நடக்க ஆரம்பித்தான். பசுவும் அவனோடு நகர்ந்தது.



# பழமொழிகள்

1. பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.
2. குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுவது.
3. பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்.
4. காய்த்த மரம்தான் கல்லடிபடும்.
5. சாட்சிக்காரனின் காலில் விழுவதிலும் சண்டைக்காரனின் காலில் விழுவது மேல்.
6. விடிய விடிய ராமாயணம் விடிந்த பிறகு சீதைக்கு ராமன் என்ன முறை.
7. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
8. தினை விதைத்தவன் தினையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்.



வாழ்க்கை என்பது வெற்றி கொள்ளவே!
தோல்விகளுக்காக துவளுதல் கூடாது.
பொழுதுகளை வீணே கழிப்பதை
விட
வெற்றி பெறுவதற்கான
முயற்சிகளை
செய்வதே நன்மை பயக்கும்.






# வர்ணம்

தீட்டுவோம் வாங்க....



# ஆங்கில புத்தாண்டுப் பலன்



# 2017

## கன்னி

இந்த 2017ஆம் ஆண்டு சந்திரன் உங்களின் ராசிக்கு 5ஆம் வீட்டில் நிற்கும் போது பிறப்பதால் அடிப்படை வசதி, வாய்ப்புகள் பெருகும். குடும்ப வருமானமும் உயரும். பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டறிந்து வளர்ப்பீர்கள். வரன் தேடி தேடி அலுத்துப்போன உங்களின் மகளுக்கு இந்த ஆண்டு திருமணம் சீரும் சிறப்புமாக முடியும். கல்விக்குத் தகுந்த உத்தியோகம் இல்லாமல் வீட்லேயே முடங்கிக் கிடந்த உங்களுடைய மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் அதிக சம்பளத்துடன் வேலைக் கிடைக்கும். பூர்வீக சொத்து கைக்கு வரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். இந்த ஆண்டு பிறக்கும்போது செவ்வாய் 6இல் இடத்திலும், சூரியன் 4இலும் வலுவாக அமர்ந்திருப்பதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். அரசால்

ஜூலை 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 6 ஆம் வீட்டில் கேது பகவான் நிற்பதால் எதிர்ப்புகள் அடங்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம்-பலவீனத்தை உணர்வீர்கள்.

உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரியம் வரும். அக்கம்-பக்கம் வீட்டாருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். ஆனால் ராசிக்கு 12 ஆம் வீட்டில் ராகு நிற்பதால் மற்றவர்களுக்காக பதில் கையெழுத்திடாதீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்களை நினைத்து அவ்வப்போது மனம் கலங்குவீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது அச்சம் வரும். சுபச் செலவுகள் அதிகமாகும். கட்டட வேலைகளைத் தொடங்குவீர்கள். வங்கி கடன் கிடைக்கும். ஜூலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை கேது 5ஆம் வீட்டில் அமர்வதால் முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வந்து போகும். பிள்ளைகளுக்கு அதிக அறிவுரைசொல்லி நெருக்கடிக்குள்ளாக்காதீர்கள். ராகு 11ஆம் வீட்டில் நீடிப்பதால் பெரிய திட்டங்கள் நிறைவேறும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். திடீர் பணவரவு உண்டு. உங்களுடைய உழைப்புக்கு ஏற்ற பயன் கிட்டும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள்.

பெப்ரவரி 26ஆம் திகதி முதல் ஏப்ரல் 11ஆம் திகதி வரை செவ்வாய் 8இல் அமர்வதாலும் மற்றும் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை உள்ள காலக்கட்டத்தில் செவ்வாயை சனி பார்க்கவிருப்பதாலும் சிறுசிறு நெருப்புக் காயங்கள், உடன்பிறந்தவர்களுடன் மோதல்கள், சொத்து வாங்குவது, விற்பதில் சிக்கல்கள், எதிர்காலம் பற்றிய பயம், பணத்தட்டுப்பாடு வந்துச் செல்லும். வருடப் பிறப்பு முதல் ஜனவரி 8ஆம் திகதி வரை ராசிநாதன் புதனும், சனியுடன் சேர்ந்து வக்கிரமாகி நிற்பதால் காய்ச்சல், இருமல், கழுத்து வலி, உறவினர், நண்பர்களுடன் விரிசல்கள் வந்து போகும். புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் சேவகாதிபதியும்-சப்தமாதிபதியுமான குரு உங்கள் ராசியிலேயே குரு அமர்ந்து ஜென்ம குருவாக தொடர்வதால் ஆரோக்கியத் தில் அக்கறை காட்டுங்கள். கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகங்களைத் தவிர்க்கப் பாருங்கள், பிரிவுகள் வரக்கூடும்.

ஆனால் செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் குரு 2ஆம் வீட்டில் சென்று அமர்வதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் எல்லாம் அடுத்தடுத்த நடந்தேறும். சிலர் புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பம் விலகும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். வீண் பழியிலிருந்து விடுபடுவீர்கள். வழக்கால் இருந்த நெருக்கடிகள் நீங்கும். சொத்து சேர்க்கை உண்டு. நீங்கள் சொல்லாததையும், சொன்னதாக நினைத்துக் கொண்டு விலகியிருந்த சொந்த-பந்தங்களெல்லாம் வலிய வந்து பேசுவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். சொந்த ஊர் பொதுக் காரியங்களையெல்லாம் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள்.

டிசெம்பர் 14ஆம் திகதி வரை சனி 3ஆம் வீட்டிலேயே நிற்பதால் திடீர் அதிர்ஷ்ட- யோகம் உண்டாகும். பெரிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புதுத் தொழில் தொடங்குவீர்கள். எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வரும். நேர்மறை சிந்தனைகள் பிறக்கும். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனைவிவழி உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். இளைய சகோதர வகையில் அனுகூலம் உண்டு. வருடத்தின் இறுதியில் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் 4இல் சனி அமர்ந்து அர்த்தமட்டச் சனியாக வருவதால் தாயாரின் உடல் நலம் பாதிக்கும். அவருடன் பிணக்குகள் வந்து நீங்கும். அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். பழைய பிரச்சினைகள் போல வேறு ஏதேனும் இப்போது வந்துவிடுமோ என்று அஞ்சுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். மக்களின் ரசனையைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப புதிய சரக்குகள் கொள்முதல் செய்து லாபம் ஈட்டுவீர்கள். கல்வித் தகுதியில் சிறந்த, அனுபவமிக்க வேலையாள்களை பணியில் அமர்த்துவீர்கள். கடையை மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள முக்கிய சாலைக்கு மாற்றி விரிவுபடுத்தி, அழகுப்படுத்துவீர்கள். உங்களுக்கு முழு ஒத்துழைப்பு தரக்கூடிய பங்குதாரரும் அறிமுகமாவார். உத்தியோகத்தில் ஓரங்கட்டி ஒதுக்கப்பட்டிருந்த உங்களுக்கு செப்ரெம்பர் மாதம் முதல் முக்கியத்துவம் கிடைக்கும். அதிகாரிகளுடன் அரவணைத்துப்போகும் மனப்பக்குவம் உண்டாகும். உயரதிகாரிகளின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப செயற்படத் தொடங்குவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பதவி உயரும். சம்பள பாக்கி கைக்கு வரும். விரும்பிய இடத்திற்கே மாற்றம் கிடைக்கும். உங்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறு வழக்கிலிருந்து விடுபடுவீர்கள்.

கன்னிப் பெண்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். வேற்றுமதத்தைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாவார்கள். மாணவர்கள் சமயோஜித புத்தியால் சாதிப்பீர்கள். சின்னச் சின்ன தவறுகளையும் திருத்திக் கொள்வீர்கள். ஆசிரியர் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். சக மாணவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைப்பீர்கள். கூடுதல் மொழியை கற்றுக்கொள்ள ஆசைப்படுவீர்கள். உயர்கல்வியில் கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள்.

இந்த 2017 ஆம் ஆண்டு கொஞ்சம் முணுமுணுக்க வைத்தாலும்–மகிழ்ச்சியையும், வெற்றியையும் அள்ளித் தருவதாக அமையும்.

## நாளை

**மார்கழி-22**

வெள்ளிக்கிழமை -06.01.2017
திதி: அட்டமி மு.ப.09.23
நட்சத்திரம்: ரேவதி பி.ப.01.06
ராகுகாலம்:11.01-12.31 வரை
சுபநேரம்:06.31-08.01 வரை

# விளையாட்டு உலகத்தில் முக்கிய பதிவாகிய–2016

பன்னாட்டு அரசியல் அரங்கில் பல்வேறு முக்கிய திருப்பங்களைத் தந்துள்ளது என்று கருதப்படும் 2016 ஆம் ஆண்டு விளையாட்டு அரங்கிலும் மறக்க முடியாத பல பதிவுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

**ரியோ ஒலிம்பிக்**

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் இடம்பெற்றது. பழம்பெரும் வரலாற்றை உடைய ஒலிம்பிக் வரலாற்றில் நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் ஒரு தொடர் நடைபெற்றதென்றால் அது கடந்த ஒலிம்பிக் தொடராகவே இருக்க முடியும். ரியோ ஒலிம்பிக் தொடர் நடைபெறுவதில் ஏகப்பட்ட சிக்கல்கள் இருந்தன. தென்னமரிக்க நாடுகளிடையே விரைவாகப் பரவி வந்த சிகா வைரஸ், பிரேஸிலையும் வெகுவாய் பிடித்திருந்தது. இதனால் பிரேஸிலில் ஒலிம்பிக் தொடர் நடைபெறுமா என்பது இறுதிவரை கேள்விக் குறியாகவே இருந்தது. ஆனால், மிகத் துரிதமாகச் செயற்பட்டு-சிகாவைக் கட்டுப்படுத்தி-ரியோ ஒலிம்பிக் தொடரையும்-அதைத் தொடர்ந்து-மாற்றுத் திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடரையும் செவ்வனே செய்து முடித்து, பிரம்மிக்க வைத்தது பிரேஸில்.

**ரி-20 உலகக்கிண்ணம்**

கிரிக்கெட்டைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு முக்கியமான தொடர் நடைபெறும். அந்த வகையில் இந்தியாவில் கடந்த வருடம் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றது. இங்கிலாந்தும், மேற்கிந்தியத் தீவுகளும் இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தன. கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணத்தைக் கொண்டு சென்றது மேற்கிந்தியத் தீவுகள். 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணம், பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணம் என்பனவும் கடந்த வருடத்தில் நடைபெற் றன. அவற்றையும் மேற்கிந்தியத் தீவுகளே கைப்பற்றியது. இதன்மூலம் ஒரு வருடத்தில் மூன்று உலகக்கிண்ணங்களை வென்ற ஒரே நாடு என்ற வரலாற்றுச் சாதனையையும் தீவுகள் படைத்தது.

**கோப்பா அமெரிக்கத் தொடர்**

தென்னமரிக்க நாடுகளிடைய நடைபெறும் நூறு வருடங்களுக்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்த கால்பந்தாட்டத் தொடரே கோப்பா அமெரிக்கத் தொடர். இறுதியாட்டத்தில் சிலியும் ஆர்ஜென்ரீனாவும் மோதின. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி சிலி சம்பியனானது. இந்த வெற்றியை அடுத்து, சிலியில் தேசிய விடுமுறையும் விடப்பட்டது. தோல்வியைத் தாங்க முடியாமல் பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார் மெஸ்ஸி. ரசிகர்கள், மெஸ்ஸி மீண்டும் வரவேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதால் தனது முடிவை மீளப்பெற்று மீண்டும் களத்துக்குத் திரும்பினார்.




**யூரோ கிண்ணத் தொடர்**

ஐரோப்பிய நாடுகளிடையே நடைபெறும் யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரும் கடந்த வருடம் நடை பெற்றது. போர்த்துக்கல் சம்பியனானது. போர்த்துக்கலின் கால்பந்தாட்ட வரலாற்றிலேயே இந்தக் கிண்ணமே ஆகச் சிறந்த அடைவாக அமைந்தது. கிண்ணத்தை வென்று கொடுத்த போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ, நாட்டின் நாயகனாக வைத்துக் கொண்டாடப்பட்டார். கழகங்களைப் பொறுத்தமட்டில், ரொனால்டோ ஸ்பெய்னின் ரியல் மட்ரிட்டைப் பிரதிநிதித்துவம் செய்கிறார். அந்த அணி கடந்த வருடம் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்றிருந்தது. இந்தக் கிண்ணத்தை ரியல் மட்ரிட் கைப்பற்றவும் ரொனால்டோவே முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். இதனையடுத்து கடந்த வருடத்தின் சிறந்த வீரராகவும் அவர் தெரிவானார்.


உலகக்கிண்ண கபடித் தொடரும் கடந்த வருடம் நடைபெற்றது. தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியா கிண்ணம் வென்றது.

மொத்தத்தில் ஒலிம்பிக், கால்பந்து, கிரிக்கெட், ரென்னிஸ், கபடி என்று அத்தனை விளையாட்டுக்களிலும் ஆகச் சிறந்த அடைவுகளை ஏற்படுத்திய ஆண்டாக கடந்த வருடம் பதிவாகியுள்ளது.

மு.ஈழத்தமிழ்மணி

# இறுதி மூச்சுவரை தனது இனத்துக்காகக் குரல் கொடுத்தவர் குமார் பொன்னம்பலம்

## அவரின் நினைவுநாள் இன்று



தலைநகர் கொழும்பில் இருந்தவாறே ஈழத்தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த குமார் பொன்னம்பலத்தின் படுகொலை திட்டமிட்ட சதியாகும். தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்துக்கு இறுதி மூச்சுவரை உழைத்த மனிதர் அவர். அப்போதைய தமிழர்மீதான படுகொலைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் பன்னாட்டு மட்டத்தில் அம்பலப்படுத்தி வந்த தேசப்பற்றாளர், மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 17ஆவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

### குமார் ஓர் அகிம்சைப் போராளி

குமார் பொன்னம்பலம் தமிழ் மக்களின் உயர்வுக்காக ஒரு அகிம்சைப் புரட்சிப் போராளியாக விளங்கியவர்.

1938ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பிறந்த குமார் பொன்னம்பலம், இயற்கை விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்று, 1974ஆம் ஆண்டு பரிஸ்டர் பட்டத்தையும் பெற்றிருந்தார். 1944 ஆம் ஆண்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வாலிபர் முன்னணிச் செயலாளராக 1966 ஆம் ஆண்டில் குமார் பொன்னம்பலம் அரசியலில் பிரவேசித்திருந்தார்.

சிறந்த சட்டத்தரணியாக விளங்கிய குமார் பொன்னம்பலம் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான வெ.யோகேஸ்வரனிடம் குமார் பொன்னம்பலம் தோல்வியடைய நேர்ந்தது. அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில்தமிழ் மக்களின் சார்பாக தானே முன்னின்று போட்டியிட்டிருந்தார். அதிலும் கூட அவர் தோல்வியையே தழுவ நேர்ந்தது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் திம்புக்கோட்பாட்டு அடிப்படையில் பல வழிகளிலும் ஐக்கிய தேசியக்கட்சியுடனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் மட்டுமன்றி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகளுடனும் இனப் பிரச்சினை சம்பந்தமாக உரையாடினார். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் குமார் பொன்னம்பலம் இனப் பிரச்சினைக்கானதொரு தீர்வைக் காண்பதற்கு அநுர பண்டார நாயக்காவைத் தன்னுடன் வன்னிக் காட்டுக்குள் அழைத்துச் சென்று, இனப்பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு துணிச்சலுடன் மேற்கொண்ட முயற்சியை சிங்கள மக்களோ, தமிழ்த்தேசிய இனமோ மறக்க முடியாது.

### துணிச்சலான முயற்சிகள்

1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா அரசும் ஆட்சியலிருந்தபோது, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பேராளர் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றிருந்தார் குமார் பொன்னம்பலம். மனித உரிமைகளின் பால் ஆழமான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். குடியியல் உரிமைகள் இயக்கக் கூட்டங்களில் அவர் தவறாமல் பங்குபற்றியதுடன் சீரிய சிந்தனையுடன் பயனுள்ள முறையில் தமது பங்களிப்புகளையும் செய்திருந்தார்.

குடியியல் உரிமைகள் இயக்கத்தின் ஆரம்ப நாள்களில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட சிங்கள இளைஞர்களுக்காக வழக்குகளில் முன்னிலையாகி கட்டணம் எதுவும் வாங்காது அவர்களுக்காக வாதாடியவர்.

குமார் பொன்னம்பலம் ஆயுதம் தாங்கிய போராளியாக அல்லாமல், அரசியல் போராளியாகச் செயற்பட்டவர். அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல ஆயினும்-தமிழ் மக்களது உரிமைக்காகப் போராடும் உறுதியிருந்தது. 'துணிவேதுணை' எனக் கொண்டு சிங்கள அரசுகளை எதிர்கொண்டு கொழும்புத் தலைநகரில் போராடிக் கொண்டிருந்தார். தன்னந் தனி ஒரு மனிதனாக நின்று தமிழர்களின் உரிமைக்காக இறக்கும் வரை குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

### சிறையில் வாடிய இளைஞர்கள்

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ் இளைஞர்கள்-யுவதிகள் பல நூற்றுக் கணக்கானோர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு காலம்தொடக்கம்-சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலம் வரையில்-கைது செய்யப்பட்டு சிறையில் வாடியபோது அவர்களுக்காக நீதிவேண்டி குமார் பொன்னம் பலம் ஆற்றிய சேவை அளப்பரியது.

முன்னை நாள் ஜனாதிபதியான சந்திரிகா ஆட்சியின்போது உயர்தர வகுப்பைச் சேர்ந்த மாணவியான கிருசாந்தி குமாரசாமி கொலைவழக்கில் யாழ்ப்பாணம் பெண்கள் மனித உரிமைகள் சங்கத்தின் சார்பில் குமார் பொன்னம்பலம் முன்னிலையாகியிருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலையில் 67 பொது மக்கள் இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தைக் கடுமையாக விமர்சித்திருந்தார். அத்துடன் படுகொலைகள் சம்பந்தமான விசாரணைக்கு துணிச்சலோடு முன்னராகியிருந்தார். இந்த வழக்கின்போது ஏனைய சட்டத்தரணிகள் முன்னிலை-பின் நின்ற வேளையில் தாம் துணிச்சலுடன் முன்வந்து முன்னிலையாகியிருந்தார்.

இவ்விரண்டு வழக்கு விசாரணைகளின்போது நடந்த சம்பவங்களை ஆதாரங்களுடன் வெளிக் கொணர்ந்திருந்தார். இலங்கை அரசுகளில் முக்கியமாக சந்திரிகாவின் அரசானது தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட அடக்குமுறைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து உலகத்தின் கண்முன் நிறுத்தியவர்.

### சந்திரிகாவின் குட்டை அம்பலப்படுத்தியவர்

தமிழ் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்வுப் பொதி உண்டு என்று கூறிய சந்திரிகாவின் போலிவேடத்தைக் கலைத்து-உண்மை உருவத்தைக் காட்டுவதில் குமார் பொன்னம்பலம் அயராது உழைத்தார். சந்திரிகாவின் அரசின் காலத்தில் பல இராஜதந்திரிகள் வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்தித்து தமிழர்களது நிலைகுறித்து உரையாடியிருந்தவர்.

துணிச்சலும் - நேர்மையும் வெளிப்படையாகப் பேசுகின்ற குணமும் அவரிடம் ஒன்று சேர்ந்திருந்தன. அரசின் நீதிக்கு விரோதமான நடவடிக்கை என்பதால், தேசிய அடையாள அட்டையை குமார் பொன்னம்பலம் தம்முடன் எடுத்துக் கொண்டு சென்றதில்லை. ஒரு தடவை இலங்கை இராணுவம் அவர் அடையாள அட்டை கொண்டு செல்லாத காரணத்தால் கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்னால் மறித்து விசாரித்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத் தலைமைத் தளபதிக்கு தேசிய அடையாள அட்டையை நான் ஒருபோதும் கொண்டு செல்லமாட்டேன். எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமானால் எடுங்கள் என அரசுக்கு சவால் விட்டிருந்தார். ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்ற சமயம் கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலையத்தில் அவரின் ஆவணங்கள் சோதனை செய்யப்பட்டன. அதன்பின் அவரும் ஜெனிவாவுக்குப் பயணமாகி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு விடுதலைப்புலிகளின் அரசியல்கொள்கையை ஆதரித்தும்-தமிழ்த்தேசிய இனத்துக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டிருக்கின்ற மனித உரிமைகளைப் பற்றியும் உரைநிகழ்த்தினார்.

> தமிழ் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்வுப் பொதி உண்டு என்று கூறிய சந்திரிகாவின் போலி வேடத்தைக் கலைத்து உண்மை உருவத்தைக் காட்டுவதில் குமார் பொன்னம்பலம் அயராது உழைத்தார். சந்திரிகாவின் அரசின் காலத்தில் பல இராஜதந்திரிகள் வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்தித்து தமிழர்களது நிலைகுறித்து உரையாடியிருந்தவர்.

### தமிழர் விரோதப் போக்கு

ஒருமுறை தொலைக்காட்சிக்குச் செவ்வியளித்தபோது சந்திரிகா அரசின் தமிழ் விரோதப் போக்குகளை வெளிக் கொண்டு வந்தமையினாலும், சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியதாலும் செவ்வியின் பின்னர், புலனாய்வுத் துறையினரால் கடுமையான விசாரணைக்கு குமார் பொன்னம்பலம் உட்படுத்தப்பட்டார். தன் மீதான விசாரணையின் போது ஒரு கட்டத்தில் அவர் நான் சிறிலங்காவில் நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்கு எதிராக நடந்து கொள்ளவில்லை. சட்டம் தடைசெய்த எதனையும் நான் செய்யவில்லை என வாதிட்டார்.

சிறிலங்கா அரசு தமிழர்கள் மீது பாரபட்சமாக நடக்கின்றது என அதே நீதித்துறையின் மீது அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றையும் தாக்கல் செய்தார். தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதச் செயல்களை அம்பலப்படுத்துவதிலும் தமிழினத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும் குமார் பொன்னம்பலம் தீவிரமாகச் செயற்பட்டார். அத்துடன் இன வெறிச் சட்டங்களால் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களை விடுவிப்பதற்காக தனது சட்டத் தொழிலின் பெரும் பகுதிநேரத்தை அர்ப்பணிப்புடன் அவர் செலவிட்டார். தமிழ் அரசியல் கைதிகளின் 95 வீதமானோரின் வழக்குகளை குமார் பொன்னம்பலமே கையாண்டிருந்தார். எந்தவித கட்டணங்களையும் அறவிடாது இலவசமாகப் பணி செய்த அவர் அதைத் தனது கடமை என வர்ணித்தார்.

### மௌனித்தது குமாரின் குரல்

அயராது உழைத்த குமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு எறிகுண்டுவீசி கொலை செய்யமுற்பட்டனர். தொலைபேசி வாயிலாக தினமும் கொலைப் பயமுறுத்தல்களை விடுத்தனர். தமது சட்டங்களுக்குள் அவரைச் சிக்க வைத்துச் சிறையில் அடைக்கவும்-அவரைப் பழிவாங்கவும் முற்பட்டனர்.

இறுதியில் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி குமார் பொன்னம்பலம் ஆயுததாரியினால் சுட்டுக் கொல்லப்படுகிறார். "கொழும்பிலிருந்து சிங்கத்துக்கே சவால் விட்ட தமிழனான" குமாரின் குரலை அப்போதைய அரசு மௌனிக்க வைத்தது. தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்குரலாக சர்வதேசமெங்கும் ஒலித்த குமார் பொன்னம்பலம் மறைந்து 17 ஆண்டுகளாகிவிட்டன. அவர் செய்த அரசியல் பணிகள் யாவும் என்ற தமிழ் மனங்களில் நிலைத்து நிற்கும். அந்த மாமனிதரின் நாமம் என்றும் தமிழர்கள் மத்தியில் நிலைத்து நிற்கும்.






**மேடம்:** சிலர் உங்களை குறை சொல்ல நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் அதிக விலையுள்ள பொருள்களை கவனமுடன் பாதுகாக்கவும்.


**இடபம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.


**மிதுனம்:** எதிலும் திறமையை வெளிப்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.


**கடகம்:** பேசுவதில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.


**சிங்கம்:** நண்பரை தவறாக கருதும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் வாக்குவாதம் செய்வது கூடாது.


**கன்னி:** அதிர்ஷ்டகரமான வாய்ப்பு உங்களை தேடி வரும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பெண்கள் வீட்டுக்கு தேவையான பொருள்கள் வாங்குவர்.


**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் உயரும். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டாகும்.


**விருச்சிகம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணி யாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடலாம்.


**தனுசு:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிட்டாலும் லாபம் குறையாது. பெண்கள் அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கி பழக வேண்டாம்


**மகரம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் லாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.


**கும்பம்:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடம் உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். உடலநலம் சீராக இருக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.


**மீனம்:** சேவை மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். நண்பரின் சந்திப்பால் இனிய அனுபவம் ஏற்படும்.

## ஆடு மேய்க்கும் சிறுவனின் காதல் ...



அன்பே அருகம்புல் போல வளர்த்து வைத்த நம் காதலை உங்கப்பன் எரும மாடு போல் மேய்ந்து விட்டானே...

அன்ரி, உங்க வீட்டில பெரிய கரண்டியா இருக்கா என்று அம்மா கேட்டுட்டு வரச் சொன்னாங்க...
ஓ... இருக்கே....



அப்படீன்னா அதில ஒரு கரண்டி மிளகாய்த் தூள் வாங்கிட்டு வரச் சொன்னாங்க....

என் மனைவி என்னிடம் சொன்னாள்
"நீங்க நடக்கும்போது ஒரு கம்பீரம்"
"சாப்பிடும்போது அழகு"
"நிற்கும்போது அமைதி"
"ஓடும் போது வேகம்"

எனக்கு அப்படியே புல்லரிச்சுப் போச்சு.

அப்புறம்? என நான் கேட்க....

அவள் சொன்னாள்

"உங்களையெல்லாம் படம் பிடிச்சு ஏன் டிஸ்கவரி அலைவரிசையில் போட மாட்டேங்குறாங்க?



அன்பே என்னை அன்பால் கொன்றுவிடு....



இல்லை அப்பல்லோவில் சேர்த்து விடு....

கோழியின் கிறுக்கல்!!

ஆரம்பத்தில் அனுபவித்துச் செய்தவை போகப் போக கடமைக்காய் செய்ய வேண்டியதாகிவிடுகிறது...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | 8 | | |
| | | 4 | 5 | 3 | | | | 6 |
| | | | 8 | | | 2 | | 1 |
| 4 | | | | | | | 1 | |
| | | | 7 | | 5 | | | |
| | 6 | | | | | | | 2 |
| 9 | | 1 | | | 6 | | | |
| 8 | | | | 9 | 2 | 3 | | |
| | | 2 | | | | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 5 | 2 | 8 | 4 | 1 | 7 | 3 |
| 8 | 7 | 2 | 9 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 1 | 4 | 3 | 5 | 6 | 7 | 2 | 8 | 9 |
| 3 | 5 | 4 | 8 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 6 | 2 | 8 | 3 | 4 | 1 | 7 | 9 | 5 |
| 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 4 | 3 | 8 |
| 5 | 3 | 7 | 1 | 2 | 8 | 9 | 6 | 4 |
| 2 | 9 | 6 | 4 | 3 | 5 | 8 | 1 | 7 |
| 4 | 8 | 1 | 7 | 9 | 6 | 3 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 3 மொழிகளில் படமாகிறது ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை பிரபல தெலுங்கு இயக்குநர் தாசரி நாராயண ராவ் படமாக்குகிறார். தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய 3 மொழிகளிலும் இந்தப் படத்தை இயக்கவுள்ளார்.

அவர் தனது படத்திற்கு அம்மா என்ற தலைப்பை தேர்வு செய்து பதிவும் செய்துவிட்டாராம். திரைக்கதைப் பணிகள் நடந்து வருகிறதாம். படத்தை தாசரி நாராயண ராவே தயாரிக்கிறார் எனக் கூறப்படுகிறது. யார் ஜெயலலிதாவாக நடிக்கப் போகிறார் என்பது தெரியவில்லை. ஜெயலலிதாவாக நடிக்க ஆசையாக இருப்பதாக நடிகைகள் ரம்யா கிருஷ்ணன் மற்றும் த்ரிஷா தெரிவித்துள்ளனர். ஆயினும் இந்தப் பாத்திரத்தில் யார் நடிப்பது என்று இன்னும் உறுதியாகவில்லை என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உருளைக்கிழங்கு மசாலா போளி



### தேவையான பொருள்கள்:

உருளைக்கிழங்கு - 4
கடலை பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
உளுத்தம் பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
முந்திரி பருப்பு - எட்டு
கோதுமை மா - இரண்டு கப்
பச்சை மிளகாய் - ஒன்று
கறிவேப்பில்லை - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிதளவு
கடுகு - ஒரு தேக்கரண்டி
மஞ்சள் தூள் - அரை தேக்கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
நல்லெண்ணெய் - இரண்டு மேசைக்கரண்டி
நெய் - தேவையான அளவு

### செய்முறை

சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி போட்டு வதக்கவும். அதில் மசித்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து கலந்து வைத்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் கோதுமை மா, உப்பு, எண்ணெய் சிறிதளவு, தண்ணீர் சேர்த்து நன்றாக ரொட்டி மா போன்று சற்று தளர்வான பதத்திற்கு பிசைந்து கொள்ளவும். மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். பிறகு, ஒரு உருண்டை எடுத்து வாழை இலையில் தட்டி நடுவில் பூரணம் வைத்து மூடி மறுபடியும் மெல்லியதாக தட்டி, சட்டியில் சுற்றி நெய் ஊற்றி போளி சுட்டு எடுக்கவும். சுவையான உருளைக்கிழங்கு போளி தயார்.



# தொப்பையைக் குறைக்க உதவும் யோக முத்ரா

நீண்ட நேரம் கணினி முன் உட்கார்ந்து வேலை செய்பவர்கள் யோக முத்ராவை செய்து வருவது நல்லது.

### செய்யும் முறை

முதலில் விரிப்பில் பத்மாசனத்தில் அமர்ந்த பின் கைகளை பின்னே (முதுகு பக்கம்) மடித்து, வலது கை, இடது காலின் பெருவிரலையும், இடது கை வலது காலின் பெருவிரலையும் தொடுமாறு பார்த்துக் கொண்டு, மூச்சை வெளியே விட்டவாறு குனிந்து, மூக்கு அல்லது வாயால் தரையைத் தொட வேண்டும்.
இப்படி இந்த நிலையில் 30 வினாடிகள் இருந்த பின்னர் மூச்சை உள்ளே இழுத்தவாறு எழ வேண்டும். இப்படி தினமும் 5 முதல் 7 முறை செய்து வர வேண்டும். இந்த ஆசனத்தில் ஆரம்ப காலத்தில், கைகளை பின்புறம் கட்டியவாறு குனித்து இந்த ஆசனத்தை செய்யலாம்.
ஆரம்பகாலத்தில் முன்னால் குனிந்து தரையை தொடுவது சற்று கடினமாக இருக்கும். ஆனால் அதற்காக கவலைப்படவேண்டியதில்லை. தொடர்ந்து செய்து வந்தால் தரையை தொட முடியும்.

### பயன்கள்

நீண்ட நேரம் கணினி முன் உட்கார்ந்து வேலை செய்பவர்கள் யோக முத்ராவை செய்து வருவது நல்லது. இதனால் முதுகுத்தண்டுவடத்தில் நல்ல வளைவு ஏற்படுவதோடு, முதுகு வலி வருவது தடுக்கப்படும்.
யோக முத்ரா நிலையின்போது இரண்டு குதிக்கால்களும், பெருங்குடலும் நன்றாக அழுந்துவதால், நாள்பட்ட மலச்சிக்கல் நீங்கும்.
உடலின் தண்டுவடத்தில் இருந்து செல்லும் நரம்புகள் அனைத்தும் வலிமைப் பெறும். நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் செயற்பட உதவும். யோக முத்ரா நிலையை தினமும் தவறாமல் செய்து வந்தால், நீரிழிவை கட்டுப்பாட்டுடன் வைப்பதோடு, அதனால் ஏற்படும் வேறு பல பிரச்சினைகளையும் தவிர்க்கலாம்.
முதுகு வலியால் அவஸ்தைப்படுபவர்கள், இந்த யோகா முத்ரா ஆசனத்தை செய்து வந்தால், முதுகு வலி பறந்தோடிவிடும். இந்த யோகா நிலையின் போது வயிற்றுப் பகுதி அதிகம் அழுத்தப்படுவதால், வயிற்றைச் சுற்றி தேங்கியுள்ள கொழுப்புக்கள் கரைந்து, தொப்பை விரைவில் குறையும்.



# சோப்பின்றி முகத்தைச் சுத்தம் செய்யும் முறை

ஒரு நாளைக்கு ஒரு முறைக்கு மேல் சோப்புகளை முகத்திற்கு பயன்படுத்தக்கூடாது, சோப்பில் உள்ள இரசாயனங்கள், சரும வறட்சியையும், பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். நித்திரைக்குச் செல்லும் முன்னர் இயற்கை பொருள்களால் உடலைச் சுத்தம் செய்வது மிகச் சிறந்ததாகும்.

### தேன்

தேன் மிகவும் சிறப்பான மற்றும் சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்துக் கொள்ளும் ஓர் அற்புத பொருள். இது சருமத்துளைகளில் அடைப்புக்களை ஏற்படுத்தாமல், சருமத்தில் உள்ள அழுக்குகளை முற்றிலும் வெளியேற்றும். அதற்கு தேனை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து தேய்த்துக்கழுவ வேண்டும்.

### எலுமிச்சை

எலுமிச்சை சாறு சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் கருமையைப் போக்கவல்லது. அதற்கு எலுமிச்சை சாறு மற்றும் நீரை சரி சம அளவில் எடுத்து, முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள்.

### தேங்காய் எண்ணெய்

தேங்காய் எண்ணெய் மேக்கப்பை நீக்க மிகவும் சிறப்பான பொருள். ஆகவே இனிமேல் பணத்தை வீணாக மேக்கப் ரிமூவர் வாங்க செலவழிக்காமல், தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி நீக்குங்கள்.

### அப்பிள் சீடர் வினிகர்

1 கோப்பை அப்பிள் சீடர் வினிகரில், 2 கோப்பை நீர் சேர்த்து கலந்து, முகத்தைக் கழுவி வர, முகத்தில் உள்ள பருக்கள் நீங்கும். ஆனால் இச்செயலை வாரத்திற்கு ஒருமுறை தான் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், சருமம் அதிக வறட்சியடையும்.

### தயிர்

தயிர் இயற்கையான ஈரப்பதம் கொண்டது. இது சருமத்தில் இருக்கும் அழுக்குகளைப் போக்கும். குறிப்பாக தயிரை வெயிலில் அதிகம் சுற்றுபவர்கள் பயன்படுத்தினால், வெயிலால் கருமையான சருமத்திற்கு மீண்டும் நிறமூட்டலாம்.

### ஒலிவ் எண்ணெய்

ஒலிவ் எண்ணெய் சருமத்தில் உள்ள அழுக்குகளைப் போக்குவதோடு, மேக்கப்பை நீக்கவும் உதவும். அதற்கு தினமும் இரவில் படுக்கும் முன் ஒலிவ் எண்ணெயைக் கொண்டு, சருமத்தை மசாஜ் செய்ய வேண்டும். இதனால் சருமம் மென்மையாக இருக்கும்.





## இது புதுசு

ரியுலிப் பூக்கள் அறிமுகமாகியுள்ளன. பல வர்ணங்களில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவை 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள்



# உரமானியம்

தனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளின் நலன்கருதியதான எந்தவொரு செயற்பாடுகளி லும் விவசாயத் திணைக்களங்கள் அக்கறை கொள்வதில்லை. மாவட்டத்தின் அனைத்து விவசாயிகளின தும் ஏகோபித்த கருத்தாகவும் இது உள்ளது. திணைக்களங்களைப் பொறுத்த வரையிலே அவர்கள் அவசரத் தீர்மானங்களை எடுப்பவர்களாகவும் அவற்றை முன்மொழிபவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் அவற்றை சிறந்த முறையிலே வினைத்திறனாக நடைமுறைப் படுத்துவதில் எந்தவிதமான அக்கறையையும் கொண்டிருப்பதில்லை.

விவசாயிகளுக்கான கொடுப்பனவுச் செயற்பாடுகள், கூட்டத் தீர்மானம் என்பவற்றில் இதே நிலமைகள் தொடர்கின்றன. குறிப்பாக வயல் வேலிகளுக்கான அமைவு தொடர்பில் தவணை போடப்படுகிறது. குறிப்பிட்ட திகதிக்குள் வேலி அடைக்கா விட்டால் தண்டம் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் பயிர்விதைப்பை மேற் கொண்டு ஒருமாத காலம் சென்றாலும் வேலி அடைக்கப்படுவதில்லை.

கால்நடைகளின் ஊடுருவலால் பயிர் அழிவு ஏற்படுகிறது. இது குறித்து மாவட்டத்திலுள்ள கமக்கார அமைப்புகளோ அல்லது கமநல சேவை அதிகாரிகளோ கவனமெடுப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வோர் வருடமும் இதே நிலமைகள் தொடர்கின்றன.

**உரமானிய வழங்கல்**

உரமானிய வழங்கலைப் பொறுத்த வரையிலே பயிர் விதைப்பு இடம்பெற்று 30 நாள்கள் அல்லது 45 நாள்களுக்கு பிற்பாடாகவே விவசாயிகளிடம் உரமானது கிடைக்கப் பெறுகிறது. விவசாயத்துக்கென வழங்கப் பட்டு வருகின்ற வீவண் (அடி உரம்) மற்றும் ஙைதரசன் (யூரியா) உரங்கள் வரிசையில் உண்மையிலே அடிஉரம் (வீவண்) விதைப்பை மேற்கொள்ளும் போதும் யூரியா பயிர்விதைப் பின் பின்பான 21 நாள்களின் உள்ளா யும் டீ.டீ.எம் 45 - 60 நாள்களுக்குள்ளும் இடப் பட வேண்டும். ஆனால் ஒரு மாத காலத்தின் பின்பாக உரம் வழங்கப்படும்போது அவற்றை எந்த வகையில் பயன்படுத்துவது..? பயனுறுதியாக்குவது? விவசாயிகள் தொடர்ச்சியாக எதிர்கொண்டுவருகின்ற மேற்படி செயல் நிலைகளின் தொடர்புறல் என்பது இப்போதும், எப்போதும் காலம் கடந்த ஞானமாகவே இருந்துவருகிறது.

விவசாயிகள் காலம் தப்பி உரத்தை பயன்படுத்துகின்ற காரணங்களும் எமது நிலம் தற்போது செயற்கை உரத்தின் ஆகாரத்தை உண்டு அதிலேயே ஊறிப் போய்விட்ட தன்மைகளும் பயிர்களிடமிருந்து உரிய விளைச்சலைத் தரமறுக்கின்றன.

அண்மைக்காலத்தில் உரமானியத்துக்கு உரம் கொடுப்பதை நிறுத்தி அதற்கு பதிலீடாக பணம்வழங்கப்படும்நிலைஉருவாகியபோதும் உரிய காலத்தில் உரத்தைப் பெற்றுக் கொண்டு பயிர்களுக்கு இடமுடியவில்லை. தற்சமயம் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் 45 நாள்களை தாண்டியுள்ளது. இது வரைக்கும் உரமானியத்திற்கான பணம் என்பது வழங்கப்படவில்லை. உரமானியப் பணமானது பணக்காரர்களுக்கு பொருத்தமுற இருக்கின்றபோதும் ஏழை விவசாயிகளுக்கு பொருத்தமற்றதாகி விடுகின்றமையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஏழை விவசாயிகள் பணம் வரும் என்ற எதிர் பார்ப்பில் காத்திருக்கும் போது பயிர்கள் அனைத்தும் வளராது சக்தியை இழந்து விடுகின்றன.

அடி உரமாகிய வீ.வண் உரத்தை இடமுடியாத நிலையில் பயிர்களுக்கான முக்கிய உரத்தின் பெறுபேறு என்பது முற்றாக வினைத்திறனற்றுப் போகின்றது.

ஆக,திணைக்களங்கள் மற்றும் கிராமமட்ட விவசாய அமைப்புகள் இது விடயம்தொடர்பில் கூடிய கரிசனைகொள்ளவேண்டும்..! விவசாயிகளின் நலன் கருதி பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் செயல்திறனுடையவர்களாகவும் பணியாற்ற வேண்டும்...!


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்**

மலர்வு
08.07.1943

உதிர்வு
05.01.2015



ஆண்டுகள் இரண்டு ஆனதுவே
துயர் ஆறவில்லை- நீங்களின்றி
நாமின்று நிர்க்கதியாய்த் தவிக்கின்றோம்
வாராயோ இன்னொரு கால் எம்மோடு வாழ்வதற்கு

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நொச்சிமோட்டை,
ஓமந்தை.
(V 172)(12.18)

என்றும் நினைவில்
சி.மலர்மாலை (மனைவி- ராணி)
077 444 3339

## நீங்காத நினைவலைகளில் .....
## முதலாம் ஆண்டு நினைவலை

தோற்றம்
04 . 03 . 1941



மறைவு
18 . 12 . 2015

**அமரர் தம்பிப்பிள்ளை இராசரத்தினம்**

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் ஆனைக்கோட்டை)

திதி: மார்கழித் திங்கள் வளர்பிறை அட்டமி

**என்றென்றும் உம் நினைவுகளுடன் .....**

பரராஜ சேகரப்பிள்ளையார்,
கோயில் வாசல், இணுவில் தெற்கு,
சுன்னாகம். (ஜே/7386)(12.18)

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வைத்தி கணபதிப்பிள்ளை**



தோற்றம்
06 . 06 . 1929

மறைவு
05 . 01 . 2013

காலம் கடந்து சென்று -நம்
வாழ்வில் பல உறவுகளை அது
காவு கொண்டு செல்கிறது
அருமை ஐயாவை அருகிழந்து - இன்று
அநாதையாய்த் துடிக்கின்றோம்

அன்பின் பெருமையை உணர்த்திய தெய்வமே! சற்று
ஆற்றல் இழந்து ஆறிய காலம் தானோ
இருக்கும் வரை இன்பம் எனும்
இனிய வாழ்வை அளித்தீரே.....

நீர் அணைந்து ஆயிரம் நாள்கள் தாண்டியும்
ஆறாத்துயரை நெஞ்சில் சுமக்கின்றோம்
இந் நான்காம் ஆண்டிற்கு நல் மலர்த் துகளை
மலர் சாந்தியாக செலுத்துகின்றோம்

16, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (ஜே/7371)(12.18)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## பிறந்த நாள்







மலேசியாவில் இருந்தபோது தமிழ்த்தட்டச்சின் விசைப்பலகையை முதன்முதலாக வடிவமைத்து தட்டச்சை ஜேர்மனியில் உருவாக்கி மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு, இலங்கை, பர்மா, பீஜித்தீவு, மொரிசியஸ்,தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் விநியோகித்த

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைச் சேர்ந்த **இராமலிங்கம் முத்தையா** அவர்களின்

இரணைப்புதல்வியர் **திலகவதி - பத்மாவதி** ஆகியோரின் பிறந்தநாள்.

ஆராதிப்பவர்கள்: யசோதினி Dr. கைலாசநாதன் (ஆஸ்திரேலியா)
கா. மாணிக்கவாசகர் (ஓய்வு நிலை நூலகர், யாழ். மத்திய கல்லூரி)

அன்பளிப்பு: விசாகப்பெருமாள் வசந்தன் (லண்டன்), வி.சந்திரகுமார் (நோர்வே).

## T.O தேவை

Civil Engineering Construction Sites இல் வேலை செய்வதற்கு முன் அனுபவம் மிக்க Technical officers தேவை. தகுதியானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 077 344 4801
CV ஐ -Wijetel@yahoo.com இந்த Email செய்யவும்.

## காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் கிழக்கு சிவபூமி பாடசாலை முன்பாக 3 பரப்பு உடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 474 4943**

ஒளி அழகனின்

## British-College-of-Beauty-Studies



### இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக்கல்லூரி

- அழகுக்கலை
- தையற்கலை
- சமையற்கலை
- ஆங்கிலம்
- கேக் ஐசிங்
- Ladies skills Development

- குறுகியகால பயிற்சி வகுப்புக்களையும் முழுநேர பயிற்சி வகுப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- அனைத்து பாடநெறிகளும் புதிய பாடத்திட்டங்களே!
- அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சியளிக்கப்படும்.
- பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி!
- பெண்களும் இந்த உலகில் பல துறைகளில் சாதனை படைத்து முன்னேறமுடியும்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல இடங்களில் எமது கிளைகளை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளோம்.
வேலணை, நெல்லியடி, கிளிநொச்சி போன்ற இடங்களில் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க உள்ளோம்.
07.01.2017 அன்று 02.30 P.M க்கு ஒரு புதிய High Diploma in Advance Make up பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கவுள்ளோம்.
நேரில் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். முதல் இணையும் 10 மாணவர்களுக்கு Hair Style போடும் 3500/= பெறுமதியான Dummy (பொம்மை) இலவசம்.

தலைமை காரியாலயம்
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
(உதயன் அருகில்)

076 701 1645
021 320 4150

கிளை,
பலாலிறோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்

## பொறியியல் இளமாணிப் பட்டம்

மற்றும்

## தொழில்துறைசார் பொறியியல் இளமாணிப் பட்டம்

கல்வியாண்டு 2016/2017

மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பொறியியல் இளமாணிப்பட்டம்

அனுமதித் தேவைகள்

க.பொ.த (உயர்தர) கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி **அல்லது** திறந்த பல்கலைக் கழகத்தின் அடிப்படை தொழில்நுட்பக் கற்கைநெறியில் சித்தி **அல்லது** இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது அதற்குச் சமனான அல்லது கூடுதலான தகுதி.

### தொழில்துறைசார் பொறியியல் இளமாணிப் பட்டம்

அனுமதித் தேவைகள்

க.பொ.த (உயர்தர) விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி **அல்லது** திறந்த பல் கலைக்கழகத்தின் அடிப்படை தொழில்நுட்பக் கற்கைநெறியில் சித்தி **அல்லது** இலங்கைத் திறந்த் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது அதற்குச் சமனான அல்லது கூடுதலான தகுதி.

க.பொ.த (உயர்தர) கணித, விஞ்ஞானப் பிரிவில் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எனினும், மாணவர் பதிவின் போது அவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் அவசியமானதாகும்.

பாடப்பரப்புக்கள்

குடிசார் எந்திரவியல், கணினி எந்திரவியல், மின்னியல் எந்திரவியல், இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல், இயந்திரவியற் பொறியியல், எந்திர மின்னணுவியற் பொறியியல், புடைவை மற்றும் ஆடைகள் கைத்தொழில் சார் பொறியியல்.

விண்ணப்பப்படிவக் கட்டணம்: ரூபா 350/=
விண்ணப்பிக்கும் காலம் : 14.12.2016 தொடக்கம் 24.01.2017
www.ou.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்தியநிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கைநிலையம் | இல 366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கைநிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கைநிலையம் | ஓட்டிசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 071 - 3522367 |
| மன்னார் கற்கை நிலையம் | தலைமன்னார் வீதி, மன்னார். | 077 - 5625352 |

இணைய வருவழி மூலமே விண்ணப்பிக்க முடியும்

பதிவாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்



பிறப்பு
24 . 01 . 1951

இறப்பு
02 . 01 . 2017

### விசுவநாதபிள்ளை சிறீகாந்தராசா

**(ஓய்வுபெற்ற மேலதிக மாவட்ட பதிவாளர், பதிவாளர் நாயகம் திணைக்களம்)**

யாழ்ப்பாணம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், 46/2, அரச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதபிள்ளை சிறீகாந்தராசா 02.01.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விசுவநாதபிள்ளை - காலஞ்சென்ற அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், பிறேமராணியின் அன்புக் கணவரும், அகிலன், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ரம்மிகா, தனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமானும், விமலேஸ்வரன் (சட்டத்தரணி - கொழும்பு), மனோகரன் (வைத்தியர் - சிட்னி), யோகேந்திரன் (பொறியியலாளர் - கட்டார்), செல்வராணி (ஜேர்மனி) மற்றும் கனடாவில் வசிக்கும் புஸ்பராணி, குணசேகரன், கமலராணி, யோகராணி, நாகநாதன், இராமச்சந்திரன், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீபிறேமச்சந்திரன், பிறேமமாலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**46/2, அரச வீதி,**
**நல்லூர் யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**071 448 5583/ 077 748 2107**

(ஏ.7399)
(13.18.17)

## மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 06 . 1938

இறப்பு
03 . 01 . 2017

### பண்டாரி சின்னத்துரை(வெள்ளை)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி சின்னத்துரை (வெள்ளை) 03.01.2017 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - பூதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலன் - செல்வி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ் சென்ற நேசமணி(இலட்சுமி)யின் அருமைக் கணவரும் சகிலா, சசிகரன்(சுசி - லண்டன்), குகதாஸ்(சுவிஸ்), ரமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா(கைதடி M.P.C.S ஓய்வு நிலை உத்தியோகத்தர்), தயானி(லண்டன்), கமலினி(சுவிஸ்), ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனும் தர்மசீலன்(சுவிஸ்), விமல்(ஆசிரியர் - தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை), நிதர்ஷன், பரனேஸ்(லண்டன்), தேனுசன்(சுவிஸ்), வர்ணிகன் (சுவிஸ்), நேசிகா(சுவிஸ்),ரெனிசியா, பர்வேஸ் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற சின்னப்பெட்டை மற்றும் வள்ளிப்பிள்ளை , நாகம்மா, சின்னம்மா, இலட்சு மணன், வேலுப்பிள்ளை ஆகியோரின்அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்லர், சுப்பர், கதிரன், பார்க்கியம் மற்றும் வேலன் சரஸ்வதி, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2017) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி[illegible]க்காக முற்பகல் 10.00 மணிக்கு கைதடி ஊரியான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்[illegible]படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ந[illegible]பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
**மகன் - சசிகரன்**

**தொடர்பு : 0[illegible] 615 2321**

# அலுமாரிக்கு அடியில் சிக்கிய தம்பியை காப்பாற்றிய இரண்டு வயது அண்ணன்







நியூயோர்க், ஜன. 5

அலுமாரிக்கு அடியில் அகப்பட்ட தம்பியைக் காப்பாற்றிய இரண்டு வயது அண்ணன்.

அமெரிக்காவின் உடாவில் நகரில் இரட்டையர்களான பாவ்டியும் ப்ராக் ஷாஃபும் தங்கள் அறையில் விளையாடிக்கொண்டிருந்தபோது இது நடந்தது.

அலுமாரிக்கடியில் சிக்கிய தம்பியை காப்பாற்றத் தவித்த இரண்டு வயது அண்ணன் பாவ்டி ஷாஃப், அலுமாரியை சுற்றிவந்து பார்த்து நின்று சில நொடி நிதானமாக யோசித்து இறுதியில் அதைத் தூக்கித் தம்பியை காப்பாற்றினார்.

இந்த காட்சிகள் அனைத்தும் அவர்கள் அறையில் இருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாயின.

இருவருமே காயங்களின்றி தப்பினாலும் இந்த காட்சிகளைப்பார்த்து பதைத்துப் போனதாக கூறுகிறார் இவர்களின் தாய் கைலி ஷாஃப். இந்தக் காட்சிகளை வெளியிட பெரிதும் தயங்கினாலும் மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்படும் ஏன்பதனால் தயக்கத்துடனே இதை வெளியிடுவதாக இந்த இரட்டையரின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

தற்போது அந்த அலுமாரியை ஆணிகள் மூலம் சுவற்றோடு இணைத்து விழாமல் செய்திருப்பதாகவும் மற்றப் பெற்றோரையும் அப்படிச் செய்யும்படியும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

## விற்பனைக்கு

நல்லின ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
077 860 5098, 077 967 2613

## விடுதி பராமரிப்பாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் விடுதிக்கு
பராமரிப்பாளர்கள் தேவை.
வேலைக்கு ஏற்ப சம்பளம்
வழங்கப்படும்.
தொடர்பு - 077 666 4674

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2832 திகதி 04.01.2017

12 22 29 55 X 27 ரூ. 43,679,937/-

## Galaxy Star

வெற்றி வாரம் 124 திகதி 04.01.2017

01 02,30,36,56

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,044,725 /-

## Makeup for Graduation



பட்டம் பெறும் பெண்களுக்கான
- முக அலங்காரம் ( Face makeup )
- தலை அலங்காரம் ( Hair styles ) (இயற்கையான பூக்களால்)
- சேலை அலங்காரம் ( Saree wrapping )

இந்தியாவில் தேர்ச்சி பெற்ற கலைஞரால் மிகச்சிறந்த முறையில் மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும்.

(J/7400)(10.17.19)

தொடர்பு:-
**Flora Beauticians** அரச வீதி, நல்லூர்.
T.P: 077 211 2464 / 077 6198270

## மருந்தாளர் (Pharmacist) தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல
மருத்துவ நிலையம் ஒன்றிற்கு
மருந்தாளர் உடனடியாகத் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம்
பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு. சு. நகுலன் - 077 627 4919

பீனிக்ஸ் பறவையாய் எழுவோம்
கனடா பழைய மாணவர் சங்க அனுசரணையுடன்......
காங்கேசன்துறை அபிவிருத்திச் சங்கம் நடத்தும்
**காங்கேசன்துறை நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய**

## * ஒளிவிழா *

இடம்:- **வித்தியாலய மண்டபம்**
காலம்:- **06.01.2017 முற்பகல் 10.30 மணி**
தலைவர் :- **திருமதி வசந்தராணி சுதர்சன்** (அதிபர்)
சிறப்பு விருந்தினர்கள்:- **வண.றெக்ஸ் சவுந்தரா அடிகள்**
(குளமங்கால் பங்குத்தந்தை)
**வண. அன்ரனிபாலா அடிகள்**
(நாவாந்துறை.பங்குத்தந்தை-பழையமாணவர்)
**திரு.P.அமிர்தலிங்கம்**
(யா/நடேஸ்வரக்கல்லூரி.அதிபர்)
**திரு.க.ஞானேந்திரன்**
(தலைவர்.காங்கேசன்துறை அபிவிருத்திச்சங்கம்)

* கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.
* பழையமாணவர்கள்.நலன்விரும்பிகள்.பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,காங்கேசன்துறை அபிவிருத்திச்சங்கம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1951.01.31



மறைவு 2015.12.18

### சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

காலக்கைகள் ஓவியத்தில் வர்ணம் வரைவதும்
அழித்து முடிப்பது தன் சுதந்திரமென மாற்றி
வரைந்த கோலம் மானுட மனுசி ஒருத்தியின்
நாடக நடிபங்கை முடித்துப் போட்டது
புலர்வதும் உதிர்வதுமாய் ஓராண்டு பொழுதுகள்
தங்களின் நினைவுகளால்.........
நினைவுகள் மட்டும் எமக்கு பரிசளித்து தங்கள்
வாழ்கைப்பயணம் ஓய்ந்தது ஓராண்டு.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1946.10.10 மறைவு 2016.12.06

அமரர்

### தம்பிப்பிள்ளை நடேசு

கடந்த 2016.12.06 சிவபத மடைந்த அமரர் தம்பிப்பிள்ளை நடேசு அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (2017.01.05) வியாழக்கிழமை ந.ப 12 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இல.53, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சர்வானந்தன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும். திருகோண மலை, உப்புவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சர்வானந்தன் 04.01.2017 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடலியடைப்பைச் சேர்ந்த முத்து மாணிக்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சொர்ண பவானியின் அன்புக் கணவரும் ரிஷானந், ரிஷாந்தி, பவானந் ஆகியோரின் அன்புத் தந்தையும் புலேந்திரன், மகேந்திராதேவி, விமலாதேவி, மனோன்மணிதேவி , கோணேஸ்வராதேவி, சுவர்ணராசா, சிவஞானதேவி, ஈஸ்வரிதேவி, சற்குணேஸ்வரி, சத்தியரூபி ஆகியோரின் அன்புச் சகோதரரும் முகுந்தன், ஜெகதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிநேருஷன், தேஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பண்ணை வீதி, உப்புவெளி,
திருகோணமலை.

(C/ 27578) (12,17,18,)

தகவல்:
குடும்பத்தினர்.

026 222 0297, 077 717 9643

## மரண அறிவித்தல்



### இளையதம்பி குலவீரசிங்கம்

(மணிமாலை சப்பற உரிமையாளர்)

சண்டில் மத்தொணி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி குலவீரசிங்கம் நேற்று (04.01.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாறுபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் குருபரன்(அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி), காலஞ்சென்ற குகதாசன், நிபேதிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனேஸ்வரி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ஜெயவீர சிங்கம், வன்னியசிங்கம், காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, சிவமலர் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர் களான வைரவப்பிள்ளை, கனகசபை, கிருஸ்ணகுமார் மற்றும் ஈஸ்வரி, புஸ்பராணி, இரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும் விஜயகுமாரி (முன்பள்ளி ஆசிரியர் , பொலிகண்டி மக்கள் படிப்பகம்), வினோதினி ஆகியோரின் மாமனாரும் ராகுலன், ராதையன், சங்கவி, கஜறூபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

" சண்டில் ", மத்தொணி,
கரவெட்டி.


(N/216) (14,17,18,)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாவோபாப்.! ஓர் அதிசய மரம்

இந்த மரத்தில் அப்படி என்ன அதிசயம் உள்ளது என்றுதானே கேட்கிறீர்கள்..? அதிசயம்! உயரம் என்று எடுத்துக் கொண்டால் 16 அடி முதல் 98 அடி வரை தான் இருக்கும். செக்வோவியா, ஆஸ்திரேலிய நாட்டு யூக்கலிப்டஸ் மரங்கள் 400 அடிவரை உயரமானவை. மரத்தின் குறுக்களவைக் (விட்டம்) கணக்கிட்டால் 23 அடி முதல் 36 அடிவரை உள்ளது. அதற்கிணையாக மரத்தின் சுற்றளவு 154 அடி வரை உள்ளது. இந்தப் பார்வையில் பார்க்கும்போது பாவோபாப் மரங்கள்தான் உலகின் மிகப் பெரிய மரங்கள். பேரதிசயம் என்னவென்றால் அடிமரத்தின் உட்பகுதி மூங்கில்போல் வெற்றிடம் கொண்டதாகவும் நீர் நிறைந்தும் இருக்கும். எவ்வளவு தண்ணீர் தெரியுமா..? பெரியதோர் பாவோபாப் மரத்தின் கொள்ளளவு என்பது 1,20,000 லீற்றர்கள். மேலும் கடும் கோடைக் காலத்தில் ஒரு சொட்டு நீர் கூட ஆவியாக வெளியேறாதவாறு பாதுகாப்பாக இருக்கும். தண்ணீரில் வேறு பயனுள்ள சத்துக்களும் உண்டு. வறட்சிக் காலங்களில் மடகாஸ்கர் - ஆபிரிக்க நாட்டு ஏழை மக்கள் இதன் நீரைப் பருகிப் பயன்பெறுவர். மேல்மரம் காய்ந்துவிட்ட நிலையில் பல கிராமங்களில் அடிமரத்தை நீர்த்தேக்கத் தொட்டியாகப் பயன்படுத்துவதாக அறிவியலாளர்கள் கூறகின்றனர்.

இலத்தீன் மொழியில் இவற்றை ஆடன்சோனியா என்று அழைக்கிறார்கள். இந்த மரத்தை மடகாஸ்கர் நாட்டில் முதன் முதலாக பிரான்ஸ் நாட்டைச் சோர்ந்த ஆடன்சன் என்ற விஞ்ஞானி கண்டறிந்து உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அவரை கௌரவிக்கும் விதத்திலேயே இம் மரத்திற்கு இலத்தீன் மொழியில் ஆடன்சோனியா என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. ஆடன்சோனியா அதாவது பாவோபாப்பில் ஏழுவகை மரங்கள் உண்டு. இவற்றில் ஆறுவகை மரங்கள் மடகாஸ்கர் நாட்டிற்குரியவை. இந்த ஆறில் ஒரு வகை மட்டும் ஆபிரிக்க நாடுகளிலும் காணப்படுகிறது. ஏழாவது வகை ஆஸ்திரேலியா நாட்டிற்குரியதாக விளங்குகிறது. பாவோபாப் என்பது இந்த வகை மரங்களின் பொதுவான பெயர். இம்மரத்தை போஆப், போவாபோவா, தலைகீழ் மரம், குரங்கு-ரொட்டி மரம் என்றெல்லாம் அழைக்கின்றனர். தென்ஆபிரிக்காவின் லிம்போமா மாகாணத்தில் உள்ள க்ளென் கோபர்வோபாப் உலகின் மிகப் பெரிய மரமாகக் கருதப்படுகிறது. இதன் சுற்றள்வு 47 மீற்றர் (154 அடி). பல்வேறு பாவோபாப் மரங்கள் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தவையாகக் கருதப்படுகின்றன. ஏனைய மரங்களில் அவற்றின் வயதைக் குறிக்கும் வளர்ச்சி வட்பங்கள் (குறோத் றிங்ஸ்) போல பாவோபாபில் கிடையாது. ஆனால் கார்பன் டேட்டிங் முறையில் இவற்றின் வயதைக் கணிக்க இயலுமென கூறப்படுகிறது.



மடகாஸ்கர் நாட்டின் காடுகளில் ஆடன் சோனியா மடகாஸ்கரியன்சிஸ் மற்றும் ஆடன் சோனியா ரூப்ரோஸ் ரைப்பா வகை மரங்கள் காணப்படுகின்றன. கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் ஆடன்சோனியா டிஜிட்டாட்டா வகை மரங்கள் வளர்கின்றன. இம்மரத்தின் பல்வேறு பாகங்களும் பல பயன்களைத் தரவல்லன.

**இலைகள்**

இவற்றைச் சமைத்துக் கீரை வகையைப் போல உண்ணலாம். ஆபிரிக்க நாடுகளான மலாவி, சிம்பாவே, சகோல் ஆகியவற்றில் இலை பச்சையாகவும், உலர வைக்கப்பட்ட இலைகளைப் பொடி செய்தும் உணவாக உண்கின்றனர். நைஜீரியா நாட்டில் பாவோபாப் இலைகளை கூக்கா என்று குறிப்பிடுகிறார்கள். இலைகளிலிருந்து கூக்கா சூப் தயாரித்து உண்கிறார்கள்.

**பழம்**

ஓரேஞ் பழத்தைக் காட்டிலும் கூடுதலான அளவில் விற்றமின் 'சி' நிறைந்தது பாவோபாப் பழம். இதில் உள்ள கல்சியம் சத்து என்பது பசும்பாலைக் காட்டிலும் கூடுதலாக காணப்படுகிறது. குரங்கு-ரொட்டி அல்லது புளிக்கும் பழம் என்று அழைக்கப்படும் இப்பழத்தின் விதை நீக்கிய சதைப் பகுதியை அப்படியே சாப்பிடலாம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜேஸ்வரி சிறீஸ்கந்தராஜா



77. கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிறீஸ்கந்தராஜா 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசமணி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் -சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சிறீஸ்கந்தராஜாவின் பாசமிகு அன்பு மனைவியும் திருமதி யாழினி - மாரியோ, திருமதி மிர்னா - மக்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் யூலியன், சூரியன் ஆகியோரின் பேர்த்தியும் பரமேஸ்வரி (சீதா), குனேஸ்வரி(குனேஸ்), ராதாகிருஸ்ணன் (ராதா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பாலு) மற்றும் தர்மயோகேஸ்வரி (ரூபி), கயிலைநாதன்(ரவி), சிறீஸ்கந்தராஜா (சிறி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**77, கல்லூரி வீதி,**
**நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

(J 7393)
(14,17,18,)

தகவல்:
**க.ராதாகிருஷ்ணன் (சகோதரன்)**

**தொடர்பு : 077 754 9803**

## மரண அறிவித்தல்

தோற்றம்
22
.
10
.
1930



மறைவு
02
.
01
.
2017

### திருமதி சரஸ்வதி இரத்தினசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இரத்தினசிங்கம் 2017.01.02 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நாகமுத்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வழக்கறிஞர் இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்வலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, அருளானந்தம், கமலாம்பிகை ஆகியோரின்அன்பு மைத்துனியும் ரஞ்சிதபவானி, ராஜதுரை, உருத்திரா, காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் பீதாகரன், பாலா, காலஞ்சென்ற சந்திரகுமாரன் மற்றும் சுசீலா, சிறிகரன், ஜீவகரன், சுதர்ஷன், பிரேமா, சர்மா ஆகியோரின் சிறியதாயாரும் வசந்தியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2017.01.05) மாலை 4.00 மணி அளவில் 106/4, ஆனந்தன் வடலிவீதி என்னும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(J 7398)
(14,17,18,)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொடர்பு : 021 321 1393**

## மரண அறிவித்தல்கள்

### இராசநாயகம் சத்தியேஸ்வரன்



திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் சத்தியேஸ்வரன் 03.01.2017 செவ்வாய்க் கிழமை பிரான்ஸில் காலமாகியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் தங்கலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் றோஹினி யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுவாதீஸ்வரன் மற்றும் யோகலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மாலாபூசணி, நல்லநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**140, பூதவிராயர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு**

(C 216)
(12,17,18,)

தகவல்:
**குடும்பத்தினர்.**



### திருமதி இராதா தங்கவேல்

முல்லாத்தனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராதா தங்கவேல் 03.01.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி தங்கவேல் (ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான Dr. தர்மபால் வள்ளிக்கொடி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ராதிகா(செல்வி - கனடா), கோபிநாத் (கொழும்பு), பிரதீபா (சென்னை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பார்த்தீபன், துசீதா, இந்திரஜீத் ஆகியோரின் மாமியாரும் அமரநாத்,அமர்ஜித், அபிஜித், அஸ்விந்தன், கிருஷ்விந்தன், கஜவிந்தன், ஐஸ்வரியா, லக்ஷ்மி, அபிநயலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரஜினி, குலோத்துங்க பாரதி (கனடா), கௌரி ஆகியோரின் சகோதரியும் இராசமலர், இராஜரட்ணம்,கந்தையா, நேசமலர் , அன்னமலர், கனகவேல் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/7394)
(12,17,18,)

தகவல்:
**திரு. கோபிநாத் (மகன்)**

**077 404 5032, 077 253 6080, 077 774 4124**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
**திரு.தர்மகுலசிங்கம் பிரசன்னா**
அவர்களின் அன்புமகள்

### மருஷிகா

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிகூட்டுறவுச் சங்கம்** (J 7395) (22,17,18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
23
04
1942



மறைவு
08
12
2016

### சுப்பிரமணியம் சிவானந்தசோதி

(இளைப்பாறிய கணக்காய்வு உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம்)

உசன், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தசோதி 08.12.2016 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், நேரிலும், உள்நாட்டி லிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசியூடாகவும் அஞ்சலி, ஆறுதல் தெரி வித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், இறுதிக்கிரியைகளை நடத்த உதவியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அன்பு உள்ளங்களிற்கும் எமது ஆத்மார்த்த மான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் 06.01.2017 வெள்ளிக்கிழமை கொழும்பு முகத்துவாரத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளி லும் மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 07.01.2017 சனிக்கிழமை காலை வீட்டிலும் இடம்பெற்று அன்றே நண்பகல் 12.00 மணியளவில் கொழும்பு **தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில்** நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
3A, Kelankaduwa Place, Wellawatte, Colombo - 06.

## கோத்தபாயவுக்கு...

ராஜபக்ச அமைதி காத்தார். இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

பொதுபல சேனா அமைப்பினருடன் எமது அரசிலுள்ள சிலருக்குத் தொடர்புள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். இந்தக் கருத்தை ஊடகங்களுக்குக் கூறப்போவதாக அவர் ஏற்கனவே அந்த அமைப்புக்கு கூறியிருக்கக்கூட வாய்ப்புள்ளது. எனக்குச் சிறுபான்மையினரின் வாக்குகளும் அவசியம். தேர்தலின் போது நான் உங்களுக்கு எதிராகச் சில கருத்துக்களை தற்போது வெளியிடுவேன். அதை நீங்கள் பெரிதுபடுத்தவேண்டாம். மாறாக நீங்களும் எனக்கு எதிராக எதையாவது கூறுங்கள் என்று அவர் கூறியிருக்கலாம். அப்படிப்பட்டவர் தான் மகிந்த.

பொதுபலசேனா அமைப்பின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தான் இருக்கிறார் என்பதை அனைவரும் அறிவார்கள். கடந்த அரசு காலத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு இணங்கியே பலசேனா செயற்பட்டது. ஏன், அளுத்கம கலவரத்தைத் தூண்டிவிட்டது கூட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தான். பொதுபல சேனா அமைப்பினர் அங்கு சென்று கலவரத்துக் காரணமான கூட்டத்தை நடத்தியபோது முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரான அநுர சேனாநாயக்க அதனைத் தடுக்காமல் பாதுகாப்பையே வழங்கினார். இதனால் தான் கலவரமே அங்கு வெடித்தது.

இதுபோன்ற கோத்தாவின் செயற்பாடுகள் தொடர்பில் நான் பலமுறை மகிந்தவுக்கு கூறியிருந்தேன். அவர் கோத்தா மீதான பயத்தின் காரணமாக அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் இருந்து விட்டார். கலவரத்தை ஏற்படுத்தித் தீ வைத்து விட்டுத்தான் தற்போது நல்லவர்கள் போல அவர் பேசுகிறார் - என்றார். (த-5)

## வழிநடத்தல்...

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழு இன்று காலை 10.30 மணிக்கு கூடவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்காக 21 பேரைக் கொண்ட வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் அறிக்கை டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அரசமைப்பு நிர்ணய சபையில் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அன்றைய தினம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவில்லை.

இந்த அறிக்கையை எப்போது முன்வைப்பது உள்ளிட்ட சில முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வழி நடத்தல் குழு இன்றைய தினம் கூடவுள்ளது. இந்தக் குழு நாளைய தினமும் தொடர்ச்சியாக கலந்துரையாடல் நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 9 ஆம், 10 ஆம், 11ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாகக் கூடவுள்ளது. இதன் போது வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை முன்வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5)

## ரவிராஜ்...

அனுப்பி வைக்கு மாறு நீதிமன்றப் பதிவாளரிடம் தாம் கோரியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட கடற்படைப் புலனாய்வு அதிகாரிகள் மூவர் உள்ளிட்ட ஐந்து பேரும், கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் கடந்த மாதம் விடுவிக்கப்பட்டனர். இந்தத் தீர்ப்புக்கு எதிராகமேன்முறையீடுசெய்யவுள்ளதாக, பாதிக்கப்பட்டவர்கள் தரப்புச் சட்டவாளரான எம்.ஏ. சுமந்திரன் ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஜனவரி 25...

சேவைக்குத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார். இருப்பினும் நேற்றுமுன்தினம் இரவு அவரது யாழ்ப்பாணப் பயணம் திடீரென கைவிடப்பட்டது.

இது தொடர்பில் இந்தியன் எக்ஸ்பிறஸ் செய்திச் சேவைக்குத் தகவல் வெளியிட்டுள்ள ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர், கொழும்பில் நடைபெற்ற திட்டமிடப்படாத சந்திப்புக்களின் காரணத்தினால் யாழ்ப்பாணப் பயணம் கைவிடப்பட்டதாகக் குறிப்பிட்டார். எதிர்வரும் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அவர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்வார் என்று அவர் தெரிவித்தார். (த-5)

## வீட்டுக்குள்...

அச்சுவேலிக்கு ஒருவர் கஞ்சா கடத்துவதாகக் கிடைத்த இரகசியத் தகவலின்படி சந்தேகநபர் ஒருவரைப் பின்தொடர்ந்து சென்றோம். அவர் வீட்டுக்குள் சென்றதும் அதிரடியாக அங்கு சென்று சோதனையில் ஈடுபட்டபோது, சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா போதைப் பொருளை மீட்டோம்.

கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணை நிறைவடைந்ததும் அவர் மல்லாகம் நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவார். கஞ்சா போதைப் பொருளும் மன்றில் பாரப்படுத்தப்படும் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,10)

## எந்த முடிவாயினும்...

களையும் உள்வாங்கி மதிப்பளித்து இறுதித் தீர்மானத்தை எடுங்கள். இலங்கை அரசிடம் மிக இறுக்கமான கோரிக்கையாக இதனை நாம் முன்வைக்கின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற இந்திய - இலங்கை அமைச்சு மட்டப் பேச்சுக்களின்போது, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் நிலைப்பாடு தொடர்பில், வடபகுதி மீனவர்கள் சார்பில் புதுடில்லியில் நடைபெற்ற முதலாவது பேச்சில் கலந்து கொண்ட என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

பேச்சின் உள்ளடக்கம் தெளிவாகச் சொல்லப்படவில்லை. சாதகமான பதில் என்பதில் மயக்கம் இருக்கின்றது. இது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பேசியவற்றை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும்.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிப்பதில் எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. என்றாலும் உறுதியான முடிவு ஏதும் எட்டப்படாமல் படகுகளை ஏன் இலங்கை விடுவிக்கிறது என்பது கேள்விக்குரியது. எல்லை தாண்டிய மீன்பிடியினால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். இது தொடர்பில் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் வடக்கு-கிழக்கு மீனவர்களுடன் கலந்தாலோசிக்கவேண்டும் - என்றார். (த-5)

## துப்பாக்கியால்...

வதற்கு ஒழுங்குகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். இந்த ஆண்டில் முதல் காலாண்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். அம்பாந்தோட்டைக் காணிகள் சீனாவுக்கு விற்கப்படவுள்ளதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன. தோல்வியுற்றுள்ள அரசியல்வாதிகள் தமது அரசியல் எழுச்சிக்காகவே இத்தகைய பொய்யான பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

சீனாவுக்கு ஒரு அங்குல நிலம் கூட விற்கப்படாது. மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றி உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக, கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக சீனாவுக்குக் குறிப்பிட்ட காலக் குத்தகை அடிப்படையில் தான் நிலங்கள் வழங்கப்படும்.

வாக்குகளால் மாத்திரம் தான் இந்த அரசைக் கவிழ்க்க முடியும். துப்பாக்கிகளால் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது-என்றார். (த-5)

## கருத்தறியும்...

யின் நீதித்துறையில் நம்பகத் தன்மை இல்லை என்பதை, சிங்கள-முஸ்லிம் சிவில் சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளதை அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. மக்கள் கருத்தறியும் குழுவில் உள்ளடக்கப்பட்டிருந்த சிங்கள - முஸ்லிம் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளதன் ஊடாக இது வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் - மனித உரிமை ஆர்வலர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டது.

சகல பொறிமுறைகளுக்கும் பன்னாட்டுப் பங்களிப்புத் தேவை, போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட காத்திரமான பரிந்துரைகளை அறிக்கை முன்வைத்துள்ளது. இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இல்லை என்பதைச் சிங்கள, முஸ்லிம் சமூகங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

நல்லிணக்கச் செயலணியில் நியமிக்கப்பட்ட 11 பேரில் 6 பேர் சிங்களவர்கள். மூவர் தமிழர்கள். இருவர் முஸ்லிம்கள்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளில் செயலணியின் உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. இது அந்த அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளில் எவற்றையும் எந்தவொரு தரப்பினரும் எதிர்க்கவில்லை. எதிர்க்கருத்துக்கள் முன்வைக்கவில்லை. சிங்கள, முஸ்லிம் தரப்பினரும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே இது மிகவும் வலுவான காத்திரமான அறிக்கை. இலங்கை அரசு நியமித்த ஒரு செயலணியே இவ்வாறு ஓர் அறிக்கையை வெளியிட்டது என்பது கனதியானது என்று தமிழ் சிவில் சமூக மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டனர். (த-5)

## எந்த...

தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு பதவிக்கு வந்தது தொடக்கம், அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. அதேவேளை, சீனா, இந்தியாவுடனான உறவுகளை விரிவாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டு மக்களுக்கு எது சிறந்தது என்ற அடிப்படையில் தான் அரசு முடிவுகளை எடுக்குமே தவிர, வெளிநாட்டு அரசுகளின் உத்தரவுக்கு அடிபணிந்து முடிவுகள் எடுக்கப்படாது.

இந்த நாடு எமது மக்களால், எமது அரசினால் நிர்வகிக்கப்படுகிறது. இலங்கையின் இறைமையை அரசு பாதுகாக்கும்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசின் கொள்கையினால், எல்லா நாடுகளுடனும் சுமுகமான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. எவர் மீதும் நாங்கள் கோபத்தில் இல்லை என்றார். (த-5)

## ரணில்...

இருக்கும் போதே ஆட்சியைக் கவிழ்ப்பது தான் எனது திட்டம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இந்த ஆண்டில் அரசைக் கவிழ்ப்பேன் என்று மகிந்த ராஜபக்ச கூறியிருந்த நிலையில், அடுத்த வாரம் தாம் சுவிற்சர்லாந்து செல்லவுள்ளதாகவும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முடிந்தால் தனது ஆட்சியைக் கவிழ்க்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாதபோது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு நான் ஒன்றும் முதுகில் குத்துபவர் அல்லர்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு செல்லும் வரை காத்திருக்கவேண்டியதில்லை. அவர் இலங்கையில் இருக்கும்போதே ஆட்சியைக் கவிழ்ப்பது தான் எனது திட்டம். தற்போதைய ஆட்சியாளர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் முரடர் குழு, அரசுக்கு எதிராகத் திரும்புகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு உதவியமை தாம் செய்த தவறு என்று இப்போது எல்லோரும் உணரத் தொடங்கியுள்ளனர், என்று குறிப்பிட்டார். (த-5)

## கேலி...

டைய நிபுணர்களை நியமிக்கவில்லை. உள்நாட்டில் உள்ள சிலரையே நியமித்தோம். இவ்வாறு நல்லிணக்கச் செயலணியின் உறுப்பினர்களைக் கேலி செய்துள்ளார், அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லிணக்கச் செயலணியின் பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது பற்றி அமைச்சரவைதான் முடிவெடுக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

'அப்படியாயின் ஏன் இவ்வளவு செலவு செய்து செயலணியை அமைத்தீர்கள்?' என்று இதன்போது செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், சிறப்பு ஞானமுடைய அல்லது உலகளாவிய ரீதியிலான நிபுணர்களை நாம் செயலணிக்கு நியமிக்கவில்லை. உள்நாட்டில் உள்ள சிலரையே நியமித்தோம். அதன்படி அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அதிலுள்ள விடயங்களை ஏற்பதா ? இல்லையா என்பதை நாம்தான் தீர்மானிப்போம் - என்றார். (த-5)

## செயலணியின்...

"சில அமைப்புக்களுக்கும், நிறுவனங்களுக்கும் பரிந்துரைகளை முன்வைக்கமுடியும். உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கப்போவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டிலேயே அரசு இருக்கின்றது. தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனைகளை வெளிநாட்டு நிபுணர்கள் வழங்க முடியும். ஆனால் விசாரணைகளில் உள்நாட்டு நீதிபதிகளே பங்குகொள்வார்கள்" என்றார் அவர்.

"நல்லிணக்க செயலணி போன்று பல அறிக்கைகள் உள்ளன. சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளில் உள்ள விடயங்களை ஆராய தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அதிலுள்ள எல்லாவற்றையும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. அதில் என்னென்ன விடயங்களை அனுமதிக்க முடியும் என்பதை அமைச்சரவையே தீர்மானிக்கும். வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதியோம் என்பதை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமும் தெரிவித்தோம். அதனை அவரும் ஏற்றுக்கொண்டார்" என்று ராஜித மேலும் குறிப்பிட்டார்.

ஆனால், வடக்கு கிழக்கு மக்கள் அரசிலும் அரச நிறுவனங்களிலும் பெருமளவில் அவ நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என்ப தாலும் படையினர் வெளிநாட்டுப் பங்களிப்பை முற்றாக எதிர்க்கிறார்கள் என்பதாலும் ஐ.நா. முன்வைத்த கலப்புப் பொறிமுறை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஐ.நா. தீர்மானம் கூறுகின்ற வகையில் ஆலோசனை, நிபுணத்துவ சேவை வழங்குதல், நீதிபதிகள், விசாரணையா ஆகிய நான்கு துறைகளிலும் வெளி டவர்களின் பங்களிப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் -

நல்லிணக்கப் பொறிமுறை பற்றிய கல லோசனைச் செயலணியின் பரிந்து குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடு முழுவதும்...

ஊவா மற்றும் வடமத்திய ஆகிய மாகா களிலும் அம் பாந்தோட்டை மாவட் மழையை எதிர்பார்க்கலாம் என்றும் தி களம் மேலும் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகா களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் ஆங்காங்கே பிற் வேளைகளில் மழையோ அல்லது இடி கூடிய மழையோ பெய்யக்கூடும் எ தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 5

**இளைஞர் வி.க. கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் 3ஆம் சுற்று ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஐக்கிய அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியை எதிர்த்து விளான் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து சுப்பர்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத்தில் யாழ். லீக் ஆட்டங்கள்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது.

**குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டம்**

குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று முதல் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளன. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணியும் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மோதவுள்ளன. (ம-23-108-422)



# எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மேரிஸ், வளர்மதி வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 5

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ், அச்செழு வளர்மதி அணிகள் வெற்றிபெற்றன.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதியது.



ஆட்டத்தின் முழு நேரமும் தனித்து ஆதிக்கம் செலுத்திய சென். மேரிஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஜக்சன், ரெக்னோ இருவரும் தலா 2 கோல்களையும், யூட், மதி, தங்கன் மூவரும் தலா ஓர் கோலையும் பதிவுசெய்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற பிறிதொரு ஆட்டத்தில், அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு பாரதி அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்ய இயலவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் அச்செழு வளர்மதி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பீற்றர், அன்ரனிஸ் அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 5

பருத்தித்துறை ஐக்கியத்தின் கால்பந்தாட்டத் தொடரில் பொற்பதி சென். பீற்றர் மற்றும் மணற்காடு சென். அன்ரனிஸ் பி அணிகள் என்பன அசத்தல் வெற்றிபெற்றன.

ஐக்கியத்தின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குடத்தனை பொற்பதி சென். பீற்றர் விளையாட்டுக் கழக அணியும் கொற்றாவத்தை சிவானந்தா அணியும் மோதின. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் முதற் கோலைப் பதிவுசெய்தார் பீற்றரின் வீரர் தினேஸ். அடுத்த நிமிடத்திலேயே பதிலடி கொடுத்தது சிவானந்தா. 1:1 என்ற நிலையில் முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியின் 23 ஆவது நிமிடத்தில் பீற்றரின் கோல் கணக்கை 2 ஆக உயர்த்தினார் சுதர்சன். அடுத்த சில நிமிடங்களில் அசோக் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சென். பீற்றர்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் 'பி' அணியும் வல்வெட்டி கருணாகரன் அணியும் மோதின. ஆட்டத்தில் தனித்து ஆதிக்கம் செலுத்தி அன்ரனிஸ் அணி, றெயினோல்ட்டின் ஹற்றிக் கோலுடன் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)

## துடுப்பாட்டப் பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், ஜன. 5

வடமாகாண ரீதியாக சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் வீராங்கனைகளை இனங்காணும் பயிற்சி முகாம் இன்று நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் காலையும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மாலையும் குறித்த முகாம் இடம்பெறவுள்ளது. வளவாளராக இலங்கை கிரிக்கெட்டின் தேசிய, மாவட்ட், மாகாண துடுப்பாட்ட பயிற்றுநர்களின் முகாமையாளர் கேமால் மெண்டிஸ் மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் இணைப் பாளர் சம்பத் கெட்டியாரச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

## ஈகிள்ஸ் அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈகிள்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தொடரை நடத்தி வருகிறது. குறித்த கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதியது. இதில் ஈகிள்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## சென். நீக்கிலஸ் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 5

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதல் அரையிறுதியில் நாவாந்துறை சென். நீக்கிலஸை எதிர்த்து சென். சேவியர் மோதியது.

முதல் இருபது நிமிடங்கள் வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 24 ஆவது நிமிடத்தில் கலிஸ்ரனின் உதவியுடன் முதல் கோலைப் பதிவுசெய்தது நீக்கிலஸ். நீக்கிலஸின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியில் சிறந்த வாய்ப்புக்கள் இரண்டைத் தவறவிட்டது சென். சேவியர். இதுவும் அந்த அணிக்கு மேலும் பின்னடைவைக் கொடுத்தது. 52 ஆவது நிமிடத்தில் அஜந்தனின் உதவியுடன் . நீக்கிலஸின் இரண்டாவது கோல் பதிவானது.

மாற்றங்கள் நிகழாத நிலையில் முடிவில் சென். நீக்கிலஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக கலிஸ்ரன் தெரிவு செய்யப்பட்டார். (ம-108-422)



## பயிற்சியாளரானார் பாலாஜி

ஐ.பி.எல். தொடரில் விளையாடி வரும் கொல்கத்தா அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் பாலாஜி.
கொல்கத்தா அணிக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பாலாஜி விளையாடியுள்ளார். 2012 ஆம் ஆண்டு கொல்கத்தா கிண்ணம் வெல்ல அவர் முக்கிய பங்காற்றினார். தற்போது பாலாஜி தமிழ்நாட்டு அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராகவும் செயற்படுகிறார். இதனையடுத்து கொல்கத்தா அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக அவர் நியமிக்கப்பட்டார்.
கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக மகிழ்ச்சியுடன் விளையாடினேன். தற்போது மீண்டும் அந்த அணிக்கு பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது, பெருமையளிக்கிறது. எனது பணியை சிறந்த முறையில் செயற்படுத்துவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று பாலாஜி தெரிவித்தார். (ம)




# தலைமைப் பொறுப்பிலிருந்து திடீரென விலகினார் டோனி



இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் தலைவராக இருந்த டோனி, நேற்று குறித்த பதவிகளில் இருந்து விலகுகிறார் என்று அறிவித்தார்.
தலைமைத்துவத்தில் இருந்து விலகுகின்ற போதிலும், இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் வீரராகவும், இலக்குக் காப்பாளராகவும் அணியில் தொடர தயாராக உள்ளார் என்றும் தெரிவித்தார். இங்கிலாந்து அணி மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங் கள் கொண்ட தொடர்களில் விளையாட இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. குறித்த தொடருக்கான அணி நாளை தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் டோனியிடமிருந்து இந்த அறிவிப்பு வெளியானது.
டோனி விலகல் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமைச் செயலதிகாரி ராகுல் ஜோஹ்ரி, 'ஒவ்வொரு இந்திய ரசிகர் மற் றும் இந் திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சார்பாக இந்திய அணியின் தலைவராக டோனி ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். டோனி யின் தலைமையில் இந்திய அணி புதிய உச்சங்களை எட்டியது, இவரது சாதனைகள் இந்திய கிரிக்கெட்டில் எந்நாளும் நீக்கமற நிறைந்திருக்கும்' என்றார்.
ரி-20 உலகக்கிண்ணம், மினி உலகக்கிண்ணம், உலகக்கிண்ணம் என்று அத்தனை உலகக் கிண்ணங்களையும் வென்ற ஒரே தலைவராக இன்று வரை டோனியே உள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது.
(ம)

## சுருட்டும் முனைப்பில் தென்னாபிரிக்கா

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெறக் கூடிய சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்தியது தென்னாபிரிக்கா.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 392 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எல்கர் 129 ஓட்டங்களையும், குயின்டன் 101 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் லகிரு குமார 6 இலக்குகளையும், கேரத், லக்மல் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் பிளன்டர், ரபாடா இருவரும் தலா 4 இலக்குகளையும், மகாராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்கா இரண்டாம் நாள் முடிவில் இலக் குச் சரிவில்லலாமல் 35 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. குக் 15 ஓட்டங்களுடனும் எல்கர் 19 ஓட்டங்களுட னும் நேற்றுக் களமிறங்கினர். 224-7 என்ற நிலை யில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்கா. முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை தென்னாபிரிக்காவுக்கு கை கொடுக்க இலங்கைக்கு இலக்காக 507 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. கருணாரத்ன 6 ஓட்டங்களுடனும், மெண்டிஸ் 4 ஓட்டங்களுடனும் ஏமாற்றினர். நாள் முடிவில் இலங்கை 130-4 என்றுள்ளது. மத்தியூஸ் 29 ஓட்டங்களுடனும் சந்திமல் 28 ஓட்டங்களுட னும் களத்தில் உள்ளனர். (ம)

## கிரிக்கெட் சபையின் தலைமைக்கு என்னிடம் தகுதி இல்லை

### கங்குலி வெளிப்படை



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமைப் பதவியை ஏற்பதற்கு தன்னிடம் தகுதியும்-அனுபவமும் இல்லை என்று தெரிவித்தார் கங்குலி.
இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இருக்கும் வகையில் புதிய நிர்வாகிகள் நடந்துகொள்ள வேண்டும் என்று கடந்த ஜூலை மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவுக்கு மதிப்பளிக்காமல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகள் சில முடிவுகளை தன்னிச்சையாக எடுத்தனர், செயற்பட்டனர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்களும் இந்தியக் கிரிக்கெட்டால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த அத்துமீறல்களை சுட்டிக்காட்டிய முறைப்பாடு தொடர்பான விசாரணை கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. மன்றின் உத்தரவை பின்பற்றத் தவறிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் அனுராக் தாக்கூர், செயலாளர் அஜய் சிர்கே ஆகியோரை குறித்த பதவிகளில் இருந்து நீக்கி [illegible]
என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



## இரண்டாவது ரி-20 நாளை ஆரம்பம்

நியூசிலாந்து- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. இதனால் நாளை ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலைக்கு பங்களாதேஷ் தள்ளப்பட்டுள்ளது. மாறாக நாளைய ஆட்டத்திலும் நியூசிலாந்து வெற்றிபெற்றால் இறுதி ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை கொண்டு செல்வது நியூ சிலாந்து என்றவாறாகவே அமையும். எனவே பங்களாதேஷைப் பொறுத்தமட்டில் வாழ்வா? சாவா? நிலையில் நாளை ஆட்டத்தை அந்த அணி எதிர்கொள்கிறது. (ம)

## உடல். தகுதியில் முழுத் திருப்தி

### சாய்னா தெரிவிப்பு

காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்ததன் பின்னர் எனது உடல் தகுதியில் தற்போது முழுத் திருப்தியுடன் உள்ளேன் என்று- தெரிவித்தார் இந்திய நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால்.
ரியோ ஒலிம்பிக் தொடரில் ஏற்பட்ட காயம் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்து ஓய்விலிருந்தேன். காயத்திலிருந்து மீண்டு சில தொடர்களில் விளையாடிய போதிலும் என்னால் எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பாகச் செயற்பட இயலவில்லை. வலிகள் தொடர்ந்தும் இருந்தன. தற்போது அவை இல்லை. முழு உடல் தகுதியுடன் உள்ளேன் என்று நம்புகின்றேன். இந்த மாதத்தின் இறுதியில் நடைபெறவுள்ள மலேசியத் தொடரில் களமிறங்க முடிவு செய்துள்ளேன். நடப்பு வருடத்தில் தொடர்ச்சியான வெற்றிகளைக் குவிப்பதே தற்போதைக்கு எனது நோக்கம் என்று -சாய்னா மேலும் தெரிவித்தார். (ம)



## மிக முக்கிய அறிவித்தல்

# பான்சி டிசைன் சாறிகள்

## 90% கழிவு விலையில்

கடைசி 2 தினங்கள் மட்டும் ஜனவரி 6 மற்றும் 7 ஆம் திகதிகளில்

**இடம் : மயிலூரான் திருமண மண்டபம்**

(முருகன் கோயில் அருகில்) நல்லூர், யாழ்ப்பாணம்.

**நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை**

முக்கியமான விஷேட கழிவு விலையில்

**பான்சி டிசைனர் சாறிகள்**

**ரூபா 1000 /= ரூபா 2000/ = மட்டுமே**

**பான்சி டிசைனர் சாறிகள்**

இங்கு விற்பனைக்குள்ளன.

யாழ் மங்கையர்கள்.

**ரூபா 5000 /= தொடக்கம் ரூபா 10, 000/ =**

மதிப்புள்ள சாறிகளை

எந்த வித மனக்கலக்கமும் இல்லாமல்

**ரூபா 1000 /= தொடக்கம் ரூபா 2000/ =**

ரூபாவிற்கு கொள்வனவு செய்யலாம்.

சர்வதேச சாறி மார்க்கட்டில் விலை சரிவு ஏற்பட்டுள்ளது . இந்த சாறி மிகக் கழிவு விலையில் கொடுப்பதற்கான காரணம் **பான்சி டிசைன் சாறிகளை**

மிக நீண்ட காலத்துக்கு ஸ்ரோரில் வைக்க இயலாது.

(சி.27564) (13.18)

இதுவரையில் யாழ்ப்பாணம் வாழ் மங்கையர்கள் கண்டு இல்லாத

**பான்சி டிசைனர் சாறிகளைக்** கொள்வனவு செய்யலாம்

அனுமதி இலவசம். தொலைபேசி: 077 607 0459 Sponsor: S&G International Agency (Pvt) Ltd.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.